கவிஞன் ஷெல்லி எழுதிய

செஞ்சி

நாடகம்

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.

வெ. சு. அருணன்

தமிழாக்கம்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை

இ92 — 246

கவிஞன் ஷெல்லி எழுதிய

செஞ்சி

நாடகம்

5 92 — A
354

தமிழாக்கம்:

வெ. சு. அருணன்

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை, திருச்சி

No. 14 - Cenci - Dramatic Tragedy

Copyright

First Edition - Nov. 1946

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
வரிசை எண்: 236
நன்கொடை எண்: 236

Price Rs. 2-8-0

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

STAR PUBLICATIONS
PALAKARAI, TRICHINOPOLY

Printed at the South India Press, Karaikudi
For Star Publications, P. I. C. Ty. 9. A. (Q. H.) 1000 Copies.

Appreciation : By V. R. M. Chettiar, B. A.

Shelley is an exceptional poet-, almost an Angel among poets.

Self-schooled in racy flashes of richer intuition, his poetic Genius grows and grows more and more spontaneous, cheerfully creating certain sublime works of poetic fire. His diction, both of prose and poetry is an effortless expression of higher emotional documents of enduring reminiscences. He is pre-eminently a lyric poet, and the lyric heights are bathed in his heart's heaving storms, unveiling the naked untameable Seraph of Emotion happily emerging from incensed imagery. Often a poet hidden in the light of thought, his rare idioms summon a radiant Rainbow, or a merry cluster of lightnings. Our young poet is the King of Fancy, hounding hobgoblins in winged woven shadows of the Ethereal and the Imperishable in Art or Poetry.

In this rare dramtic tragedy of the Cenci, our poet has a tangible grasp of the human life in assorted detail, faithfully following the model of Calderon, the Spanish poet and dramatist whose genius for dressing the tragedy is almost unrivalled. Shelley has succeeded indeed in this tragic composition.

The story of the tragedy is rather stinky: Beatrice Cenci, the Girl of Grace is beautiful and sublime as a peerless lily of purity and tenderness: her weird eyes are lavish songs of rapture in which Life's Lyrics swim as winged enchantments of dreamy paper-boats. She cannot brook her father's incest: hence the solemn necessity for contriving her father's murder. Blood hotly sprays over

bitter incidents, and solves perhaps the tenser complications of Life's knotty naughty problems indeed. In this tragedy, every type of sham is exposed : strange hypocrisy dances on the stage, but culminates in self-condemnation.

Sri V. S. Arunan has given here a free rendering in Tamil prose of the dramatic tragedy: he has carefully recaptured the poetic fragrance of the English Original. This translation is an enduring service to the growth of Tamil Literature along the lines of richer golden renaissance. I wish the author a more glorious future in his further literary experiments

★

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகாநந்த சபா.

முன்னுரை

I

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்,"

என்று என்றோ பாடிப்போனார் புதுமைக்கவிஞர் பாரதி. அதன் பிரதிபலிப்பாக பல ஆங்கில நூல்கள் தமிழில் வெளிவந்தன. சிறுவர்களுக்கான கதைகளும், சின்னஞ் சிறு காதல் கதைகளும் நவீனங்களுமே அவற்றில் பெரும்பான்மையானவை. பிறபாஷைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட இலக்கிய நூல்களின் எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணிவிடலாம். இத்தகைய குறையை நிவர்த்திக்க வேண்டுமென்பதே என் ஆர்வம். உயர்ந்த ஆங்கில நூல்களை தமிழிலே உருவாக்குவதே என் பிர தான அபிலாஷை. அதன் விளைவே 'ஷெஞ்ஸி'யின் தமி ழாக்கம். தமிழன்னையின் ஆசிபெற்று, புதுமைப் போர் வையிலே புகுந்து, இலக்கியப் பூஞ்சோலையிலே விளங்கப் போகிறது இந்நூல் என்று என் நண்பர்கள் பலரும் ஆசி கூறுகின்றனர். அவர்களது ஆசியும், இறைவனின் பேரரு ளும் தமிழுலகை செழிக்கச் செய்யட்டும் என்று விழை கிறது என் சிறுமையுள்ளம்.

II

இந்நாடகத்தின் நூலாசிரியர் ஷெல்லி. இவரது முழுப் பெயர் பெர்ஸி பிஷ்ஷி ஷெல்லி. இவரது பிறப்பிடம் ஸஸக்ஸ் மாகாணத்தில் உள்ள பீல்ட்பிளேஸ் என்ப தாகும். 1792-ம் வருஷம் ஆகஸ்ட் நான்காம் தேதியில் பிறந்த இவர் சுயேச்சையான எண்ணங்களைக் கொண்ட வர்; பிரபுத்துவமான குடும்பத்திலே பிறந்தவர்.

ஷெல்லியின் பள்ளிவாழ்வே ஒரு பிரகாசமான குழப்பம். உபாத்தியாயர்களைக் கண்டாலே வெறுப்பு அவருக்கு. வெட்கமும் நுண்ணறிவும் கொண்டவர் அவர். விளையாட்டிலே ஆர்வமற்றவர். அவரது கலாசாலை வாழ்வுகூட குறுகியதுதான். ஆறே மாதங்கள் கல்லூரியில் பயின்றார். அப்பொழுதே தன் பெயரை வெளியிடாமல் புரட்சிகரமான ஒரு நூலை எழுதி வெளியிட்டார். அதன் விளைவாக அவர் கலாசாலையிலிருந்து நீக்கப்பட்டார்.

துயரக் கடலை முற்றும் கண்டவர் ஷெல்லி. அவரது காதல்பாதையும் துயரம் கொண்டதே. தனக்குப் பிடித்த நங்கையுடன் எங்கோ ஓடி அவளை மணந்து கொண்டார்.

ஷெல்லியின் வாழ்வு குறுகியது; ஆனால் அவர் சம்பாதித்த புகழ் பரந்தது. 'கவிஞர்களின் தேவதை' என்று அவரை அழைக்கலாம். 'நிரந்தர கீதம்' அவரது ஜீவன். அவரது கவிதாசிந்தனைகள் தெய்வீகமானவை. அவரது பாடலின் ஒவ்வொரு சொல்லும் உணர்ச்சியை வெளியிடும். 'பொங்கியெழும் அக்கினியுணர்ச்சிகள்' கருத்திலே கிளர்ந்தெழும். சித்தரிக்க இயலாத உன்னத லாகவங்கள் அவர் நடையிலே பரிமளிக்கும். 'மனித உருவிலே ஜனித்த தேவ கவிஞன்' என்ற புகழுரைகூட அவருக்கு கீழ்த்தரமானது தான். கற்பனைகளை கையாளுவதில் அவரை யாரும் மிஞ்சிவிட முடியாது. இருதய சக்தியை இன்னிசையிலே இயைத்து மனதை வசிகரிப்பார்.

கவிஞர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள், ஜீவனை சிருஷ்டிக்கிறான் நான்முகன். கவியை சிருஷ்டிக்கிறான் கவிஞன். அமரத்துவத்தை அளிக்கின்றன கவிஞனின் சிருஷ்டிகள். பிரம்மனின் சடல சிருஷ்டிகள் மண்ணுலகிலே மாண்டுவிடக் கூடியவை. பிரம்மனைவிட கவிஞனே மேலான சிருஷ்டிகர்த்தா'—இதற்கு எடுத்துக் காட்டாக நிற்பவர் ஷெல்லி.

III

1819-ம் ஆண்டில் ரோம் நகரில் இயன்ற நாடகம் 'செஞ்ஸி' 1599-ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்களைக் கொண்டு இது இயற்றப்பட்டது. போப்பாண்டவருக்கு செஞ்ஸியின் மீது இருந்த பிரியத்தால், செஞ்ஸிக்கு பாதகம் விளைவித்த எவரையும் தண்டித்து விடுகிறார். இந்த அநீதியைப் படம்பிடித்துக் காட்டுகிறது இந்நாடகம். உணர்ச்சி வேகம் ததும்பும் உயரிய நடை இதன் நேர்மையான அலங்காரம். இதில் பயங்கரச் செயல்கள் புகுத்தப்பட்டுள்ளன. சோகம் கனிந்து புரளுகிறது. தர்க்கங்கள் உலக நியதிகளை விளக்கிக் காட்டுகின்றன.

'இந்நாடகம் மனித சமூகத்திற்குப் போதிக்கும் தத்துவமென்ன ?' என்று பலர் கேட்கலாம். கொடிய பாதகனைக் காட்சியளிக்கிறான் செஞ்ஸி. மாற்றாந்தாயாக இருந்தாலும், பியாட்ரைஸுடன் சேர்ந்து சதி செய்கிறாள் லூக்ரிஷியா. நற்குண நிலையமெனப் புகழப்பட்டாலும், பிதாவையே தீர்த்துவிட முற்படுகிறாள் பியாட்ரைஸ். நீதியின் வரம்பை உணராதவராகத் தோற்றமளிக்கிறார் போப்பாண்டவர். காதலின் பொருட்டு எதையும் செய்யத் துணிகிறான் ஆர்சினோ. மன்னிப்பளிக்கும் இளகிய மனப்பான்மையுடைய ஜீவான்மாவாகப் போராடுகிறார் கார்டினல் காமில்லோ. கொலையாளிகளும் மனித இருதயம் படைத்தவர்களே என்பதை எடுத்துக் காட்டி நிற்கிறான் மார்ஸியா. நீதி நிலையத்தின் அநீதியை வெட்டவெளிச்சமாக்குகிறது அவன் விசாரணை.

'பழிக்குப்பழி வாங்கும் மனோபாவம், பயங்கரமானது. பொறுமைக்குப் புகலிடமான பெண்ணும் மிதமான கொடுமைகளைப் பொறுதவளாகி எதையும் செய்யத் துணிந்துவிடுகிறாள். பணத்தாசை கொண்ட நீதிநிலையத்தின் தீர்ப்பு அநீதியே. இளகிய மனப்பான்மை கொண்டவர்கள், பிறர்க்குச்செய்யப்படும் கொடுமைகளை

எதிர்த்து இறுதிவரையில் போராடும் குணம் படைத்தவர்கள். மதத்தின் பெயரால் செய்யப்படும் கொடுமைகள் கணக்கிலடங்கா. கொலையாளியும் காருண்யம், தயை, பிறரைக்காக்கும் மனோபாவம் அனைத்தும் கொண்டவன். உண்மையை நா மறைக்க முயன்றாலும், அம்முயற்சி வெற்றி பெறுவதில்லை. இருதயப்போக்கின் துணிகரத்தில் இமயமலையும் துச்சமாகிவிடும். — இத்தகைய நேரிய தத்துவங்களை வெளிப்படுத்துகிறது இந்நாடகம்.

IV

இந்நாடக அமைப்பும் உணர்ச்சியுமே ஜீவனை வெளிப் படுத்தக் கூடியவை. கற்பனை கடவுளைப் போன்றது. சித்தரிப்பு ஜீவகளை கொண்டது. உயர்வின் நிழலுக்கு அவை உதவுகின்றன. 'எல்லாத் துறைகளிலும் அதி ஜாக்கிரதையாக எழுதியிருக்கிறேன். அதி உன்னதமும் பெரிய சொற்களுமில்லாமல் எழுதியிருக்கிறேன். இரக்க மனப்பான்மையோடு மக்களை இழுத்துச் செல்ல, அவர்களுக்குப் பழக்கமான நடையை உபயோகிக்க வேண்டும் என்று தற்கால விமரிசகர்கள் கூறுகிறார்கள். இதை நான் ஆமோதிக்கிறேன்' என்கிறார் ஷெல்லி. மனிதர்களுக்கு சகஜமான பொது நடையிலே செல்கிறது இந்நாடகம். வெற்றியைப் பற்றிக் கவலையின்றி விஷயத்தைப் பண்படுத்துவதில் கவனம் செலுத்தி யிருக்கிறார் ஷெல்லி.

இந்நாடகத்தை எழுதுமுன்பாக, இதன் அடிப் படைகளை ஆராய்ந்ததாகச் சொல்கிறார் ஷெல்லி. பியாட் ரைஸின் உருவப்படத்தைப் பற்றி அவர் பெரிய விஸ்தரிப்பை வெளியிடுகிறார். அவளது அங்கங்களைக் கூட வர்ணித்து விடுகிறார். 'பியாட்ரைஸ் ஒரு பேரழகி: பெருந்தன்மையும் சாந்தமும் மன உறுதியும் அவளிடம்

உண்டு' என்பதை அவ்விரிவான விஸ்தரிப்பு விளக்குகிறது.

செஞ்ஸி மாளிகை ரோம் நகரில் ஏதோ ஒரு மூலையில் இருக்கிறது. யூதர்களின் இருப்பிடத்தை அடுத்தாற் போலிருக்கிறது. இன்று பாழடைந்து கிடக்கும் அம் மாளிகை மயிர்க் கூச்சலெடுக்கும் இந்நாடக சம்பவங்கள் நடைபெற்ற தளமாக இருந்தது. உன்னத வேலைப் பாடுகள் நிறைந்து பழைய இதாலிய நாகரீகப்பாணியில் விளங்குகிறது இம்மாளிகை.

பேட்ரல்லா மாளிகை இந்நாடகத்தின் மற்ளெரு தளம். அதைக் குறித்து விபரங்கள் எதுவும் தெரிய வில்லை என்று ஷெல்லி குறிப்பிட்டுள்ளார்.

V

ஷெல்லி தெய்வீகத்தின் அப்பழுக்கற்ற கவிஞர். மென்மையான மனித எண்ணங்களை லாகவமான சொற்களிலே சித்தரித்து விடுகிருர். அவரது நுண்ணறிவு கற்பனைகளைக் கையாளுவதில் மின்னல் வேகத்தில் முன்னேறியுள்ளது. 'நம் கவிஞரின் ஆவேச உணர்ச்சிகள் காற்றிலிருந்தும் வெளிச்சத்திலிருந்தும் பிறந்தன' என்று திரு. வி. ஆர். எம். செட்டியார் அவர்கள் எழுதியுள்ளார். செட்டியார் அவர்களைத் தமிழுலகு நன்கு அறியும். ஷெல்லியின் உன்னத நூல்களைப் பண்பட ஆராய்ந்து 'என் ஷெல்லி' என்ற ஆங்கில நூலை வெளியிட்டுப் புகழ் பெற்றவர் அவர். அதிலே காணப்படும் ஒரு சிறு குறிப்பு பின்வருமாறு : "ஷெல்லியின் எண்ணங்கள் சிறகு முளைத்த விதைகள் ! அவரது எண்ணங்கள் தெளிக்கப் பட்டவை. சிதறிக்கிடப்பவையல்ல. கனவு காண்போரின் மன்னவன் ஷெல்லி. அவரது கனவுகள் மகோன்னத மானவை. தங்க வண்டுகளைப்போல் குவிகின்றன அவரது எண்ணங்கள். உன்னத அபூர்வ எண்ணங்

களான 'மெல்லிய நாலிழை' களைச்சுற்றும் 'கூண்டுப் புழு' ஷெல்லி. வெகு சுலபமாக அவர் நக்ஷத்திரங்களை மலர்களாக்குகிறார். மலர்களை நக்ஷத்திரங்களாக்குகிறார். அவரது 'கவிதையமைப்பு' இசையருவியாகும். கருத்து, சொற்களைத் தெரிந்தெடுக்கிறது. உச்சரிப்பிலே, மென்மை, இனிமை, அனைத்தும் உடனே கலந்துவிடு கின்றன. காற்றிலே மிதக்கும், கவிதை உன்னத பிரதி பலிப்பைக்கொண்ட கற்பனையிலே மகத்தானதாகவும் விரிவானதாகவும் மாறிவிடுகிறது."

VI

ஸ்ரீமதி ஷெல்லி இந்நாடகத்தைக் குறித்து எழுதி யுள்ள குறிப்பு பல விபரங்களைத் தருகிறது. இந்நாட கத்தை இயற்றியபொழுது ஷெல்லிக்கு வயது இருபத் தாறு. முதலாவது சார்லஸின் சரிதத்தை ஆதாரமாகக் கொண்டு 'சோக நாடகத்தை' இயற்ற அவர் எண்ணி யிருந்தார். *1819*-ல் அவரது நண்பர் ஒருவர் 'செஞ்ஸி' யின் கதையை அவரிடம் கூறினார். கோலன்ரு டோரியா மாளிகைகளையும், பியாட்ரைஸின் ஓவியத்தையும் கண் டார் ஷெல்லி. உடனே 'செஞ்ஸி கதை'யை நாடகமாக் கத் தீர்மானித்தார். பிணமும் நடுங்கும் சக்திகளைப் புகுத்தி தன் முயற்சியைத் துவங்கினார். காட்சிகளின் அமைப்பைக் குறித்து மிக நுட்பமாக ஆழ்ந்து யோசித் தார். வில்லா வால்கோவானோ என்ற இல்லத்தில் உரு வாயிற்றும் இந்நாடகம். அவர் வீட்டிற்கு அருகாமை யிலிருந்த நங்கை ஒருத்தியின் உதவியும் இவ்வாக்க வேலை யில் சேர்ந்தது. 'கால்டிரனி'ன் நூல்களைப் படித்துத் தன் உள்ளத்தைப் பண்படுத்திக் கொண்டார், ஷெல்லி.

'செஞ்ஸி' நடிக்கப்பட வேண்டும் என்பது ஷெல்லி யின் அவா. மிஸ் ஓநீல் என்னும் நடிகை பியாட்ரைஸாக நடிப்பது உசிதம் என்று அவர் கருதினார். அவரது முயற் சிகள் அப்பொழுது பலியாமல் போகவே, புத்தக உருவில்

லெக்ஹார்ண் என்னுமிடத்தில் நாடகத்தை வெளியிட்டார். வெகு துரிதமாகவே பிரபலமடைந்தது 'செஞ்ஸி' நாடகம்.

'பியாட்ரை'ஸின் பாகமே நாடகத்தின் முக்கிய பாத்திரம். கோரப்போராட்டத்தில் துவங்கி, அநீதிகளை ருசித்து, பயங்கரத்தீர்மானத்தில் புகுந்து, பொறுமையுடனும் சாந்தத்துடனும் இன்னல்களை அனுபவிக்கும் மனோபாவத்தில் முடிகிறது இப்பாத்திரம். இந்நாடகத்தின் மிகச் சிறந்த பகுதி ஐந்தாவது அங்கமாகும். படிப்பவர்களின் மனதை இளக்கிவிடுகிறது இப்பகுதி. பியாட்ரைஸின் உணர்ச்சிகள் வெளியாகும் நடை, இருதயத்தைத் தொட்டு, உள்ளத்தை உருக்குகிறது.

' இருபங்கு வெற்றியை ஷெல்லிக்கு அளித்தது 'செஞ்ஸி' நாடகம். நாடகத்தின் கதாபாத்திரங்கள் இயற்கையாகவே பேசுகின்றன. பேச்சிலேயே, நடிப்பின் சிகரத்தையும் கருத்தின் கிளர்ச்சியையும் காட்டிவிடுகிறது.

VII

இவ்வுன்னத இலக்கிய நாடகத்தைத் தமிழாக்க என்னைத் தூண்டியவர் திரு. வி. ஆர். எம். செட்டியார் அவர்கள். 'ஷெல்லியின்' இலக்கியங்கள் அனைத்தையும் தமிழாக்கிவிட வேண்டும் என்ற ஆசையை என் உள்ளத்திலே எழுப்பியவர் அவரே. அவருக்கு என் இதயபூர்வமான நன்றி உரித்தாகும். தமிழன்னையின் கொடி மேலோங்கி ஆரோகணிக்க ஆண்டவன் அருளுவாராக!

15—11—1946. வெ. சு. அருணன்.

நாடக பாத்திரங்கள்

பிரான்ஸஸ்கோ செஞ்ஸி — பிரபு

கியாகோமா
பெர்னர்டோ } — பிரபுவின் புதல்வர்கள்

கார்டினல் — காமில்லோ

ஆர்சிநோ

சேவல்லா — போப்பாண்டவரின் பிரதிநிதி

ஒலிம்பியா
மார்ஸியா } — கொலையாளிகள்

அந்தேரா — செஞ்ஸியின் வேலையாள்

லூக்ரிஷியா — செஞ்ஸியின் மனைவி -(அவன் குழந்தைகளுக்கு மாற்றாந்தாய்)

பியாட்ரைஸ் — செஞ்ஸியின் புதல்வி

காட்சி: முக்கியமாக ரோமில் நிகழ்கிறது. நான்காம் அங்கத்தில் அபனைன்ஸ் மலையிலுள்ள பேட்ரல்லா மாளிகைக்கு மாறுகிறது.

காலம்: எட்டாவது கிளமெண்ட் போப்பாண்டவராக இருந்த காலம்.

அ. க. சண்முகம் நூலகம்

செஞ்ஸி

அங்கம்—1 காட்சி—1

[செஞ்ஸி மாளிகையில் ஒரு பகுதி. செஞ்ஸி பிரபுவும், கார்டினல் காமில்லோவும் வருகின்றனர்.]

காமில்லோ : பினிஷியன் வாயிலிற்கப்பால் உள்ள மிட்டாவை குருமகானுக்கு அளித்துவிட நீர் இணங்கினல், கொலையைப்பற்றிய விஷயமே மறைக்கப்பட்டுவிடும். அவரை இம்முடிபிற்குக் கொண்டுவர, கார்டினல்களிடம் எனக்குள்ள செல்வாக்குமுழுவதையும் உபயோகிக்கவேண்டியிருந்தது. உங்கள் செல்வத்தால் பயங்கரமான பாபங்களை நீர் வாங்கிவிட்டதாக அவர் கூறினர். உங்களுடையதைப்போன்ற குற்றங்களை ஓரிரு முறை ராஜி செய்துகொள்வதால் மாதாகோவில் செல்வம்மிக்கதாகிவிடுகிறது. பச்சாதாபப்பட்டு வாழக்கூடிய ஜீவான்மா நரகத்தை அடைவது தாமதிக்கப்படும். ஆனல் அவர் வகிக்கும் பீடம் உயரியது; புகழ்படைத்தது. அதைக் குற்றங்களின் வியாபார நிலையமாக மாற்றுவது பொருந்தாது. மக்களின் புரட்சிமிக்க விழிகளிலிருந்து நீர் மறைக்கும் செயல்கள் கோரமானவை, பன்மடங்கானவை.

செஞ்ஸி : சொத்தில் மூன்றிலொரு பாகமா! போய்த்தொலையட்டும். போப்பாண்டவர் தன் சிற்பியின் மைத்துனனை அந்நிலத்தைப் பார்வையிட எப்பொழுதோ ஒரு முறை அனுப்பியதாகக் கேள்விப்

பட்டேன். நான் மறுபடி ஏதேனும் ராஜிக்கு வருவதாக ஏற்படுமானல், என் திராக்ஷை தோட்டங்களில் ஒரு விடுதியை அமைக்கவேண்டும் என்ற கருத்துடனேதான் அவர் அவனை அனுப்பியிருக்கவேண்டும். என்னை இப்படி ஏமாற்றிவிடுவார் என்று நான் எள்ளளவும் எண்ணவேயில்லை. அந்த அடிமைப்பயல் அவ்விஷயத்தை வெளியிட்டுவிடுவதாக என்னைப் பயமுறுத்தினன். வெகுமதிக்குப் பதிலாக புழுதியால் திணறச் செய்து கொன்றேன் அவனை. எவ்விஷயத்தைக் குறித்து அவன் என்னை மிரட்டினனே, அதை இனி யாரும் கேள்விப்படமுடியாது. அதற்கு எந்த சாட்சியமும் கிடையாது. தீபம்கூட சாட்சியாக இல்லை. அவன் கண்ணுற்கண்ட குற்றத்திலிருந்து மீள்வது. நான் அவனைக் கொன்றதிலிருந்து மீள்வதைவிட பெரிதல்ல.-இதுவே எனக்கு கோபத்தை ஊட்டுகிறது. நரகத்தை எட்டுவதைத் தாமதிக்கச்செய்கிறது. அவர்களது ஆவிகள் சுவர்க்கத்தை அடைவதை பைசாசங்கள் தாமதிக்கச்செய்யட்டும். கருணாநிதி போப் ஆண்டவரும், அவரது தயைமிக்க மைத்துனர்களும் எனக்காக பிரார்த்திக்கலாம். எனக்கு திடம், நிதி, பெருமை, நீண்டவாழ்வு அனைத்தையும் அளிக்கும்படி பிரார்த்திக்கலாம். அந் நீண்ட வாழ்வில் நான் இன்னமும் எவ்வளவோ காரியங்களைச் செய்வேன். அவை அவர்களுக்கு வருவாய் அளிக்கும் வழிகளாகும், ஆனல் அவர்கள் கவனியாத விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன.

காமில்லோ : செஞ்ஸி பிரபுவே! நீர் மாண்புடன் வாழவேண்டும். இருதயத்துடனும், இறைவனுடனும், புண்படுத்தப்பட்ட உலகத்தவருடனும் கலந்து

வாழவேண்டும். உமது வெளுத்த நரைத்த கேசத்தின் வழியாக பாபமும் ரத்தமும் நிரம்பியுள்ள செயல்களைக் கோரமாகப் பார்க்கிறீர். உமது குழந்தைகள் இப்பொழுது உம்மைச் சூழ்ந்து அமர்ந்திருக்கவேண்டும். அவர்களது பார்வைகளிலே நீர் பொறித்த கஷ்டங்களையும், வெட்கத்தையும் காண நீரே அஞ்சுகிறீர். உமது மனைவி எங்கே? உமது கண்ணியமான புதல்வி எங்கே? அவளது இனிமை கலந்த பார்வை எல்லாவற்றையும் அழகுபடுத்துகிறது; ஆனந்தப்படச் செய்கிறது. உம்முள் இருக்கும் குட்டிச்சாத்தானைக் கொன்றுவிடவல்லது அவள் பார்வை. எல்லோருடனும் கலந்து வாழ்வதிலிருந்து அவள் தடுக்கப்படுவானேன்? அவளைப்பற்றி விசித்திரமான குறை கூறவும் லாயக்கற்ற குற்றங்கள் மட்டும் வெளியிடப்படுவானேன்? பிரபு! என்னிடம் கூறுங்கள், உமக்கு நன்மையையே நான் இச்சிப்பவன் என்பதை நீர் அறிவீர். உமது இருண்ட பயங்கரமான வாலிபத்துடன் நானும் நின்றேன். வால்நக்ஷத்திரங்களை ஜனங்கள் கவனிப்பதைப்போல் உமது தைரியமும் பாமும் நிறைந்த வாழ்வைக் கவனித்துவந்தேன். ஆனால் அவை மறையக் காணோம். உமது மனுஷ்யப் பருவம் கருணையற்றது. அவமதிக்கப்பட்ட நிலைமையில் நான் உம்மைக்காண்கிறேன். பச்சாதாபப்படாத பல்லாயிரக்கணக்கான குற்றங்கள் உம்மீது சுமத்தப்படுகின்றன. நீர் என்றுவது சீர்திருந்துவீர் என்றே நான் நம்பியிருந்து வந்திருக்கிறேன். அதே நம்பிக்கையில் மும்முறை உமது ஜீவனை காப்பாற்றியிருக்கிறேன்.

செஞ்ஸி: பினியனிற்கப்பால் உள்ள என் மிட்டாவை அல்டாபிராண்டினோ தங்களுக்கு அளிப்பது

இவைகளுக்காகத்தான். கார்டினல்! நான் மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு விஷயம் இனி நினைவில் இருக்கட்டும். குறைந்த வரையறையுடன் நாம் இனி சம்பாஷிப்போம். என் மனைவி, புதல்வி இருவரைப் பற்றியும் ஒரு மனிதன் பேசியது உமக்குத் தெரியும். அவன் சகஜமாக அடிக்கடி என் வீட்டிற்கு வந்து செல்வதுண்டு. ஒரு நாள் அவன் வந்தான். மறுநாள் அவன் மனைவியும் புதல்வியும் என் வீட்டிற்கு வந்தார்கள். நான் அவனைக் கண்டேனா என்று கேட்டார்கள். நான் நகைத்தேன். அதற்குமேல் அவர்கள் என்றுமே அவனைக் காணவில்லை என்று நினைக்கிறேன்.

காமில்லோ: பாபி! ஜாக்கிரதை!

செஞ்ஸி: நீர் மட்டும் என்ன? இது சோம்பேறித்தனமான பேச்சு. நாம் ஒருவரையொருவர் நன்கு உணரவேண்டும். என் உணர்ச்சிகளை என் இச்சைப்படி ஆட்டி வைத்து ஆனந்தப்படுவது என் சுதந்திரம். அதைக் கபடத்துடனோ அல்லது பலத்துடனோ இயைப்பது என் உரிமை. அதையே குற்றம் என்கின்றனர் பொதுமக்கள். இது ஒரு பொது விஷயம். உம்முடன் அதைப்பற்றி தர்க்கிப்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீர் என்னைப் பாதிக்கு கிட்டத்தட்ட சீர்திருத்திவிட்டதாகச் சொல்லுகிறீர். ஆகவே நான் உம்முடனும் எனது இருதயத்துடனும் சமமாகவே பேசலாம். பீதி உம்மை மௌனமாக வைத்திராவிட்டாலும், திடமான பெருந்தன்மை உம்மை மௌனமாக வைத்திருக்கும். இரண்டும் உம்மை மௌனமாக்கும் என்பதை நான் சந்தேகிக்கவில்லை. உணர்ச்சியுள்ள சல்லாபங்களில் எல்லோ

ருமே ஆனந்தப்படுகிறார்கள். பழிவாங்குவதிலும் எல்லோருமே ஆனந்தப்படுகிறார்கள். தாங்கள் உணராத கொடுமைகளைக் குறித்து அபரிமிதமாக உவகையடைகிறார்கள். பிறரைத் துன்புறுத்துவதில் கண்ட ரகசிய சந்துஷ்டியைப் போற்றுவோர் எவ்வளவோ பேர். எனக்கு இவையெதிலும் உவகை யில்லை. பீதியின் காட்சிகளை நான் இச்சிக்கிறேன். ஆனந்த அறிவை இச்சிக்கிறேன். பீதி மற்றவனுடையதானால் ஆனந்தம் என்னுடையதாகிவிடும். மனிதர்களைத் தடுக்கும் சக்திகள் வஞ்சகமும் அச்சமுமே. என்னிடம் வஞ்சகம் கிடையாது. துளிகூட அச்சமும் இல்லை. இம்மாதிரி மனோநிலை என்னிடம் வளர்ந்துவிட்டது. என் மனோவியூக நிலை அதன் இச்சைக்கேற்ற காட்சிகளை சிருஷ்டிக்கிறது. உம்மை யொத்த மக்கள் தெரிந்துகொள்ளத் துவங்குபவைகளை யன்றி வேறு எதனையும் அவை உண்டாக்குவதில்லை. அது சித்தியாகும்வரை உணவும் ஓய்வும் எனக்கு தேவையே இல்லை.

காமில்லோ: தாங்கள் மிகவும் கொடியவராக இல்லையா?

செஞ்ஸி: கொடுமையா? ஏன்? - இல்லை- யோகீஸ்வரர்கள் 'கடினம்' என்று அழைக்கிறார்களே அப்படியாக இருக்கிறேன் நான். ஒரு மனிதனின் விசித்திரமான ஆசைகளைப் பற்றிக் குறைகூற அவர்கள் வெட்கமற்றவர்களாக இருக்கவேண்டும். நான் இப்பொழுது இருப்பதைவிட சந்தோஷமாக இருந்தது உண்மை. அப்பொழுதும், நான் நினைத்த பொருளைச் செய்ய 'பௌருஷம்' இருந்தது. 'பழி வாங்கும் மனோபாவத்தை' விட உயர்வாக இருந்தது

ஆசை அப்பொழுது.......ஆம்! நாம் அனைவரும் கிழவர்களாக வேண்டியவர்களே. ஆனால் இன்னமும் செய்து முடிக்க வேண்டிய ஒரு செயல் இருக்கிறது. அச்செயலின் கோரம் கூர்மையான பசியை உண்டாக்கக் கூடும். அதுவும் என் பசியைவிட மந்தமாகவே இருக்கும். — நான் செய்வேன் -எதைச் செய்வேன் என்று எனக்கே தெரியவில்லை. யுவனாக இருந்தபொழுது உல்லாசத்தைத் தவிர வேறு எதை யும் நான் நினைக்கவேயில்லை. மதுரத்தேனால் தயாரிக் கப்பட்ட இன்சுவை உண்டிகளையுண்டு வளர்ந்தேன். மனிதர்கள் வண்டுகளைப் போன்று வாழமுடியாது. நானும் களைப்படைந்து போய்விட்டேன்.—ஆனால், ஒரு விரோதியைக் கொன்று, அவன் திணறல்களையும் அவன் குழந்தையின் பிரலாபங்களையும் கேட்கும் வரையில், உலகில் இன்னமும் என்ன குதூகலங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியவில்லை. அதி லும்கூட இப்பொழுது குறைவான சந்தோஷமே காணப்படுகிறது எனக்கு. இன்னல் மறைக்கும் கோரங்களாக அவைகளை நான் கருதுகிறேன். வரண்ட ஒரே பார்வையுள்ள விழிகள்! வெளுத்த உதறும் உதடுகள்!—உள்ளே அழும் ஆவி, கிறிஸ்து வின் ரத்தமயமான வியர்வையினும் கொடியதாக, கண்ணீர் சொரிவதாக அவை கூறுகின்றன. நான் அத்தி பூத்தாற்போல் என்றோ ஓர் உடலைக் கொல்லு கிறேன். கடும் சிறையைப்போல் என் ஆவி என் ஆதீனத்திலேயே கிடக்கிறது. மணிக்கு மணி உண் டாகும் அவஸ்தைகளைப் பயங்கரத்தின் ஸ்வாசத்தால் போக்குகிறேன்.

காமில்லோ: நீர் இப்பொழுது என்னிடம்பேசி

யதைப்போல், நகரத்தின் கொடிய பைசாசம்கூட குற்றவெறியிலே தன் இருதயத்திடம் அவ்வளவு பேசியிருக்காது. நான் உம்மை நம்பவேயில்லை.

[அந்தோரா பிரவேசிக்கிருன்]

அந்தோரா : பிரபு சாலமன்காவிலிருந்து வந்துள்ள ஒரு கனவான் தங்களுடன் பேச வேண்டுமாம்.

செஞ்ஸி : பெரிய 'விருந்தினர் அறை' யில் என்னைப் பார்க்கச் சொல்.

[அந்தோரா போகிருன்]

காமில்லோ : வந்தனம். நான் வருகிறேன். தங்களது சொற்கள் பக்தியற்றவை. பொய்மையானவை. இறைவன் அவைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு, அவரது ஜீவன் தங்களைப் புறக்கணித்து விடாதிருக்க வேண்டுமே என்று எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திப்பேன்.

[காமில்லோ அகலுகிருன்]

செஞ்ஸி : என் சொத்தில் மூன்றிலொரு பாகமா? நான் மிகவும் சிக்கனமாக மேற்பார்வை நடத்தவேண்டும். இன்றேல் 'ஸ்வர்ணம்' எனது தளர்ந்த கரங்களை விட்டு விழுந்தோடி விடும். தங்கம் 'கிழவனின் வாள்' என்று சொல்லப்படுகிறது. ஆனல் நேற்று போப்பாண்டவரிடமிருந்து ஓர் ஆக்ஞை கிடைத்தது. பாபிகளான என் புதல்வர்களுக்கு நான்கு பங்கு செல்வம் வைத்துச் செல்லும் படி அதில் கண்டிருந்தது. என் மைந்தர்களை ரோம் நகரிலிருந்து சாலமன்காவிற்கு அனுப்பினேன். ஏதேனும் ஆபத்து அவர்களை வெட்டித் தீர்த்துவிடும் என்று எதிர்பார்த்தேன். அவர்களை அங்கேயே

பட்டினி போட்டுக் கொல்லவும் கருதினேன். கடவுளே! விரைவிலே சாவை அவர்களிடம் அனுப்பி விடு. மாண்டு அழிந்த பின்னர் பெர்ஞர்டோவும், என் மனைவியும் மோசமாக இருக்கமுடியாது. பியாட்ரைஸைப் பொறுத்த வரையில்தான்...........

[சந்தேகத்துடன் சுற்றுமுற்றும் நோக்கி]

கதவருகிலிருந்து நான் பேசுவதை அவர்கள் கேட்டுவிட முடியாது. கேட்டால்தான் என்ன? சொற்களிலே வெற்றி ஆரோகணமிடுகிறது என் இருதயம். இருந்தாலும் நான் பேசவேண்டிய அவசியமில்லை. மிகவும் அமைதியான காற்றே! என் நினைவை நீ கேட்டுவிடலாகாது. அவள் அறைக்குச் செல்ல நான் நடந்து செல்லுகிறேன் இத்தரையின் மீது. (தரையே!) உன் எதிரொலிகள் எனது ராஜ நடையை வெறுப்புமிக்க வியப்புடன் கூறட்டும். ஆனல் என் அபிப்பிராயங்களைக் கூறவேண்டாம்! அந்தேரா !

[அந்தேரா வருகிருன்]

அந்தேரா : பிரபு !

செஞ்ஸி : இன்று மாலை அவள் அறையிலேயே என்னைக் காணும்படி பியாட்ரைஸிற்குத் தெரிவித்து விடு. வேண்டாம்! இரவில் தனிமையாக சந்திக்கச் சொல்.

[அகலுகிருன்]

அங்கம்—1 காட்சி—2

[செஞ்ஸி மாளிகையின் தோட்டம். பியாட்ரைஸ¬ம் ஆர்சினேவும் பேசிக்கொண்டே வருகின்றனர்.]

பியாட்ரைஸ் : ஆர்சினே! உண்மையை மாற்ருதே. நாம் எங்கு அந்த சம்பாஷணையை நிகழ்த்தி

ஞேம் என்பது நினைவு இருக்கிறதல்லவா ! - இங்கிருந்தே நாம் அவ்விடத்தைப் பார்க்கிறோம். இரண்டு வருடங்களாகிவிட்டன. அது ஏப்ரல் மாதத்தில் ஒரு நள்ளிரவு. அன்று பாலடைன் மலையின் பாழ்களில் சந்திரிகையொளியில் என் ரகசிய உள்ளத்தை நான் உம்மிடம் ஒப்புக்கொண்டேன்.

ஆர்சினோ : அப்பொழுது நீ என்னைக் காதலித்ததாகக் கூறினாய்.

பியாட்ரைஸ் : நீர் ஒரு பாதிரி. என்னிடம் காதலைப் பற்றிப் பேசுவது சரியல்லவே !

ஆர்சினோ : மணம் செய்துகொள்ள போப்பாண்டவரிடமிருந்து விதிவிலக்கு வாங்க என்னால் முடியும். உறங்கினாலும், விழித்திருந்தாலும், மானைப் பின்பற்றும் வேடுவனைப் போல், உன் உருவம் என்னைப் பின்தொடருகிறது. நான் ஒரு பாதிரி. நீ என்னை நம்புவாயா ?

பியாட்ரைஸ் : முன்பே சொல்லிவிட்டேனே ! காதலைப்பற்றிஎன்னிடம் பேசாதீர்கள். நீங்கள் சம்பிரதாயத்திலிருந்து விதிவிலக்குப் பெறலாம். எனக்கோ அத்தகைய விதிவிலக்குக்கிடையாது. இந்த இல்லமே இன்னல் இல்லம். பரிதாபமானவன் பெர்னார்ட். கண்ணியமான என் சிமோட்டிக்கு என் ஜீவன் உரிமையுடையது. இந்த எண்ணங்கள் நேர்மையானவை. இவற்றை நான் விட்டுச்சொல்ல முடியாது. என் உடலுரம் உள்ளவரை அவர்களது கஷ்டங்களிலும் நான் பங்கெடுத்துக் கொள்வேன். ஐயோ, ஆர்சினோ ! ஒரு காலத்தில் உனக்காக நான் காதலை உணர்ந்தேன். இப்பொழுதோ அது கொடிய கஷ்டமாக மாறிவிட்டது. நம் உடன்படிக்கை ஓர் வாலிப உடன்படிக்கை. எந்த

போப்பாண்டவரும் தகர்க்க முடியாத சபதங்களை மேற்கொண்டு நீர் முதலில் அதை மீறினீர். நானோ உங்களை இன்னமும் நேசிக்கிறேன். ஆனால் என் நேசம் தெய்வீகமானது. ஒரு தெய்வ ஜோதியின் நட்பைப் போன்றது. ஆகவே விசுவாசம் மிக்கவளாக நான் சத்தியமிடுகிறேன்; நான் கல்யாணம் செய்து கொள்ளாமலிருப்பதே ஒருவேளை நல்லது. உமது போக்கோ மறைமுகமானது. இரு விதங்களாக அர்த்தம் செய்துகொள்ளக் கூடியது இந்தப் போக்கு. எனக்குப் பொருத்தமற்றது! - ஐயோ! நான் பேதை! நான் எங்கு செல்வேன்? இப்பொழுதும் நீங்கள் என்னைத் தங்கள் சிநேகிதையாகவே கருதவில்லை. நீங்கள் என்னை நேசிப்பதாக நான் நினைத்திருப்பதாக எண்ணுகிறீர். என் சந்தேகம் உங்கள் போலிப் புன்னகையின் மூலமாக உங்கள் தவறைக் காண்கிறது. ஆ! இல்லை. என்னை மன்னியுங்கள்! இயற்கையான என் சுபாவத்தை துக்கம் கரடுமுரடாக்குகிறது. சோகமயமான எண்ணங்கள் பெருத்த சுமையாக என்னை அழுத்துகின்றன. அவை என்னைத் தடுத்தன - நான் அனுபவிப்பதைவிட மோசமான எதை அவை தடுக்கமுடியும்?

ஆர்சினோ: எல்லாம் சுபமாகவே நடக்கும். மனு தயாராகி விட்டதா? பிரிய பியாட்ரைஸ்! உன் விருப்பங்களை நான் எவ்வளவு ஆர்வத்துடன் ஆமோதிக்கிறேன் தெரியுமா! போப்பாண்டவர் மனுவை கவனிக்க, என் திறமை அனைத்தையும் உபயோகிப்பேன் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகம் வேண்டாம்.

பியாட்ரைஸ்: என் விருப்பங்களுக்கு உங்கள் ஆர்வம்! ஆ! என் மேனி சிலிர்க்கிறது!........உங்கள்

திறமை அனைத்துமா........ஒரே வார்த்தை சொன்னால் போதும்........(தனக்குள்) ஐயோ! நான் கைவிடப் பட்டவள். சக்தியற்ற ஜீவன். எனது ஒரே நண்ப ருடனும் போராடிக்கொண்டு நிற்கிறேன். (ஆர்சி னோவை நோக்கி) ஆர்சினோ! என் தகப்பனார் இன் றிரவு ஒரு சம்பிரமமான விருந்து அளிக்கப்போகிறார். சாலமன்காவில் என் சகோதரர்களிடமிருந்து அவ ருக்கு ஏதோ குதூகலச் செய்தி எட்டிற்று. வெளி வேஷ அன்புடன் உள்ளத்து வெறுப்பை அவர் நையாண்டி செய்கிறார். என் சகோதரர்களின் மர ணத்திற்கு மண்டியிட்டு அவர் பிரார்த்தனை செய் வதை நான் கேட்டிருக்கிறேன். அவர்களது மரணச் சடங்கை நடத்த அவர் மிகவும் சந்தோஷப்படுவார். கடவுளே! இத்தகைய தகப்பனையா நான் அடைய வேண்டும்! தடபுடலாக எல்லாம் தயார் செய்யப்பட் டிருக்கிறது. எங்கள் சுற்றத்தினர், செஞ்ஸி, ரோம் நகரத்துப் பிரபுக்கள் அனைவரும் அங்கு கூடுவார்கள். என்னையும் என் தாயாரையும் உற்சவ ஆடைகளில் வரும்படி அவர் கட்டளையிட்டிருக்கிறார். என் தாய், பாபம்! - இந்த நாடகத்தின் இருளொளியில் ஒரு குதூகல மாறுதலை அவள் எதிர்பார்க்கிறாள். நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. இராப்போஜ னத்திற்குப் பின் என் மனுவைக் கொடுக்கிறேன்; வருகிறேன்.

ஆர்சினோ: போய்வருகிறேன்!

[பியாட்ரைஸ் அகலுகிறாள்]

பல செல்வமிக்க பிரதேசங்களின் 'ஆர்ச் பிஷப்' பாக இருப்பதால் வரக்கூடிய வருமானத்தை விட்டு விட்டு நிவாரணை செய்துகொள்வதால் மட்டும், 'பாதி

ரிப் பிரதிக்ஞை' யிலிருந்து என்னைப் போப்பாண்டவர் விடுதலை செய்யமாட்டார். இதை நான் அறிவேன். பியாட்ரைஸ் எப்படியேனும் இலகுவில் அடைந்து விட முடியும் என்று கருதுகிறேன். உற்சாகமுள்ள மனுவைக்கூட அவர் படிக்கப் போவதில்லை. அவளது சகோதரியின் விஷயத்திலே செய்ததைப் போல், தனது ஆருவது அத்தையைச் சார்ந்த பந்து யாரிடமாவது அவளைச் சேர்த்துவிடுவார். அப்புறம் நான் அவளை அணுகுவதிலிருந்து தடுக்கப்பட்டுவிடுவேன். அவள் தகப்பனுரிடம் கஷ்டப்படுவதைப்பற்றி யோசித்தால் இவைகள் எல்லாம் பிரமாதமாகத் திரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. கிழவர்கள் எப்பொழுதுமே சோதனை செய்யும் மனுேபாவமுள்ளவர்கள். அவர்கள் இஷ்டப்படிதான் நடப்பார்கள். ஒரு மனிதன் அவன் விரோதியை குத்திக்கொன்றுவிடலாம்; அடிமையை குத்திக் கொன்றுவிடலாம்; மங்கையுடனும் மதுவுடனும் சுதந்தர வாழ்வை வாழலாம்; மந்தம் நிறைந்த இல்லத்திற்கு ஏதோ நச்சரிக்கும் மனப்பான்மையுடன் திரும்பலாம்; மனைவியையும் குழந்தைகளையும் நிந்திக்கலாம்; மனைவியரும் பெண்களும் இதை 'கொடுமை' என்று கூறுகிருர்கள்.

என் காதலின் சூழ்ச்சிகளால் ஏற்படும் பாபத்தைவிட, வேறு கொடிய பாபம் என் மனதில் தங்காதிருந்தால் நான் திருப்தி கொள்வேன். காதல் ஒரு வலை. அதிலிருந்து அவள் தப்பமுடியாது. ஆயினும் அவளது கள்ள உள்ளத்தைக் கண்டு நான் கலங்குகிறேன்; பயமூட்டும் அவள் பார்வை நரம்புக்கு நரம்பு அதிரச் செய்கிறது; என்னை வெற்று மனிதனுக்குகிறது. என் மறைவான எண்ணங்களைக் காணவும் வெட்கமூட்டு

கிறது; ஓ! இல்லை! அவள் நண்பனற்ற நங்கை. என்னைப் பற்றிக் கிடக்கிருள் அவள் ஒரே நம்பிக்கை நிலையமாக. அவள் என்னைவிட்டுத் தப்பிவிட்டால் நான் ஒரு முட்டாள்தான்.

[போகிருன்]

அங்கம்—1 காட்சி—3

[செஞ்ஸி மாளிகையில் ஒரு உன்னத தாழ்வாரம். செஞ்ஸி, லூக்ரிஷியா, பியாட்ரைஸ், ஆர்சினே, காமில்லோ, பிரபுக்கள் ஆகியோர் வருகின்றனர்.]

செஞ்ஸி: நண்பர்களே! சுற்றத்தினரே! வருக! ராஜகுமாரர்களே! பிரதானிகளே! கோவிலின் நடு நிலைமையான குருமார்களே! வருக! தங்கள் வருகை நம் விழாவைப் பெருமைப்படுத்துகிறது. நான் ஒரு தபஸ்வியைப் போல் நீண்டகாலம் வாழ்ந்து விட்டேன். உங்களது உல்லாச சந்திப்புகளில் கலந்து கொள்ளாத இடைக்காலத்தில் என்னைப் பற்றிய அபாண்டச்சொல் பரவியிருக்கிறது. பிரபுத்துவ மிக்க நண்பர்களே! இவ்விடத்திய விருந்தில் கலந்து கொண்ட பின்னர், நம் ஆரோக்யத்திற்காக ஓரிரு முறை பிரமாணிக்கம் எடுத்துக்கொண்ட பின்னர், அது அளிக்கப்படும் புனித காரணத்தை உணர்ந்த பின்னர், நானும் சுற்றத்தினரில் உங்களைப்போல் ஒருவரே என்பதை உணர்வீர். உங்களைப் போன்ற பாபிகளில் நானும் ஒருவன்; இளகிய இருதயமுடைய வன்; நீதிக்குப் பயந்தவன்; கருணை கொண்டவன் என்பதை உணர்வீர். இது என் நம்பிக்கை.

முதல் விருந்தாளி: வதந்திகள் உம்முடன் சேர்க்கும் செயல்களை நீர் செய்திருக்க முடியாது.

ஏனென்றால் நீர் இளகிய இருதயமுடையவராகவும், நேரிய மனப்பான்மை கொண்டவராகவும், நட்பிற்கு உகந்தவராகவும், உண்மையாகவே புலப்படுகிறீர். (தன் நண்பனை நோக்கி) வேறு எந்த விழிகளிலும் இவ்வளவு உவகையையும், வெளிப்படையான ஆனந்தத்தையும் நான் கண்டதேயில்லை.

இரண். விரு: ஏதோ நாம் விரும்பும் நிகழ்ச்சி, நாம் அனைவரும் குதூகலிக்க வேண்டிய நிகழ்ச்சி நம்மை இங்கு கொண்டுவந்திருக்கிறது. பிரபு! அதை நாங்கள் கேட்கலாகுமா?

செஞ்ஸி: உண்மையிலேயே அது நாமனைவரும் விரும்பும் நிகழ்ச்சியே. ஒரு பிதா தன் இருதயத்திலிருந்து அனைவருக்கும் பிதாவான இறைவனைப் பிரார்த்திக்கிறான். உறங்கச் செல்லும் பொழுதும், உறக்கத்திலிருந்து கனவிற்குப்பின் எழும்பொழுதும் பிரார்த்திக்கிறான். தன் இரு புதல்வர்களுக்காக ஒரே ஆசை, ஒரே நம்பிக்கை, ஒரே எண்ணம், ஒரே இறைஞ்சலை அளிக்கும்படி பிரார்த்திக்கிறான். அவ்வளவிற்கும், அவனது எண்ணங்களுக்கு மேற்பட்டும் சித்தி கிட்டுமானால், அவன் ஆனந்தப்படுவான். தன் நண்பர்களையும் சுற்றத்தினர்களையும் ஒரு விருந்திற்கு அழைப்பான். தன் கேளிக்கைகளைப் பொலிவுறச் செய்ய அவர்கள் அன்பைப் பயன்படுத்திக் கொள்வான். நானே அப்பிதா! நீங்களே இதுவரை என்னை இப்படிப் பெருமைப்படுத்தியவர்கள்!

பியாட்ரைஸ்: (லூக்ரிஷியாவிடம்) கடவுளே! என்ன கொடுமை! என் சகோதரர்களுக்கு ஏதோ கொடிய ஆபத்து நேரிட்டிருக்க வேண்டும்.

லூக்ரிஷியா: குழந்தாய்! அஞ்சாதே. அவர் மிகவும் வெளிப்படையாகப் பேசுகிறார்.

பியாட்ரைஸ்: ஆ! என் ரத்தம் சிலிர்க்கிறது. அவரது கண்களைச் சுற்றி விளங்கும் நீசத்தனமான புன்னகையைக் கண்டு நான் அஞ்சுகிறேன். தலைமயிர் வரை முகச் சுருக்கங்களை உண்டாக்குகிறதே அப் புன்னகை.

செஞ்ஸி: சாலமன்காவி லிருந்து கொண்டு வரப்பட்ட கடிதங்கள் இவை. பியாட்ரைஸ்! இவற்றை உன் அன்னைக்குப் படித்துக்காட்டு. பரமனே! நான் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். யாருக்கும் தெரியாத வழிகளிலே, ஓர் இரவிலே, நான் விரும்பியதை நீர் நிறைவேற்றி விட்டீர். எனது கலகக்காரப் பிள்ளைகள் மாண்டொழிந்தனர்! ஏன்? இறந்தனர்!- உவகையில் இம்மாறுபாடு ஏற்படுவதின் அர்த்தம்? நீங்கள் நான் சொல்வதைக் கேளாவிட்டாலும் சரியே. அவர்கள் இறந்தொழிந்தார்கள் என்பதையே நான் சொல்லுகிறேன். இனி அவர்கள் உணவு கேட்க மாட்டார்கள்; உடை கேட்கமாட்டார்கள். அவர்களது இருண்டவழியை ஒளியால் நிரப்பிய தீபங்களே அவர்களுக்காக ஏற்பட்ட கடைசி செலவு. போப்பாண்டவர்கூட அவர்களை அவர்களது சவப்பெட்டிகளிலே நான் வைத்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க மாட்டார் என்று நினைக்கிறேன். என்னுடன் ஆனந்தப்படுங்கள்! என் இருதயம் உவகையால் உல்லாசமடைகிறது.

[லூக்ரிஷியா மயங்கி விழப்போக, பியாட்ரைஸ் அவளை தாங்கிப் பிடித்துக்கொள்ளுகிறாள்.]

பியாட்ரைஸ்: இது நிஜமல்ல அம்மா! நிமிர்ந்து பாருங்கள்! ஆண்டவன் சுவர்க்கத்திலே இருக்கிறார்.

இவர் கூறும் செய்தி நிஜமாயிருந்தால், இப்படி பெருமையடித்துக்கொள்ள உயிருடனிருக்கமாட்டார் ஆண்டவர். விசித்திரமான மனுஷ்யனே! இது பொய் என்று உனக்கே தெரியும்.

செஞ்ஸி: கடவுளின் சொற்களைப்போல் சொல்லுகிறேன். நான் கூறும் உண்மையைப் பற்றிப் பேச இறைவனை இங்கேயே அழைக்கிறேன். அவர்களின் சாவின் போக்கிலும் இறைவனின் கருணை இருந்தது. ரோகா வேறு பதினேறு ஆட்களுடன் பிரார்த்தனையில் மண்டியிட்டிருந்தான். திடீரென்று மாதாகோவில் விழுந்து அவனை உருத்தெரியாமல் சிதைத்துவிட்டது. மற்றவர்கள் ஆபத்தின்றித் தப்பிப் பிழைத்தனர். கிரிஸ்டோபோனு ஒருவளைக் காதலித்தான். அவன் விரோதியுடன் அவன் காதலி உறங்கும்போழுது அசூயைமிக்க ஒருவன் தப்பிதமாக அவனைக் குத்திக்கொன்றுவிட்டான். ஒரே இரவில் அதே சமயத்தில் அனைத்தும் நிகழ்ந்தன இதுவே ஆண்டவன் என்னை நன்ருக ஆதரிக்கிருர் என்று காட்டுகிறது. என்னை விரும்பும் நண்பர்களே, டிஸம்பர் இருபத்திநான்காம் தேதியான இவ்விருந்து நாளைத் தங்கள் நாட்குறிப்புகளில் குறித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

[சபையோர் கலங்கினர்போல் புலப்படுகின்றனர். சில விருந்தாளிகள் எழுந்திருக்கின்றனர்.]

முதல். விரு: பயங்கரம்! நான் போய்விடுகிறேன்.

இரண். விரு: நானுங்கூட.

மூன்ரு விரு: நில்லுங்கள். இது ஏதோ வேடிக்கை என்று நான் நினைக்கிறேன். நம்மை

மெள்ள நையாண்டி செய்வதே இது. அவர்புதல்வர் 'இன்பெண்டா' வை மணந்திருக்கவேண்டும் அல்லது 'எல்டொராடோ' வில் தங்கச் சுரங்கத்தைக் கண்டு பிடித்திருக்கவேண்டும். அத்தகைய செய்தியை வெளியிடவே இவ்வளவும். இருங்கள்! நில்லுங்கள்! அவர் சிரிப்பால் கேலி செய்யப்படுவதையே நான் காண்கிறேன்.

செஞ்ஸி: (ஒரு கோப்பையில் மதுவை நிரப்பி அதைத் தூக்கிப் பிடித்து) ஓ! ஒளிமிக்க மதுவே! உன் உன்னதம் இந்தத் தங்கக் கோப்பையில், தீபவொளியில், என் ஜீவனைப் போன்று கொப்பளிக்கிறது. அது அயோக்கியசிகாமணிகளான என் புதல்வர்களின் மரணத்தைக் கேட்கவே அப்படிக் கொப்பளிக்கிறது. பிதா சபிப்பாரானல், நரகத்துப் பைசாசங்கள் புதல்வர்களின் ஜீவான்மாக்களை வேகமான இறக்கைகளுடன் பின்பற்றி, சுவர்க்க அரியாசனத்திலிருந்து அவற்றை இழுத்து வந்துவிடுவதாக மக்கள் சொல்லுகிருர்கள். இந்த சாராயம் என் புதல்வர்களின் கலப்பான உதிரமாயிருப்பின் அதை தெய்வீக விருந்தைப்போல் ருசிப்பேன்.-இப்பொழுது எனக்கு வெற்றியிலும் வெற்றி! நீயும் அதிகப்படிதான். ஆழ்ந்த உவகையையே நான் அருந்திவிட்டேன். இன்றிரவு வேறு எந்த மதுவையும் ருசியேன். அந்தேரா! இங்கு வா! எல்லோருக்கும் மதுவைக் கொடு.

ஒரு. விரு: (எழுந்து): பாபி! பிரபுத்துவமான இத்தொகுதியில் இக்கயவனை அடக்குவோர் எவருமில்லையா?

இரண். விரு: அவனைப் பிடித்து வாயை மூடுங்கள்!

முதல். விரு: இதோ நான் ....

மூன். விரு: நானும் ....

செஞ்ஸி: (எழுந்தவர்களை மிரட்டலான குரலில் அதட்டியபடியே எழுந்து) பேசுவது யார்? நகருவது யார்? (சபையினரை நோக்கி) இது ஒன்றுமேயில்லை. எல்லோரும் ஆனந்தப்படுங்கள்! அரசனின் முத்திரையிட்ட ஆக்ஞை மரணத்தை அளிக்கிறதே அதைப் போன்றது என் வஞ்சம். கொலையாளியின் பெயரை உச்சரிக்கும் தைரியம் எவனுக்கு இருக்கிறது!

(விருந்து கலைகிறது. சில விருந்தாளிகள் அகலுகின்றனர்)

பியாட்ரைஸ்: பிரபுத்துவாரிக்க விருந்தாளிகளே! செல்லாதிர்! நான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்; செல்லாதீர்! கொடுமையும் பாபமயமான வெறுப்பும் ஒரு தகப்பனின் நரைத்த கேசத்தால் பாதுகாக்கப்பட்டால் என்ன! எங்களை இந்த அவயவங்களிலே அணிவித்து, கொடுமைப் படுத்தி வெற்றிகொண்டால் என்ன! நாங்கள் பாழடைந்து மாண்டாலும் அவரது திரேகத்தினர் அல்லவா! அவர் நேசித்துப் பாதுகாக்கக் கடமைப் பட்ட குழந்தைகளும் மனைவியுமல்லவா நாங்கள்! அதனால் கருணையற்ற வியனுலகிலே எங்களுக்குப் பாதுகாப்பிடமே கிடையாதா? யோசித்துப் பாருங்கள்! முதலன்பை எவ்வளவு ஆழ்ந்த கொடுமைகள் எடுத்துவிட்டிருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்! வெள்ளை உள்ளத்திலே உள்ள மரியா

ந்தையை, பயத்தாலும் வெட்கத்தினுலும் எங்ஙனம் எடுத்துவிட்டிருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்! நான் எவ்வளவோ பொறுத்தாகிவிட்டது! எங்களை நிலத்தில் வீழ்த்திய கரங்களையல்லவா முத்த மிட்டேன்! அதன் ஸ்பரிசத்தைத் தந்தையின் கண்டிப்போ என்றல்லவா நினைத்துவிட்டேன்! மிகவும் சந்தேகித்தவைகளையும் எவ்வளவோ மன்னித்தேன். சந்தேகம் இல்லாதபொழுது பொறுமையுடனும் அன்புடனும் கண்ணீருடனும் அவரை இளக வைக்க முயன்றேன். அதுவும் முடியாது போனபின்னர், நீண்ட இரவுகளில் உறக்க மின்றி, மண்டியிட்டு, அகிலத்து அப்பனை ஆண்டவனுக்குப் பிரார்த்தனைகளைச் செலுத்தினேன். ஆண்டவன் அவற்றிற்குச் செவிசாய்க்காத போதிலும் நான் பொறுமையுடனிருந்தேன். ராஜபுத்திரர்களே! உற்ற சுற்றத்தினர்களே! என் சகோதரர்களின் மரணத்திற்கென்று தரப்பட்ட இந்த விருந்தில் உங்களைச் சந்திக்கும் வரையில் பொறுத்திருந்தேன். இன்னமும் எஞ்சி நிற்பது இருவரே. அவரது மனைவி ஒருவள் இருக்கிருள். நான் இருக்கிறேன். எங்களைக் காப்பாற்றுங்கள். இன்றேல், புதல்வர்களின் மரணத் திற்காக உல்லாசக் கேளிக்கையைப் பிதா கொண்டாடு வதைப்போல், எங்கள் மரணத்தின்பொருட்டு நடத்தப்படும் இன்னொரு விருந்தில் விரைவிலேயே கலந்து கொள்வீர். கோலன்ரு இளவரசனே! நீ எங்கள் நெருங்கிய பந்து அல்லவா? கார்டினல்! நீ போப்பாண்டவரின் பிரதிநிதியல்லவா? காமில்லோ! நீ பிரதம நீதிபதியல்லவா? — எங்களை அழைத்துச் சென்று விடுங்கள்.

செஞ்ஸி : (பியாட்ரைஸின் பேச்சின் முற்பகுதியின் பொழுது செஞ்ஸி காமில்லோவுடன் உரையாடிக் கொண்டிருந்தான். முடிவுப் பகுதியைக் கேள்விப்பட்டு, முன்வந்து)—இந்தப் போக்கிரிப் பெண்ணின் சொற்களுக்கு செவிசாய்க்கு முன், இங்குள்ள என் நண்பர்கள் தத்தமது புத்திரிகளையும் தங்கள் கழுத்தையும் நினைத்துப் பார்த்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பியாட்ரைஸ் : (செஞ்ஸியின் சொற்களைக் கவனியாமல்) என்னை நோக்க யாருக்குமே தைரியமில்லையா? - பதிலே கிடையாதா? உயர்ந்த மதிமிக்க மக்களின் அறிவையும் கூட ஒரு கொடுங்கோலன் அடக்குவதா?, ஏதோ உருவான ஒரு சட்டத்தின் கீழ் வழக்கு கோராமையால், என் வழக்கை மறுக்கிறீர்களா? கடவுளே! என் சகோதரர்களுடனேயே நான் புதைந்து விட்டிருக்கலாகாதா? எல்லோருக்கும் ஒரே விருந்தாகக் கொண்டாடி யிருக்கலாம் அல்லவா?

காமில்லோ : இவ்வளவு வாலிபத்தில், இவ்வளவு பெருந்தன்மையில் தோன்றும் இவ்வெண்ணம் மேலானதுதான். நாம் ஒன்றுமே செய்ய முடியாதா?

கோலன்ரு : எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. செஞ்ஸி ஒரு பயங்கர விரோதி. அவனுக்கு இரண்டாவதான விரோதியே கிடையாது.

கார்டினல் : எனக்கும் அப்படித்தான்.

செஞ்ஸி : போக்கிரிப் பெண்ணே! போ உன் அறைக்கு.

பியாட்ரைஸ் : பாபி! நீ போ! எவனுமே இனி உன்னைக் காணமுடியாத இடத்திற்குப் போ. கொடுங்

கோலன் ஒருவனுக்கு மரியாதையையும் கீழ்ப்படிதலை யும் நீ அளிப்பாயா? அப்பா! இக்கூட்டத்தினரை நீர் சமாளித்துவிலாம்; ஆனால் கனவு காணாதீர்! என்னை நோக்கி முறைக்க வேண்டாம். ஓடுங்கள்! போய் ஒளிந்து கொள்ளுங்கள்! என் சகோதரர்களின் ஆவி கள் பழிவாங்கும் பார்வையுடன் தங்கள் இருக்கையி லிருந்து தங்களை வேட்டையாடுவது நிச்சயம். ஜீவ னுள்ள விழிகளைப் பாராதீர்! பாதத்து சப்தத்தைக் கேட்டாலே திடுக்கிடுங்கள்! அங்கே ஏதேனும் இரு ண்ட நிசப்தமான மூலையைத் தேடுங்கள்! இறைவ னின் முன்பு தங்களது நரைத்த தலையைக் குனிந்து வணங்குங்கள்! நாங்கள் உம்மைச் சுற்றி மண்டியிட்டு, உம்மையும் எம்மையும் நோக்கிப் பச்சாதாபப்படும் படி வேண்டுவோம்.

செஞ்ஸி: நண்பர்களே! இந்தப் பைத்தியக் காரி நம் உற்சவத்தின் ஆனந்தத்தை அழித்ததைக் குறித்து நான் கண் கலங்குகிறேன்; போய்வருகிறேன்; வந்தனம். சந்துஷ்டியற்ற வீட்டுச் சண்டைகளை நீண்ட நேரம் பார்த்து நிற்கும்படி உங்களை விட்டுவிட நான் விரும்பவில்லை. இன்னொரு முறை பார்த்துக் கொள்வோம்.

[செஞ்ஸி பியாட்ரைஸ் தவிர ஏனையோர் போகின் றனர்.]

என் மூளை 'கிடு கிடு' வென்று சுழலுகிறது. கொண்டா ஒரு கோப்பை மதுவை.

[பியாட்ரைஸை நோக்கி]

நவீனமான நாகப் பாம்பே! நீ ஒரு மிருகம்! அழகும் பயங்கரமும் கொண்ட மிருகம்! ஒரு தாயத்து உன்னைப் பயந்தவளாகவும் சாதுவாகவும்

மதுரை ... அன்னை

மாற்றிவிடும் என்பதை நானறிவேன். இப்பொழுதே என் பார்வையிலிருந்து ஓடிப்போ!

[பியாட்ரைஸ் போகிருள்.]

அந்தேரா! இப்படி வா! கோப்பையை இரேக்க சாராயத்தால் நிரப்பு! இன்று மாலை மதுவருந்தமாட்டேன் என்று முன்பு கூறினேன். இப்பொழுது அருந்தியே தீரவேண்டும்; ஏனென்ருல் யோசனைகளுடனேயே என் உற்சாகமும் குறைகிறது.

[மதுவை அருந்தியபடியே]

வாலிபத்தின் எண்ணங்களாக நீ என் ரத்தக் குழாய்களிலே சுழன்ருேடு. மனித தசையின் காரணமான முரட்டுத்தனமாகவும், வயதின் உறுதியாகவும், விசித்திரமான அயோக்கியத்தனமாகவும் இருப்பது நீ. நீ என் குழந்தைகளின் உதிரமாக இருந்திருந்தால் நான் அருந்தி தாகசாந்தி செய்துகொள்வேன்! — அந்த தாயத்து நன்ருகவே வேலை செய்கிறது. இது நடந்தாக வேண்டும். செய்தே தீரவேண்டும் — இது சத்தியம்.

அங்கம் 2. காட்சி 1.

[செஞ்ஸி மாளிகையில் ஒரு பகுதி லூக்ரிஷியாவும் பெர்னூர்டோவும் வருகின்றனர்.]

லூக்ரிஷியா: செல்வச் சிறுவா! அழாதே. ஆழ்ந்த இன்னல்களைப் பொறுத்துள்ள என்னையே அவர் அடித்தார். உண்மையிலேயே அவர் என்னைக் கொன்றிருந்தால் ஒரு அன்பான செயலைச் செய்திருப்பார். ஓ, கடவுளே! எல்லாம் வல்ல இறைவா! எங்கள்மீது தங்கள் திருநோக்கு வீழட்டும்! தங்களையன்றி உற்ற நட்பினர் எவருமே எமக்கு இல்லை - இருந்தாலும், கண்ணீர் கலங்காதே! என் புதல்

வனைப் போல் நான் உன்னை நேசித்தாலும், நான் உனது உண்மையான அன்னை அல்ல.

பெர்னுர்டோ: தாய் சிசுவிடம் இருப்பதினும் மேலாகத் தாங்கள் என்னிடம் இருந்திருக்கிறீர்கள். அவர் என் தந்தையாக மட்டும் இல்லாமலிருந்தால் நான் என்ன செய்திருப்பேன், தெரியுமா?

லூக்ரிஷியா: ஐயோ! ஏழைச்சிறுவா!.... அழாமல் வேறு என்னதான் செய்யமுடியும்?

[பியாட்ரைஸ் வருகிருள்]

பியாட்ரைஸ்: (அவசரம் ததும்பும் குரலில்) அவன் இவ்வழியாகச் சென்ருனு? தம்பி, நீ அவனைப் பார்த்தாயா? ஓ! இல்லை - படிக்கட்டுகளின் மேலாக எழும் காலடிச் சப்தம் அவனுடையது தான். இதோ அது நெருங்கிக்கொண்டே வருகிறது. அவன் கை கதவின்மீது இருக்கிறதே! - அம்மா! - நான் எப்பொழுதாவது தங்களின் தர்மக் குழந்தையாக இருந்திருந்தால், இப்பொழுது என்னைக் காப்பாற்றுங்கள்! - பரம்பொருளே! தங்கள் திருவுருவே உலகத்தில் பிதா. தாங்கள் உண்மையாகவே என்னைக் கைவிட்டு விட்டீரா? - அவர் வருகிருர் - கதவு திறக்கிறது. அவர் முகம்தான் தென்படுகிறது. மற்றவர்களை நோக்கி தன் முகத்தைச் சுளித்துக்கொள்கிருர். சென்ற இரவில் விருந்தில் நிகழ்ந்ததைப்போல் என்னை நோக்கி நகைக்கிருர்

[ஒரு வேலையாள் வருகிருன்]

எல்லாம் வல்ல இறைவனே! நீரே கருணைக் கடல்! வருவது ஆர்சினேவின் வேலையாள்தான் - நல்லது. என்ன விசேஷம்?

வேலையாள்: தங்கள் மனுவைத் திறக்காமலேயே திருப்பியனுப்பிவிட்டார் புனித பிதா என் எஜமான். அதைத் தங்களுக்கு தெரிவிக்கச் சொன்னர் (ஒரு காகிதத்தைக் கொடுத்தபடியே) தங்களை மறுபடியும் சந்திக்க சௌகரியமான நேரம் எது என்று தெரிந்துவரச் சொன்னர்.

லூக்ரிஷியா: பிரார்த்தனையின் பொழுது.

[வேலையாள் செல்கிருன்]

பெண்ணே! நமது கடைசி நம்பிக்கையும் தோற்று விட்டது. ஆ! நீ எவ்வளவு கலக்கத்துடன் காணப்படுகிருய்! நீ நடுங்குகிருயே! பயங்கரமான திடசிந்தனைகளில் சூழப்பட்டு நிற்கிருயே! ஒரே எண்ணம் பலமாக உன்னைப் பிடித்துவிட்டாற்போலிருக்கிறதே! உன்விழிகளில் குளிர்ந்த வெறுமைப் பார்வை காணப்படுகிறதே!......அன்புள்ள குழந்தாய்! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? இல்லையானல் என்னுடன் பேசு!

பியாட்ரைஸ்: நான் பித்துக்குளியல்ல. இதோ உங்களிடம் பேசுகின்றேனே.

லூக்ரிஷியா: அப் பயங்கர விருந்திற்குப் பிறகு உன் பிதா செய்த சிலவற்றைப்பற்றி நீ கூறினய், நகைத்து, 'என் குமாரர்கள் மாண்டனர்' என்று கூச்சலிட்டாரே அதைவிட அவை மோசமானவைகளா? தன்னைப்போல் மற்றவர்களும் முகம் வெளுத்துக் கலங்கினர்களா என்று ஒவ்வொருவரும் மற்றவன் முகத்தைப் பார்த்துக்கொண்டான். அவர் முதற்சொல்லைக் கூறியபொழுதே ரத்த ஓட்டம் என் இருதயத்தை நோக்கிப் பாய்வதாக ஒரு உணர்ச்சி

என் உடலில் காணப்பட்டது. என்னை மறந்த ஒரு நிலையை எட்டினேன். உதிர ஓட்டம் நின்றதும் களைப்பும் கோபமும் கொண்டவளாக உட்கார்ந்து விட்டேன். நீ மட்டுமே தனிமையாக நின்று கடின மான சொற்களால் அவரது அசம்பாவிதமான பெரு மையைத் தடுத்தாய். அவரது கெட்ட சிந்தனைகள் வலையில் சிக்கியதை நான் கண்டேன். இந்த மணி வரையில், எங்களுக்கும் தகப்பனாரின் சினத்திற்கும் இடையே நீ பாதுகாப்பாக நின்றிருக்கிறாய். உன் திட சித்தமே எங்களது ஒரே பாதுகாப்பாகவும் அடைக் கலமாகவும் இருந்திருக்கிறது. உனது வழக்கமற்ற பீதியைப் பின்பற்றி, சோகப்பார்வையை எது அளித் திருக்கக் கூடும்?

பியாட்ரைஸ்: என்ன சொன்னீர்? இனிப் போராடுவது உசிதமில்லையோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன். என் தகப்பனைப் போன்ற ஆடவர்கள் ரத்தவெறி கொண்ட கயவர்களாக இருந் திருக்கிறார்கள். இருந்தாலும் - இதனால் கேடு விளையு முன்பாகச் சாவதே அறிவுடைமையாகும். அதுதான் கடைசியாக எஞ்சி நிற்கும் முடிபு.

லூக்ரிஷியா: ஓ, குழந்தாய்! அப்படிச் சொல் லாதே! உன் தகப்பனார் செய்ததையும் சொன்னதை யும் என்னிடம் உடனே தெரிவி. அந்தச் சாபக் கேடான விருந்திற்குப்பின் ஒரு நிமிஷம்கூட அவர் உன் அறையில் இருக்கவில்லையே - என்னிடம் விஷ யத்தைச் சொல்லேன்.

பெர்னார்டோ: அக்கா! ஐயோ, அக்கா! எங்க ளிடம் பேசமாட்டாயா?

பியாட்ரைஸ்: (மெள்ள, தணிந்த உணர்ச்சியுள்ள குரலில் பேசியவளாக) அம்மா! ஒரே சொல்! ஒரே சிறுசொல்! ஒரு பார்வை! ஒரு நகைப்பு! (ரோஷத்துடன்) ஓ! அவர் என்னைத் தனது பாதங்களினால் மிதித்துச் சென்றார். அதனால் என் சோபை குன்றிய கன்னங்களில் உதிர வெள்ளத்தை ஓடச் செய்தார். சாக்கடை ஜலத்தை எங்கள் அனைவருக்கும் அளித்தார். வியாதியால் பீடிக்கப்பட்ட கால் நடைகளின் மாமிசத்தைப் புசிக்கும்படி ஆக்ஞாபித்தார். நாங்களும் சாப்பிட்டோம். பெர்னார்டோவின் மெல்லிய அவயவங்களைக் கனத்த சங்கிலிகளின்துரு அரிக்கும் பான்மையைப் பார்க்கும்படி செய்தார். அந்த நிலையிலும் நான் கலங்கவேயில்லை. ஆனால் இன்று! நான் என்ன சொல்லமுடியும்?

(தேற்றிக் கொண்டவளாக)

ஐயோ! இல்லை! இதெல்லாம் புதுமையல்ல! நான் பகிர்ந்துகொண்டுள்ள இன்னல்கள் என்னை மிருகத்தனமாக்கிவிட்டன. அவர் போகும் பொழுது என்னை அடித்தார். வழக்கத்தை விட அதிகமாக என்னைத் திட்டினார். மனம் குலைய வைத்தார். ஐயோ! நான் என் கடமையை மறந்துவிடுகிறேன்; உனக்காகவாவது என் அறிவைச் சிதறவிடாமல் நான் பாதுகாக்கவேண்டுமே!

லூக்ரிஷியா: அப்படியல்ல பியாட்ரைஸ்! தைரியமாக இரு. நல்ல பெண்ணே! கலங்கித் திகைக்க வேண்டியவர் யாரேனும் இருந்தால், அது நானாகவே இருக்கவேண்டும். அவரை ஒருகாலத்தில் காதலித்தவள் நான். கடவுள் கருணைகூர்ந்து என்னையோ அவரையோ அழைத்துக்கொள்ளும் வரை

யில் அவருடன் வாழவேண்டியவள் நான். நீயோ, உன் சகோதரியைப் போல், ஒரு கணவனுடன் வாழச் சென்றுவிடலாம். பல வருஷங்களுக்குப்பின் குழந்தைகள் சூழ்ந்திருக்க ஆனந்தப்படலாம். அப்பொழுது நானிருக்கமாட்டேன். அப்பொழுது இந்த கோரச் சூழல் ஒரு கனவாகவே கருதப்படும்.

பியாட்ரைஸ்: அம்மா! புருஷனைப்பற்றி என்னிடம் பேசாதீர்கள்! என் தாய் மடிந்தபின்னர் என்னை வளர்த்தது தாங்கள் அல்லவா? என்னையும் அச் செல்வச் சிறுவனையும் பாதுகாத்தது தாங்கள் அல்லவா? குழந்தைப் பருவத்திலேயே எங்களைக் கொல்லாதிருக்கும் பொருட்டு, கண்ணிய சொற்களாலும் பார்வைகளாலும் தகப்பனுரை வென்ற தங்களை விட எங்களுக்கு உற்ற நட்பினர் ஏது? நான் இன்று தங்களை விட்டுச் சென்றுவிடுவதா? என் தாயின் இடத்தை நிரப்பியது தாங்கள். தாங்கள் எங்களிடம் காட்டிய அன்பு அன்னையின் அன்பைவிடப் பெரிது. நான் தங்களை விட்டுச் செல்வதானுல், என் அன்னையின் ஆவி தங்களுக்காக இறைஞ்சி வாக்குவாதம் புரியாதிருக்குமா?

பெர்ஞர்டோ: என் சோதரியின் எண்ணமே என்னுடையதும். இந்த மோசமான நிலைமையில் நான் தங்களை விட்டுச் செல்லக்கூடாது. என் வயதினரைப்போல் பிறிதொரு ஆனந்த நிலையத்தில் கேளிக்கையுடனும், அறுசுவையுண்டிகளுடனும், மந்தமாருதத்துடனும் வாழ என்னைப் போப்பாண்டவர் விடுவித்தாலும், நான் தங்களை விட்டுச் செல்வேன் என்று நினைக்கவே வேண்டாம், அம்மா!

லூக்ரிஷியா: என் பிரிய குழந்தைகளே!

[திடீரென்று செஞ்ஸி வருகிருன்]

செஞ்ஸி: பியாட்ரைஸ்! அங்கே என்ன? இப்படிவா! (அவள் பின்வாங்கி முகத்தை மூடிக் கொள்ளுகிருள்) உன் முகத்தை மூடிக்கொள்ள வேண்டாம். அது அழகாய்த்தானிருக்கிறது. இப் படிப்பார்! ஏன்? நேற்றிரவு என்னை அவமரியாதை யுடன், கீழ்ப்படியாமல் நோக்க உனக்குத் தைரியம் இருந்ததல்லவா? என் எண்ணத்தினை ஒரே முறைப் புடனும் ஆர்வத்துடனும் எதிர்த்தாயல்லவா? - நானும் உனக்குச் சொல்லவந்த விஷயத்தை மறைக்க வும் பார்த்தேன் - ஆனல் முடியவில்லை. எல்லாம் வியர்த்தமாகப் போயிற்று.

பியாட்ரைஸ்: (ரோஷத்துடன் கதவை நோக்கி தள்ளாடிச்சென்றவளாக) ஐயோ! கடவுளே! இந்த பூமி வெடித்து என்னை விழுங்காதா?

செஞ்ஸி: அப்பொழுது நான் உன் எதிரிலிருந்து தடுமாறிக்கொண்டு போகவேண்டியதாகப் போய் விட்டது. இப்பொழுது நீ என்னிடமிருந்து போவ தைப்போல என் வாயிலிருந்து வார்த்தைகள் வேறு குழறின. இந்த நாள் முதல், இந்த மணிமுதல், உனது நேர்த்தியான நெற்றியைக்கொண்டோ, வெறுப்பையும் விருப்பையும் உண்டாக்கும் உதடு களைக்கொண்டோ, மனிதவர்க்கத்தினரையே மௌன மாக்கிவிடலாம் என்று மறுபடியும் நினையாதே. அதிலும் என்னிடம் கண்டிப்பாக முடியாது. இனி நீ உன் அறைக்குச்செல்லாம் - 'தாய்' என்னும் சாபக் கேடான பட்டத்தைக்கொண்ட கோரஸ்வரூபமே, நீயும் போ! - (பெர்னர்டோவிடம்) உனது பால்

வடியும் பயந்தமுகம் வெறுப்பையும் ஜுரத்தையும் உண்டாக்குகிறது.

[பியாட்ரைஸும் பெர்ஞர்டோவும் செல்கின்றனர்]

(தனிமையாக) எங்களுக்கிடையே இவ்வளவும் நிகழ்ந்துவிட்டன. அவை என்னைத் தைரியசாலியாக்கி விட்டன. அவளைப் பயந்த ஜன்மமாக்கிவிட்டன. இதைப் போலத்தான், மனுஷ்யர்கள் பனிநிறைந்த கரையிலே நடுங்கியபடியே அமர்ந்துகொண்டு, ஓடையின்நீரைத் தங்கள் பாதங்களினுலேயேகுளிரச்செய்ய முயல்கின்றனர் .... ஒரு முறை .... என் ஆவி ஆனந்தத்துடன் எப்படி தத்தளிக்கிறதே!

லூக்ரிஷியா: (பயத்துடன் அவனை நோக்கிச் சென்று) நாதா! தயவுசெய்து பியாட்ரைஸை மன்னித்துவிடுங்கள். அவள் எவ்வித தீங்கும் கருதியவள் அல்ல.

செஞ்ஸி: ஒருவேளை நீயும் தீங்கையே நினைத்திருக்க மாட்டாய்? அவனது ஆத்திச்சூடியைக் கொண்டு அவனுக்கே 'பிதாக்கொலையை' கற்பித்தானே அந்தச் சிறு பிசாசு அவனும் கருதியிருக்க மாட்டான்? இயற்கைக்கு விகற்பமான அந்த இரு புதல்வர்கள் அவர்கள் கூட துன்பம் விளைவிக்க நினைத்தவர்கள் அல்ல? அவர்களைக் கருணைமிக்க கடவுள் ஓரிரவிலேயே வெட்டித் தீர்த்துவிட்டான்—ஒன்றுமேயறியாத ஆட்டுக்குட்டிகளைப் போன்றவர்கள்! ஒன்றுமே கெடுதியை நினைக்கவில்லை அவர்கள்! நீயும் இங்கே சூழ்ச்சி செய்யவேயில்லையே? என்னை எப்படிப் பைத்தியமாக்கி விடுவது என்பதைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே! ஏதேனும்

குற்றத்திற்காக எனக்கு மரணத்தை அளித்துவிடுவது - அதற்கு நீ சாட்சியாக இருப்பது - இவைதவறினல் எப்படிக் கொலையாளிகளை அமர்த்துவது - அல்லது எனது மாலைநேர மதுவிலே விஷத்தைக் கலப்பது - அல்லது அளவிற்கு மீறி மதுவெறியில் மயங்கிக் கிடக்கும்பொழுது என்னைத் தீர்த்துவிடுவது - இதைப்பற்றி யெல்லாம் நீ ஒன்றுமே சொல்லவில்லையே?

கடவுளைத் தவிர வேறு நீதிபதி நமக்குக் கிடையாது என்று கண்டாய்! இறைவன் எனக்கு என்ன தண்டனை விதித்துவிட்டான் என்பதையும் பார்த்தாய்! உங்களைத் தவிர வேறு யாருமே என்னை சிரச்சேதம் செய்ய முடியாது என்று ஸ்வர்க்கத்தில் விதிக்கப்பட்டிருக்கிறதோ! ஓ! இல்லை! நீ இதையெல்லாம் சொல்லவேயில்லையே?

லூக்ரிஷியா : இறைவா! எனக்கு உதவி செய்யமாட்டீரா? தாங்கள் என்மீது சாற்றுபவைகளை நான் நினைத்தவனுமல்ல.

செஞ்ஸி : வடிகட்டிய முழுப்பொய்! அதை மறுபடியும் கூறினல், உன்னைக் கொன்றுவிடுவேன். ஏன்? நேற்றிரவு பியாட்ரைஸ் விருந்தைக் குலைத்ததும் உன் ஆலோசனையால் தானே? சிலரை எனக்கெதிராகக் கிளறிவிட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளப்பார்த்தாய்! பிறகு எதையெண்ணி உன் நரம்புகள் ஒவ்வொன்றும் நடுங்குகின்றனவோ அதையே வெறுத்து நகைக்கப் பார்த்தாய். மனிதர்களுக்கு இருக்கிற தைரியம்தானே இருக்கும்? அதைவிட அதிகமான தைரியம் அவர்களிடம் இருக்கும் என்று

நீ மதிப்பிட்டாய். ஒரு சிலரே எனக்கும் அவர்களது கல்லறைக்கும் நடுவே நிற்கத் துணிவார்கள்.

லூக்ரிஷியா: அப்படிப் பயங்கரமாகப் பாரா தீர்கள்; என் முக்தியை ஆணையிட்டுச் சொல்கிறேன்; பியாட்ரைஸ் தீமை செய்யக் கருதிவளன்று. நீர் அவளது மாண்ட சகோதரர்களைப் பற்றிப் பேசியதை கேட்டதுவரையில், தீமை செய்யக் கருதியிருப்பாள் என்று நான் நினைக்கவில்லை.

செஞ்ஸி: தெய்வத்தைப் பழிக்கும் பொய்க் காரி! நீ இதற்கே அழிந்து போவாய்! நீ நடந்து செல்லும் கற்பாதை உன்னை எங்கே சேர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கிருயோ, அங்கேயே நான் உன்னை அழைத்துச் செல்வேன். எல்லாவற்றையும் செய்யும் துணிச்சல் கொண்டவர்களையன்றி வேறு யாரும் வாழக்கூடாது. இது என் ஆக்ஞை. அதைக் குறித்து கேள்வி யிடாதே. அடுத்த புதன்கிழமை வெளிப் போகிறேன். உனக்குத்தான் தெரியுமே காட்டு மிராண்டித்தனமான கல்மாளிகை - அதுதான் பேட் ரல்லா மாளிகை. அது நல்ல பாதுகாப்பான சுவர் களைக் கொண்டது. சுற்றிலும் அகழி இருக்கிறது. அதன் பாதாள அறைகளோ, கனத்த கோபுரங்களோ எப்பொழுதுமே கதைகளைக் கூறுபவையல்ல; அவை கேட்டும் கண்டுமிருக்கும் சம்பவங்களோ ஊமையர் களையும் பேசும்படி செய்யக் கூடியவை - ஏன் பின் தங்குகிருய்? பிரயாணத்திற்கு துரிதமாக சித்தமாகு. (லூக்ரிஷியா போகிருள்) எல்லாம் காணும் கதிரவன் பிரகாசிக்கிருன். தெருக்களில் மக்கள் சுறுசுறுப்புடன் கலந்து செல்வதைக் கேட்கிறேன். ஜன்னல்களின் மூலமாக பிரகாசமான ஆகாயத்தைக் காண்கிறேன்.

இது ஒரு அகண்ட பகட்டான இணையற்ற நாள்! ஒளி நிரம்பிய நாள்! ஒளி வீசும் நாள்! காதுகளும் கண்களும் நிறைந்து நோக்கிக் கேட்கும் நாள்! ஒவ்வொரு மூலைமுடுக்கும், துவாரமும், ஒளியால் நிரம்பப் பெற்றிருக்கிறது. இருளே! வா! நீ வந்தாலும் இந்நாளைப்பற்றி என்க்கேது கவலை? பகல் இரவு தெரியாது கலங்கச் செய்யும் காரியங்களைச் செய்வது இரவில்தான்; ஆகவே நான் இரவை விரும்புவேன். பயங்கர மூடுபனியில் தடவித்திரிய வேண்டியவள் அவள். வானிலே கதிரவன் இருப்பின், அவள் அவன் கிரணங்களைக் காணமுடியாது. அவன் உஷ்ணத்தையும் உணரமுடியாது. நான் கருதும் காரியம் என்னைப் பொறுத்தவரையில், எல்லாவற்றையும் அழித்துவிடும். நான் சாவைவிட இருண்ட இருளைக் கொண்டுள்ளேன். அவ்விருள் பூமியின் சாயலைவிட இருண்டது. இருண்ட மேகத்தில் தணிந்து கிடக்கும் சலனக் கிரணங்களைவிட இருண்டது. என் செயலை நோக்கி நான் சௌகரியமாக மறைந்து செல்கிறேன் - அது நடந்தேறட்டும்.

(செல்கிறான்)

அங்கம்—2 காட்சி—2

(வேடிகனில் ஒரு அறை. பேசிக்கொண்டே காமில்லோவும் கியாகோமாவும் வருகின்றனர்.)

காமில்லோ: ஒரு சட்டம் இருக்கிறது. அது சந்தேகமான சட்டம், அமுலில் இல்லாத சட்டமும் கூட. அதன் மூலமாக உணவுக்கும் உடைக்கும் மட்டும் ஏதாவது உனக்கு இடம் கிடைக்கக்கூடும்.

கியாகோமோ: அதற்குமேல் ஒன்றுமே கிடைக்காதா? ஐயோ! கடினமான சட்டம் அளிக்கும்

வசதியோ மிகவும் குறைவானது. கிழவனின் பேராசையே நன்கு நிதியளிக்கிறது. ஏதாவது கைத்தொழிலுக்காவது, வியாபாரத்திற்காவது என் தகப்பனுர் ஏன் என்னைப் பழக்கவில்லை? அப்பொழுது நான் உயர்குலத்தவரின் போக்குப்படி வளர்த்தப்பட்டிருக்கமாட்டேன். என் தினசரி உழைப்பால் என் உயர்ந்த தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதோ இயலவில்லை. ஒரு தனவானின் மூத்த புதல்வன். அவனது திறமையற்ற குணங்களின் வாரிசு. அவனது தேவைகள் அதிகமானவை. அதிகாரமோ குறுகியது. கார்டினல் காமில்லோ! மெல்லிய இறக்கைகளால் மும்முறை தைக்கப்பட்ட படுக்கை, ஆறு அரண்மனைகள், நூறு வேலையாட்கள், சுவை மிக்க உண்டி ஆகியவைகளிலிருந்து, இயற்கையாக எவ்வளவு தேவையோ அவ்வளவு தரப்படும் நிலைமைக்கு நீ தாழ்த்தப்பட்டால்—?

காமில்லோ: இல்லை. உன் வாக்குவாதத்திலும் காரணம் இருக்கிறது. ஆனல் அது முரட்டுத்தனமான காரணம்.

கியாகோமா: திடசித்தமுள்ளவன் அதைப் பொறுப்பது கடினமே. ஆனல் எனக்கு ஒரு மனைவியிருக்கிறுள். அவள் உயர் குடும்பத்திலே பிறந்த மங்கை. அவளது ஸ்திரீதனத்தை எவ்வித சாட்சியமும் பத்திரமுமின்றி என் தகப்பனுருக்கு அவர் கஷ்டநிலைமையில் கொடுத்தேன். என் குழந்தைகள் ஜீவனுள்ள உலகிலே வாழும் அழகிய பிறவிகள். அவர்களும் அவளது உணர்ச்சிகளையே கொண்டுள்ளனர். அவளோ, குழந்தைகளோ என்னை நொந்து கொண்டதேயில்லை. கார்டினல்! சட்டத்தையும் மீறிக்

குறுக்கிட்டு போப்பாண்டவர் அதிகாரம் செலுத்து வார் என்று நீ எண்ணுகிறுயா ?

காமில்லோ : உன் விசித்திரமான விஷயம் கடூரமாக இருந்தபோதிலும், சட்டத்தின் போக்கைப் போப்பாண்டவர் மாற்றமாட்டார். அவ்விரவில் நிகழ்ந்த புனிதமற்ற அந்த விருந்திற்குப் பின் அவரிடம் நான் பேசினேன். உன் தந்தையின் கொடூர மான செயல்களை நிறுத்தும்படி வேண்டினேன். அவ ரோ முகத்தைச் சுளித்துக்கொண்டு, 'குழந்தைகள் கீழ்ப்படியாமலிருக்கின்றன. தங்கள் தகப்பனுரின் இருதயத்தில் திகைப்பையும் பயித்தியத்தையும் கவ்வ விடுகின்றன. பல வருஷங்களாக கவனமாகப் போஷித்ததற்குப் பலனுக முரட்டுத்தனமான நிந்தனை களை அளிக்கின்றன. என் இருதயம் செஞ்ஸி பிரபுவிற் காகப் பச்சாதாபப்படுகிறது. சினங்கலந்த அவரது அன்பு ஒரு வேளை வெறுப்பை உண்டாக்கியிருக்கும். அதனுலே தீமை செய்யுமாறு கோபமூட்டப்படுகிருர் அவர். கிழவர்களுக்கும் யுவர்களுக்கும் நிகழும் இப் பெரிய போராட்டத்தில், நரைத்த மயிரும் நடுங்கும் சடலமும் கொண்ட நான், குறைகூறப்படாத நடு நிலைமை வகிக்கவேண்டும் என்று கூறினுர்.

(ஆர்சினோ வருகிருன்)

ஓ! ஆர்சினோவா ? இவ்வார்த்தைகளைக் கேட் டாயா ?

ஆர்சினோ: எந்த வார்த்தைகளை ?

பியாட்ரீஸ்: ஐயோ! அவற்றைத் திரும்பவும் கூருதே! எனக்கு விமோசனமே கிடையாது. நானுக வே ஏதேனும் விமோசனத்தைச் சம்பாதித்தாலல்லது

வேறு வழியில்லை. நானே அபாயத்திற்குள் சரிவின் கரைக்குத் துரத்தப்பட்டு விட்டேன். ஆனால் நிரபராதிகளான என் சகோதரியும் ஒரே சகோதரனும் கண்ணெதிரே சாகிறார்கள் என்பதைச் சொல்லு. இந்நாட்டுக் கொடுமையாளர்களான கேலஸ்விஸ்கோண்டி, போர்கியோ, எஸ்வீன் ஆகியோர், கேவலமான அடிமையும் அனுபவித்திராத துன்பங்கள் அவர்கள் மீது சுமத்துகின்றனர். அவர்களுக்குப் பாதுகாப்புக் கிட்டுமா?

காமில்லோ : ஏன் ! போப்பாண்டவருக்கு அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டால், அவர் எப்படி அதை மறுப்பார் என்று எனக்குப் புலப்படவில்லை. தந்தையின் அதிகாரச் சாயலே போப்பாண்டவர். அதனால் தந்தையின் அதிகாரத்தைப் பலஹீனப்படுத்தும் பயங்கரமான உதாரணமாக இதைக் கருதுகிறார். என்னை மன்னியுங்கள், தாமதிக்க முடியாத அவசர ஜோலிகள் எனக்கு இருக்கின்றன.

[காமில்லோ அகலுகிறான்]

கியாகோமா : ஆனால், ஆர்சினோ, இவ்விண்ணப்பத்தை நீ வைத்துக்கொள். இக்காரணங்களுக்காக அதைச் சமர்ப்பிக்காமலிருப்பதே நல்லது.

ஆர்சினோ : அதை நான் சமர்ப்பித்தேன். எனது தீர்க்கமான இறைஞ்சல்களுடனும், துரிதமான ஆர்வத்துடனும் அதை மேலும் அச்சுறுத்தினேன். ஆனால், அது பதிலளிக்கப்படாமல் திருப்பப்பட்டுவிட்டது. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்த்தரமான செயல்கள் எவ்வித நம்பிக்கையையும் உண்மையாகவே சிதறடிக்கக் கூடியவை. அவை

போப்பாண்டவரின் அதிருப்தியைக் குற்றவாளியிட மிருந்து, குற்றங் கூறுவோரின் பேரில் மாற்றிவிட் டன. காமில்லோ புகன்றதிலிருந்து நான் யூகிப்பது இதுதான்.

கியாகோமா: நண்பனே! அரண்மனைகளின் நடைப் பைசாசமான தங்கம் போப்பாண்டவரின் அமைதியினுள் மூச்சுவிட்டிருக்கும். அனலால் தகிக் கப்படும் தேளைப்போல் நாம் தனியாக விடப்பட்டு விட்டோம். :மரணத்தை நோக்கிச் செல்வதையன்றி, வேறு எதை நம்மால் செய்ய முடியும்? ஏனென்றால் புனித பிதாவின் பெயரால் நம்மைக் கொல்லும் கொலையாளியே பாதுகாக்கப்படுகிறான். அப்படி மட்டும் இல்லாமலிருந்தால்........?

[திடீரென்று மௌனம்]

ஆர்சினோ: என்ன? உன் அபிப்பிராயத்தை வெளியிட அஞ்சுவானேன்? வார்த்தைகள், அவைக ளால் செய்யப்படும் செயல்கள் எவ்வளவு புனிதமான வையோ, அவ்வளவு புனிதமானவை. தான் பூஜிக் கும் கடவுளின் மீதே ஆணையிட்டு உண்மையை மறுக் கிறான் பாதிரி. தன் தீர்ப்பினால் உண்மையைக் கதறி யழும்படி செய்கிறான் நீதிபதி. என்னைப்போல் புத்தி மதியைச் சிருஷ்டிக்கும் நண்பன்கூட, அப்புத்திமதி யைத்தன் சுயநலனைக்கருதித் துரோக வலையால்போர் த்துவிடுகிறான். தகப்பன் என்ற பெயரோ மகா புனித மானது. நீசனான ஒரு பிதா அப்பெயரின் புனிதத் தையே பாழ்படுத்தி விடுகிறான்.

கியாகோமா: நான் நினைப்பதென்னவென்று வினவாதே. இஷ்டமில்லாத மூளை, இல்லாதவைகளை

யெல்லாம் சிருஷ்டிசெய்யும். கருத்துக்கள் நிறைந் தது சிந்தனே. அதைக்கூறச் சொற்களேயில்லே. நாவைப்போல் வார்த்தைகளிலே சிந்தனே வந்துவிடுவதில்லே. சிந்தனேயின் கோரமே மனக்கண்ணின் முன்பாக மங்குகிறது. இது நம் நம்பிக்கை. நீ கேட்பதை நினேக்கவும் மறுக்கிறது என் இருதயம்.

ஆர்சினே: ஆனுல் நண்பனின் இருதயம்; மனதின் உட்குகை போன்றது. மனக்குகையிலே நாம் அமர்ந்து உலகத்து அகன்ற பார்வையிலிருந்து விலகி விடுகிரும். எங்கும் பரவும் காற்றிலிருந்தும்கூட விலகிவிடுகிரும். நான் எதை சந்தேகித்தேன் என்பதைப் பார்த்தாயா?

கியாகோமா: என்னே இப்பொழுது விட்டுவிடு. கானகத்தில் நள்ளிரவில் வழிதப்பியவன், கானக மார்க்கத்தில் காணும் தீமையற்ற பிரயாணியைக் கூட 'கொலேயாளி' யாக இருப்பானென்று கருதி வழி கேளாது விட்டு விடுகிருன். அப்படித்தான் இருக்கிறேன் நான். நீ என் நண்பன் என்பதை நானறிவேன். என் ஜீவான்மாவிடம் துணிந்து பேசுபவைகளே உன்னிடமும் நம்பி உரைப்பேன். ஆனுல் இப்பொழுது என் இருதயம் கனத்துவிட்டது. உறக்கமற்ற, கவலே குமுறும் ஓரிரவு முழுமையும் நான் யோசிக்கவேண்டும். என்னே மன்னித்துவிடு. நாம் விடை பெற்றுக் கொள்வோம்! பிரிவோம்! என் சுய நிலேமையையே நான் சந்தேகிக்கிறேன். அமைதி கனியும் சொற்களே அதற்கும் கூறவேண்டும்.

ஆர்சினே: வந்தனம்! உன் நினேவுகள் மேம்

பட்டவைகளாக இருக்கட்டும். அல்லது துணிச்சல் மிக்கவைகளாக இருக்கட்டும்.

(கியாகோமா போகிறுன்)

குளிர்ந்த தேறுதல்களால் அவனது அபிலாஷையை வளர்த்தும்படி கார்டினல் காமில்லோவை அனுப்பிவிட்டேன். அது அதிருஷ்டவசமாக என் நெருங்கிய திட்டங்களுக்கு உபயோகமாக இருக்கிறது. அவர்களது உள்ளங்களேயும் மற்றவர்களது மனங்களேயும் பகுப்பதே இக்குடும்பத்து தந்திரங்களில் ஒன்ருகிவிட்டது. அத்தகைய சுய பாகுபாடு பயங்கர ரகசியங்களே மனதிற்குப் போதிக்கும். எதைச் செய்வது, எதை யோசிப்பது என்று தெரிந்தும் இருண்டகாரியங்களில் வீழ்ந்துவிட நம் அதிகாரத்திற்கு ஆசையூட்டும். அப்படித்தான் செஞ்ஸியும் குழியில் விழுந்தான். பியாட்ரைஸ் வெளியிட்ட தகவல் வெறுக்காததையே என்னே வெறுக்கும்படி செய்தது என் கண்ணியத்திற்கும் கீழ்ப்பட்டவனுகவே நான் என்னேக் காட்டிக்கொள்ளுகிறேன். அப்படிக் காட்டிக் கொள்ளுவதும், பாதிக்குக் கிட்டத் தட்டப் பழக்கமாகிவிட்டது. குறைந்தவிஷமத்தையே நான் செய்வேன்; இந்த எண்ணம் குற்றம் கூறும் மனசாட்சிக்குக் கூலியளிப்பது போன்றதாகும்.

(யோசித்து)

இப்பொழுது செஞ்ஸி கொலே செய்யப்பட்டால் நமக்கு என்ன கெடுதி இருக்கிறது? என்னுலேயே கொலே செய்யப்பட்டாலும் என்ன? அச்செய்கையால் ஏற்படும் பாபம், ஆபத்துக்களேத் தவிர்த்துவிட்டு லாபத்தைமட்டும் எடுத்துக் கொண்டால் என்ன? எம்மனிதனின் வார்த்தைகள் உதைதயையும் மிஞ்சு

கின்றனவோ, அவனுக்கே உலகத்து ஜீவராசிகளில் நான் அஞ்சுகிறேன். அப்படிப்பட்ட மனிதன் செஞ்ஸி. செஞ்ஸி உயிரோடு உள்ளபொழுது அவன் மகளை எவனுவது அடைந்தால், அவனுக்கு கிடைக்கும் ஸ்திரீதனம் ரகசியமான கல்லறைதான் - ஓ! அழகிய பியாட்ரைஸ்! நான் உன்னைக் காதலிக்காமலே இருந்திருக்கலாகாதா? அப்படிக் காதலித்தாலும், ஆபத்து, நிதி, ஆசைக்கும் செயலிற்கு மிடையே குறுக்கிடும் முகச்சுளிப்புகள் ஆகியவைகளைப் புறக்கணித்திருக்கலாகாதா? அல்லது அவைகளை நோக்கி நகைக்கலாகாதா? இதிலிருந்து தப்ப மார்க்கமில்லை.... அவளது பிரகாசமான உருவம் பூஜை மேடையண்டை என்னருகிலே மண்டியிடுகிறது; மனிதர்களின் இல்லங்களுக்கு என்னைப் பின்தொடருகிறது. என் உறக்கத்தில் கவலையுள்ள கனவுகளை நிரப்புகிறது. விழித்துப்பார்த்தால், கொதிக்கும் நீர்நெருப்புப் போலிருக்கிறது என் ரத்தம். மயக்கமான என் ஈரத் தலையை அடித்துக்கொண்டால், சூடான என் கைச் சுவடு அதைத் தகிக்கிறது. அவள் பெயரை எவனுவது அன்னியன் கூறினுல், என் இருதயம் துடிதுடிக்கிறது. அனுபவிக்காத ஆனந்தங்களின் நிழலைப் பயனின்றிப் பற்றுகிறேன் நான். சுயசிருஷ்டிச் சாயலை பலஹீனமான கருத்துக்கள் அரைவாசிகூடச் சொந்தமாக்கிக் கொள்வதில்லை. இப்பொழுது வாழ்வு பிணிபட்டதாக இருக்கிறது. இதை நீண்டகாலம் அனுபவிக்கமாட்டேன். கியாகோமாவின் செப்பனிடப்படாத ஆசைகளிலிருந்து எனக்குப் பிரியமான ஆசைகளை உருவாக்கி விடுவேன். எல்லாவற்றின் முடிவையும் காண்கிறேன் கோபுர உச்சியிலிருந்து காண்ப

தைப் போல்: செஞ்ஸி மடிகிறான். அவள் சகோதரன் ஒரு ரகசியத்தால் என்னுடன் பிணைக்கப்படுகிறான். கல்லறையைப்போல் நிச்சயமாக ரகசியம் அது. தன் ஆசை நிறைவேறிய பயங்கர மார்க்கத்தை விவாதிக்காமல், பக்தியாக இருக்கிறாள் அவள் அன்னை. அவளோ! மயங்கும் இருதயமே! இன்னொரு முறை தைரியம் கொள். நண்பனற்ற நங்கையை உன்னுடன் பிணைக்கத் துணிவது எது? வெற்றியை அச்சுறுத்தும் எதிர்கால நோக்கை காண்கிறேன். பயங்கர சம்பவங்கள் அருகில் உள்ளபோது, ஏதோ கண்ணுக்குத் தென்படாத தெய்வீகம், மனிதர்களின் மனதைக் கிளறி, இருண்ட எண்ணங்களைக் காட்டுகிறது. இன்னலின் கருவியாகப் பயன்படுத்தப்படாதவன் சுபீட்சமாக வாழ்கிறான். ராஜ்யங்களைச் சிருஷ்டித்து, மற்றவர்களின் இருதயங்களைப் பலியிட்டுத் தானும் அடிமையாம் பைசாசத்தை......நான் செய்வதைப் போல்.........போற்றுவோன் யார்?

அங்கம் — 3 காட்சி — 1

[செஞ்ஸி அரண்மனையில் ஒரு பகுதி. லூக்ரிஷியாவும் பியாட்ரைஸும்.]

பியாட்ரைஸ்: (தள்ளாடிக்கொண்டும் உரக்கப் பேசியபடியும் வருகிறாள்) அந்தக் கைக்குட்டையை இப்படிக்கொடு. என் மூளையே கெட்டுவிட்டது. என் விழிகளில் ரத்தம் நிரம்பிவிட்டது. .... எனக்காக அவற்றைத் துடைத்துவிடு .... என்னால் மங்கலாகவே காணமுடிகிறது ....

லூக்ரிஷியா: பிரிய குழந்தாய்! உனக்கு ஒன்றும் காயமே காணேமே .... உன் நெற்றியில் துளிர்க்கும் பனித்துளியே அது .... ஐயோ! ஐயோ! .... என்ன நேர்ந்தது?

பியாட்ரைஸ்: ஏன் இக்கேசம் இப்படிக் கலைகிறது? நான் இறுக்கிக்கட்டியும் அதன் பறக்கும் கதிர்கள் கண்களை ஏனிப்படிக் குருடாக்கவேண்டும்? — ஆ! அகோரம்! தரை என் பாதத்திற்குக் கீழே அழுந்துகிறதே! சுவர்கள் சுற்றிச் சுற்றி சுழலமிடுகின்றனவே! அங்கே அமைதியுடன் அசையாமல் நிற்கிறாளே ஒரு மங்கை, அவள் அழுகிறாள். உலகம் சுழல்வதைப்போல் நானும் மயக்கத்துடன் நகருகிறேன். .... கடவுளே! அழகிய நீலவானிலும் ரத்தக்கறைபட்டிருக்கிறது. மண்ணில் பிரகாசிக்கும் கதிரவன் ஒளியும் கடுமையாகவே இருக்கிறதே! சவக்குழிகளில் பிணங்களின் நாற்றத்தைப்போல், காற்றும் மாறுபாடு அடைகிறதே! அப்பா! எனக்கு திணறுகிறதே! என்னைச்சுற்றி கருமையான இன்னல் மூடுபனி தவழ்ந்து வருகிறதே! ... அது நிரந்தரமானதாகவும், கனமானதாகவும், கடுமையானதாகவும் புலப்படுகிறதே! அதை என்னிடமிருந்து விரட்டுவது முடியாது. அது என் அவயவங்களையும் விரல்களையும் பிணைத்து, தசைகளினூடே அரித்துச்சென்று, தசைகளைப் பாழ்படுத்தி, புனிதமான மனுஷ்ய ஜீவான்மாவையும் விஷமாக்கிவிடுகிறது. கடவுளே! பயித்தியக்காரன் எப்படியிருந்தானே தெரியாது. சந்தேகமின்றி நான் பயித்தியமாகிவிட்டேன் (இன்னமும் ஆக்குரோஷத்துடன்) இல்லை. நான் இறந்தேவிட்டேன்! என் ஜீவான்மா தடையின்றி காற்றிலே

கலந்துவிடும். இந்த தசையும் நரம்பும் நிறைந்த அவயவங்கள் அதைச் சுவரிட்டுப் பாதுகாக்கின்றன. (சற்றே மௌனம்) என்ன அசட்டுத்தனமான கோர எண்ணம் இது? அதுபோய்விட்டது; ஆனால் அதன் சுமை இன்னமும் என் மங்கிய விழிகளின் முன்பாக காணப்படுகிறது. - என் இருதயம் சோர்ந்துவிட்டது! கடவுளே! என்ன வாழ்வு இது! என்ன வாழ்க்கை இது! என்ன துன்பம் இது!

லூக்ரிஷியா: குழந்தாய்! உன்னைக் கவலையடையச்செய்வது எது? .... இவளோ பதில் கூறவே மாட்டேன் என்கிறுள். இவள் ஆவியோ இன்னலை யூகிக்கிறது. ஆனால் இன்னலின் காரணத்தை அறியவில்லை. அது தோன்றிய காரணத்தைக் கஷ்டங்கள் வரண்டு போகச்செய்துவிட்டு ......

பியாட்ரைஸ்: (விசித்ரமாக) - தகப்பனைக் கொலை செய்வதைப்போல்தான். கஷ்டங்கள் அதன் தகப்பனைக் கொலை செய்துவிட்டன. ஆனால் என் தகப்பனுர் கொலை செய்யப்பட்டதைப் போலல்ல .... கடவுளே! நான் யார்? —

லூக்ரிஷியா: பிரிய குழந்தாய்! உன் பிதா உன்னை என்னம்மா செய்துவிட்டார்?

பியாட்ரைஸ்: (சந்தேகத்துடன்) கேள்வி கேட்பது யார்? எனக்குத்தான் தகப்பனே கிடையாதே. (தனித்து) என்னைப்போஷிக்கும் இவள் பயித்தியக்கார நிலையத்து மருத்துவச்சி போலிருக்கிறது. (மெல்லிய தணிந்த குரலில் லூக்ரிஷியாவிடம்) மக்களால் நிந்திக்கப்படும் அபாக்யவதி பியாட்ரைஸ் நானே என்று நினைத்தேன். இது

உனக்குத் தெரியுமா? அவளைத்தான் அவள் தகப்பன் சிதைந்த மயிரைப்பற்றி ஒவ்வொரு மண்டபமாக ஓட்டி உதைப்பது. அப்படிச்செய்வது சிற்சில சமயங்களில்தான். மற்ற சமயங்களில் நிர்வாணமாக குளிர்ந்த அறைகளில் அடைத்து வைக்கப்படுகிறாள். அங்கே பலவித ஜந்துக்கள் சஞ்சரிக்கின்றன. பசியால் அவள் பரதவிக்கச் செய்யப்படுகிறாள். அந்தப் புதியரகமான ஜந்துக்களின் இறைச்சியைத்தான் அவள் புசித்தாக வேண்டும்..............இந்த சோக ரசக் கதையை நான் எண்ணியதைவிட மேலாக கனவுகளில் நடித்தேன்........இல்லை! அது இப்படியிராது. உலகம் அகன்றது. அதில் கோரமான செயல்கள் இருக்கின்றன. நன்மையும் தீமையும் கலந்த விசித்திரமான குழப்பங்கள் இருக்கின்றன. செயலாற்ற ஒரு இருதயமேனும் இருந்துவிட்டால் அதைப்பற்றிக் கேவலமான சம்சயங்கள் தலையெடுக்கின்றன. ஆனால் கற்பனை இதைப்போன்ற செயலை உருவகித்ததே கிடையாது. (நிறுத்தி, திரும்பவும் நினைவையடைந்து) நீங்கள் யார்? பயங்கரமான எதிர்நோக்குகளில் நான் மடியுமுன் சத்தியம் செய்யுங்கள். உமது வெளித்தோற்றமா, அல்லது உண்மை சொரூபமா என்று சத்தியம் செய்யுங்கள்........அம்மா!

லூக்ரிஷியா: ஓ! பிரிய குழந்தாய்!....உனக்குத் தெரியுமே........

பியாட்ரைஸ்: அதை நீங்கள் சொல்ல வேண்டாம். இது உண்மையாக இருக்குமானால், மற்றதும் உண்மையாகவே இருக்கவேண்டும். உறுதியான அழியாத உண்மையாக இருக்கும் இது. மாறாத அழியாத உண்மையாக இருக்கும் இது. இது செஞ்ஸி அரண்

மனே. நீர் லூக்ரிஷியா. நான் பியாட்ரைஸ். நான் பல கடுஞ் சொற்களைப் பேசிவிட்டேன். இனி அவற்றைப் பேசமாட்டேன். அம்மா! வாருங்கள்! அருகில் வாருங்கள்! இந்நிமிட முதல் நான்........

[அவள் குரல் மெள்ள குறைகிறது]

லூக்ரிஷியா: ஐயோ, குழந்தாய்! உனக்கு என்ன நேர்ந்தது? உன் தகப்பனுர் செய்ததுதான் என்ன?

பியாட்ரைஸ்: நான் என்னமோ செய்துவிட்டேன்? நான் ஒன்றுமே யறியாத நிரபராதியல்லவா? என்னைக் கடந்தகாலம் முதலாகத் துன்புறுத்தும், அதிகார மமதையும் நரைத்த கேசமும் கொண்ட ஒருவர் தகப்பனுராக இருப்பதுகூடவா ஒரு குற்றம்! - ஓ! நான் யார்? என் பெயரென்னவோ? என் இருப்பிடம் எதுவோ? என் நினைவுகள் எவைகளோ? திகைப்பிலும் வாழும் நினைவுகள் யாவையோ?

லூக்ரிஷியா: அவர் ஒரு முரட்டுத்தனமான கொடுங்கோலர். அது உண்மைதான், குழந்தாய். சாவு ஒன்றே நம்மை விடுவிக்கும் என்பதை நாம் அறிவோம். அச்சாவு நமதாகவும் இருக்கலாம். அவருடையதாகவும் இருக்கலாம். ஆனுல் கொடிய இன்னல்கள், மரணம் கலந்த அட்டூழியங்கள் ஆகியவற்றைத் தவிர வேறு என்ன அவரால் செய்யமுடியும்? உன் வெளித்தோற்றம் உள்தோற்றத்திற்கு ஏற்றதாக இல்லையே! உனது விழிகள் விசித்திரமான ஒளியைப் பரப்புகின்றனவே. என்னிடம் பேசமாட்டாயா? உன் விரல்களைப் பிணைத்து கரங்களைப் பிசைந்து கொள்ளாதே.

பியாட்ரைஸ்: அமைதியற்ற வாழ்வு அக்கரங்களிலேதான் அடைந்து துன்புறுகிறது. பேச ஆரம்பித்தால் பித்துப் பிடித்தவளாகி விடுகிறேன் நான். ஆ! இதற்கு ஏதாவது செய்யவேண்டும். என்ன செய்வது என்று எனக்கே புலப்படவில்லை. நான் பட்ட கஷ்டங்களை வெற்றுச் சாயலாக்கும்படி ஏதேனும் செய்ய வேண்டும். அது குணப்படுத்த முடியாத முடிபுகளை அழிக்கவேண்டும். அம்மாதிரி ஏதேனும் நிவாரணை செய்து தீரவேண்டும். அல்லது அவற்றையே அனுபவித்தாக வேண்டும். எது நிகழும் என்று தெரிந்து விட்டால் நான் அமைதியாகவும் மௌனமாகவுமிருந்து விடுவேன். பிறகு எத்தகைய நடவடிக்கைகளையும் நடத்தமாட்டேன். ஆனால் இப்பொழுது.... ஓ, என் ரத்தமே! நீயும் என் பிதாவின் உதிரம்தானே. ரத்தக் குழாய்களில் சுழன்றோடி, அழுக்கடைந்த மண்மீது வீழ்வதால் என் குற்றங்கள் கழுவப்பட்டு விடுமானால், எனக்குத் தண்டனை அளிக்கப்பட்டுவிடுமானால்....இல்லை! அப்படியிருக்கமுடியாது. அனைத்தையும் கண்டும், தீச்செயல்களே நிகழும்படி மேலுள்ள இறைவன் அனுமதிக்கிறார் என்று சிலர் சந்தேகித்து மரணமடைகிறார்கள். அதே நம்பிக்கை எனக்கும் இருக்கிறது. எவ்வித பீதியும் அதை அழித்துவிட முடியாது.

லூக்ரிஷியா: ஏதேனும் கொடிய கெடுதியாக இருக்க வேண்டும் அது. அது என்னவென்று என்னால் யூகிக்க முடியவில்லையே. நான் பயப்படுவேனே என்று அஞ்சி உன் கஷ்டங்களைத் துக்கத்தில் மறைத்து விடாதே.

பியாட்ரைஸ்: நான் அவற்றை மறைக்கவில்லை

நான் என்ன சொல்லவேண்டும் என்று நீர் விரும்புகிறீர்? என் உள்ளத்திலே எவ்விதச் சாயலையும் உருவகிக்க என்னால் முடியாது. என்னை இவ்விதம் மாற்றிய செயலைப்பற்றித்தான் நினைக்கமுடியும். என் நினைவுகள் பைசாசத்தைப் போல் பரந்து விரிந்து உருவற்ற பீதியை நிரப்புகின்றன. வார்த்தைகளிலே, நேர்மைக்குத் தூண்டிலாக விளங்கும் அந்த நினைவுகளை நீ கேட்கவேண்டும். என் கஷ்டங்களைக் கூறுவோர் என்னைத்தவிர யாருமேயில்லை. வேறு யாருக்காவது தெரிந்திருக்குமானால் என்னைப்போல் அவர் சாக வேண்டியதுதான். அல்லது நான் செய்ததைப் போல் அவற்றைப் பற்றிய நினைவையே விட்டுவிட வேண்டும். சாவே! சாவே! உன்னை ஒரு தண்டனையென்றும், வெகுமதியென்றும் நம் சட்டங்களும் சமயங்களும் கூறுகின்றனவே, அதில் எது சரியானது?

லூக்ரிஷியா: அறியாமையே ஆனந்தம். சுவர்க்கத்திற்குச் செல்லும் வரை நீ எவ்வளவு கஷ்டப்பட்டாலும், நீயாக ஒன்றும் தீமை செய்யவில்லை. மரணம் குற்றத்திற்குத்தான் தண்டனை சாவற்ற நிலைக்கு இழுத்துச் செல்லும் பாதையில் தூவப்பட்டுள்ள முட்களை மிதித்து நடந்து செல்வதற்கு அளிக்கப் படும் வெகுமதியும் மரணமே.

பியாட்ரைஸ்: சாவு......ஆம்! அது குற்றத்திற்குத் தண்டனை. கடவுளே! நான் ஆராய்ந்து முடிவு காணும் பொழுதே மனக்குழப்பத்தை உண்டாக்கி விடாதீர்! இந்த அவயவங்கள் தாங்கள் சிருஷ்டித்த கோவில். நான் வாழ்ந்து அவ்வுடலைத் தாங்கள் வெறுக்கும் செயல்களின் குகையாக மாற்றிக் கொள்வ

தானால், அது வேண்டவே வேண்டாம். தற்கொலை.... அது தப்பிச் செல்லும் மார்க்கமல்ல. ஏன் தெரியுமா? நம் இச்சைக்கும், அதன் இச்சைக்கும் இடையே ஆண்டவனின் ஆக்கினை நரகத்தைப் போல் கொட்டாவி விடுகிறது........ஓ! அழிவு கொண்டது அகிலம், நான் படும் அவஸ்தைகளினூடே என்னைக் காப்பாற்றிச் செல்லும் சட்டங்களையோ, நீதிபதிகளையோ காணவே காணோம்.

(ஆர்சினோ வருகிறான்)

(அவனை அவள் மெள்ள நெருங்கி) வா! நண்பனே வா! நாம் கடைசிமுறையாகச் சந்தித்த பிறகு பெருத்த விசித்திர இன்னலை அனுபவித்துவிட்டேன். அதை உனக்குச் சொல்லத் துடிதுடிக்கிறது என் மனம். மரணமோ வாழ்வோ எனக்கு ஓய்வை அளிக்க முடியாது. என்ன கஷ்டம் அது என்று வினவாதே. ஏன் தெரியுமா? அக்கஷ்டங்கள் உருவற்றவை நாவினாலும் கூற லாயக்கற்றவை.

ஆர்சினோ: உன்னை இப்படிக் கஷ்டப்படுத்தியவன் யார்?

பியாட்ரைஸ்: பயங்கரமான பெயர்தான். 'தகப்பன்' என்று சொல்லுகிறது உலகம் அவனை.

ஆர்சினோ: அப்படியிருக்க முடியாது என்று....

பியா: அது எப்படியிருக்குமோ, இருக்காதோ, அதைப்பற்றிக் கவலையில்லை. அது அப்படித்தான் இருந்தது; அப்படியே இருக்கிறது. மறுபடியும் அப்படியே இருக்கக்கூடாது அது. அதற்கு ஏதேனும் வழி கூறுவாயா? சாக நினைத்தேன் நான். ஆனால், மதசம்பந்தமான பீதி என்னைத் தடுக்கிறது.

சாவுமட்டும் மனவெழுச்சிக்குப் புகலிடமாகாது. என்ன சொல்லு?

ஆர்சினே: அச்செயல்களைப் பற்றிக் குற்றம் கூறி முறையிடு. சட்டம் பழி வாங்கட்டுமே.

பியாட்ரைஸ்: கன்னெஞ்சு படைத்த ஆலோசகரே! அக்குற்றத்தை விளக்க ஒரு வார்த்தையைக் கண்டு பிடித்துவிட்டால் போதும். பிறகு இருதயத்தை வெடிக்கச் செய்யும் அந்த ரகசியத்தை என் நாக்குப் பட்டாசு வெடிபோல் வெளிப்படுத்திவிடும். எல்லோரும் தாழ்வாகக் கூறும் கெட்ட பெயருடனே என் பெயரின் அப்பழுக்கற்ற பிராபல்யமும் அடிபடட்டும். அது ஒரு வேடிக்கை. சாதாரணமான பேச்சு. ஆச்சரியமான பேச்சு. - அது முடிந்தால் போதும். ஆனல் அதுவோ என்றும் முடியாது. குற்றவாளியின் செல்வக்குவியலை நினைந்துபார். பயங்கரமான அவன் வெறுப்பை யோசி. வாதியின் விசித்திர கோரத்தை யோசித்துப்பார். சுழலமிடும் குழப்பமான எண்ணங்களையும், உணர்ச்சி மிக்க பேச்சுக்களையும் சிந்திப்பாயாக கோரக் குறிப்புகளில் போர்த்தப்பட்ட, நினைக்கவும் கொடிய, முணுமுணுப்புக்களில்........ஓ! எனக்கும் நிவாரணையா?

ஆர்சினே: அப்படியானல் கஷ்டங்களை அனுபவித்தே தீரவேண்டும்.

பியாட்ரைஸ்: அனுபவிப்பதா, ஆர்சினே? உன் யோசனை பயனளிக்காது போலிருக்கிறதே. (ஆர்சினேவை விட்டுத் திரும்பி, தன்னுள்ளாகவே) ஓ! எல்லாவற்றையும் யோசித்து திடீரென்று செய்ய வேண்டும். எண்ணங்கள் நிர்ணயிக்க முடியாத

மூடுபனியைப் போன்றுள்ளன. சாயலின் பின்னர் சாயலாகத் தோன்றி இருளை அதிகரிப்பவை போல் அவை எழுகின்றன.

ஆர்சினோ: குற்றவாளி வாழவேண்டுமா? தீய செயல்களில் அவன் வெற்றிகாண்பதா? கொடியதோ, கொடியதல்லவோ, அவன் குற்றத்தை உன் உடைமையாக்கிக் கொள்வதா? முடிவிலே நீ முற்றிலும் அழிந்து விடுவாய். நீ அனுமதிக்கும் கூக்குரலுக்கும் கீழ்ப்படிந்து போய்விடுவாய்.

பியாட்ரைஸ்: (தனக்குள்) உறுதியான மரணமே! உனது சாயல் இருமுகமுள்ளது. உலகத்தின் ஓரே நியாயவாதி நீயேதான். நேரிய சட்ட அறிவாளியும் நீயே.

(எண்ணங்களில் ஆழ்ந்தவளாகச் செல்கிறாள்)

லூக்ரிஷியா: இறைவனின் ஒளி பழிவாங்கும் பொருட்டுப் புவியில் இறங்குமானால்......

ஆர்சினோ: கடவுளை நிந்திக்காதே! இறைவன் தன் லீலைகளை உலகிலே விளையாடுகிறான். லீலைகளின் தவறுகளை மனுஷ்யர்களிடம் ஒப்படைத்து விடுகிறான். மனிதர்கள் கவனியாவிட்டால் குற்றங்களைத் தண்டிப்பதற்காக........

லூக்ரிஷியா: ஆனால், என்னைப் போன்ற ஒரு அயோக்கிய மங்கை, நீதி, அபிப்பிராயம், சட்டம், அதிகாரம் அனைத்தையும் நையாண்டி செய்வாளானால்? குற்றங்களை நடுங்கச் செய்ய வேறு முறையிடு எதுவுமே இல்லாது போனால்? - இயற்கைக்குப் புறம்பான, விசித்திரமான, கொடுமைகள் நம் நம்பிக்கை

யையும் மீறிப் போகுமானால்? கடவுளே! குறைபாடுகளை நிவர்த்திக்கப் பயன்படும் அதே காரணங்கள், குற்றவாளிக்கு வெற்றியை அளித்துவிடுமானால்? - குற்றவாளிக்கென்று விதிக்கப்பட்டுள்ள தண்டனையைவிடக் கேவலமான கொடிய தண்டனை கஷ்டப்படுவோருக்கே அளிக்கப்படுமானால்?.

ஆர்சினே: அப்படி நினைக்காதே. குறையுள்ள இடத்தை நாடி நிவாரணையும் வரும். தைரியமாக நாம் நிவாரணையை எட்டிப் பிடிக்கவேண்டும்.

லூக்ரிஷியா: எப்படி? நிச்சயமாக நிவாரணை கிட்டும் வழி இருக்குமென்று எனக்குப் புலப்படவில்லை; ஆனால் நிவாரணையை எட்டிப்பிடிப்பது நல்லதென்றே எனக்கு........

ஆர்சினே: இந்த வயோதிகத்தில் அவர் ஏன் பியாட்ரைஸை அவஸ்தைப்படுத்த வேண்டும்? எனக்கு ஏற்படும் யூகம் இதுதான். அந்த அவஸ்தைகள் பியாட்ரைஸுக்கு வெறுப்பையும் அவமதிப்பையும் அளிக்கின்றன. பழிவாங்கும் ஒரே கடமையை மட்டும் அவளிடம் விட்டு வைத்திருக்கின்றன. தீமைகளிடமிருந்து அகன்று, தஞ்சம்புக இருப்பவள் நீ ஒருவளே - எனக்கும் ஒரே யோசனைதான் தோன்றுகிறது.

லூக்ரிஷியா: அவைகளிலிருந்து உதவியையோ அனுசரணையையோ நாம் எதிர்பார்க்க முடியாது.

(பியாட்ரைஸ் முன்வருகிறாள்)

பியாட்ரைஸ்: ஆர்சினே! சாந்தமாக இரு. கண்ணியமுள்ள அம்மா! பொறுமை, மரியாதை, வெறுப்பு, பீதி, தினசரிவாழ்வின் தடங்கல்கள் ஆகிய

வைகள் பால்யமுதலே இருந்து வந்திருக்கின்றன. ஆனால் அவை இப்பொழுது புனிதமான என் வேண்டு கோளின் கேலிச் சரக்குகளாகி விட்டன. அதிகப்ப டியான சட்டைகளை அணிவதைப் போல், நீயோ அவற்றைத் தள்ளிவைத்து விடுகிறாய். நான் ஒரு தவறைப் பொறுமையுடன் அனுபவித்தேன் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். சொல்வதற்கும் முடியாத தவறு அது; ஆனால் அதற்காகப் பச்சாதா பப்படவும் வேண்டியிருக்கிறது. தவறுதலும் பச்சா தாபமும் கடந்த நிகழ்ச்சிகளே. பாவச்சுமை மிக்க ஆன் மாவின்மீது இன்னமும் குற்றங்களைச் சுமத்துவது, நீ கனவிலும் கருதாத காரியம். நான் இறைவனிடமும் இறைஞ்சினேன். என் இருதயத்திடமும் பேசி னேன். என் எண்ணங்களை அலசிப்பார்த்தேன். முடிவாக நேர்மையைக் கண்டேன். ஆர்சினே! நீ என் நண்பன்தானா? போலி நண்பனா? உண்மை யான நண்பனா? நான் பேசுமுன் உண்மையைச் சத்திய மிட்டுச் சொல்.

ஆர்சினே: என் தந்திரங்கள், வல்லமை, அமைதி, இன்னமும் என் உடைமைகள் அனைத்தை யும் தங்கள் ஆக்ஞைக்குக் கீழ்ப்படியச் சமர்ப்பணம் செய்வதாக நான் சத்தியம் செய்கிறேன்.

லூக்ரிஷியா: நம்மால் அவருக்கு மரணத்தை அளிக்க முடியுமா? நீ என்ன நினைக்கிறாய்?

பியாட்ரைஸ்: நாம் வகுக்கும் எத்திட்டத்தை யும் உடனே செய்துவிட முடியுமா? சுருக்கமாகவும் தைரியமாகவும் காரியத்தைச் செய்யவேண்டும் நாம்.

ஆர்சினே: அதிலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

லூக்ரிஷியா: அப்படியில்லா விட்டால், சட்ட திட்டங்கள் சாவையும் இழுக்கையும் தண்டனைக ளாக அளித்துவிடக் கூடும்.

பியாட்ரைஸ்: எவ்வளவு ஜாக்கிரதையாக இருக் கிருயோ, அவ்வளவு துரிதமாகவும் இருக்கவேண்டும். ஆர்சினே! இதற்கு வழி என்ன?

ஆர்சினே: இரண்டு முரடர்கள் நாடுகடத்தப் பட்டிருக்கிருர்கள். மனித ஆவியைப் புழுவிற்குச் சமானமாகக் கருதுபவர்கள் அவர்கள். பணக்காரன் ஏழையென்று வித்தியாசமே பாராட்டாமல், சிறிய மனத்தாங்கலுக்கும் ஜீவான்மாவை நசுக்கியெறிந்து விடுவார்கள். ரோம் நகரில் இத்தகைய மனப்பான் மைக்கு நல்ல சம்பாத்தியம் இருக்கிறது. நம் தேவை களை விற்பனை செய்கிருர்கள் அவர்கள்.

லூக்ரிஷியா: செஞ்சி, நாளைப் பொழுது புலரு முன்பாக பேட்ரல்லாவையடுத்த, அபனைன்ஸ் மலை யைச் சேர்ந்த பெருப்பாறைக்கு எங்களை அழைத் துச் செல்லப் போகிருர். அவன் அங்கு வந்து விட்டால்........

பியாட்ரைஸ்: அவன் அங்கே வரக்கூடாது.

ஆர்சினே: நீ கோட்டையைப் போய்ச் சேரு முன் இருண்டு விடுமா?

லூக்ரிஷியா: சூரியன் அனேகமாக அதற்குள் அஸ்தமித்து விடுவான்.

பியாட்ரைஸ்: எனக்கும் நினைவிருக்கிறது. கோட்டையின் அந்தப்பக்கமாக இரண்டுமைல் தூரம்

செல்லுகிறது ரஸ்தா. அது குறுகிய ரஸ்தா. மேடு பள்ளங்கள் நிறைந்தது. செங்குத்தாகச் சென்று குறுகிய கணவாயைத்தாண்டுகிறது. அங்கே இருக்கிறது ஒரு பெரிய பாறை. அது நீண்ட காலமாக பயங்கரப் பாறையாக இருந்திருக்கிறது. அது ஒரு வளைகுடாவின்மீது வளைந்து கிடக்கிறது. அதைச் சூழ்ந்துள்ள பயங்கரமும் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வருகிறது. பாறை தொங்கியபடியே வளைகுடாவை எட்டிப்பார்க்கிறது. கீழேயுள்ள பயங்கரமான பள்ளத்தாக்கை எட்டிப்பார்த்து இருளை நிரப்புகிறது. அதற்குக் கீழே ஜலம் வெள்ளமெடுத்து வேகமாக ஓடுவதைக்கேட்கலாம். ஒரு பாலம் அப்பள்ளத்தாக்கைக் கடந்து செல்வதையும் கேட்கலாம்; ஆனால் எதையும் பார்க்கமுடியாது. அப்பாறைக்குக் கீழ் கேட்கப்படும் இவைகள், மலையே துக்கத்தால் கொட்டாவிவிட்டுக் களைத்து திகைப்பதைப்போல் தென்படும். பாலத்திற்கு மேலே ஸீடார், பைன் முதலிய உயர்ந்த மரங்கள் அங்கங்கே வளர்ந்திருக்கும். இருண்ட 'ஐவி' மரத்தின் பின்னலான நிழலுக்கு, இம்மரங்களின் இலைகள் இணைந்து நிழல் தரவல்ல ஒருஇடத்தை ஸ்தாபித்துள்ளன. பகலில் இங்கு மங்கிய வெளிச்சமிருக்கும். சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னர் ஒரு இருண்ட இரவாக இருக்கும்.

ஆர்சினோ: அப்பாலத்திற்குச் செல்லலாம். ஆனால் அங்கு செல்ல ஏதேனும் காரணத்தைக் கற்பனை செய்ய வேண்டும் முதலில்.

பியாட்ரைஸ்: அது என்ன சப்தம்?

லூக்ரிஷியா: பொறு. அது வேலையாளின் பாதச்சுவடல்ல. வருவது செஞ்ஸிதான். எதிர் பாராத விதமாகத் திரும்பிவிட்டார். ...... இங்கே நீ இருப்பதற்கு ஏதேனும் சமாதானம் கூறக் கற்பனை செய்துகொள்.

பியாட்ரைஸ்: (ஆர்சிேைவுடன் வெளியில் போனபடியே) - நாம் பேசினோமே அந்தப் பாலத் தண்டை இந்த செஞ்ஸியின் பாதங்கள் செல்லவே கூடாது.

[லூக்ரிஷியாவும் பியாட்ரைஸும் அகலுகின்றனர்]

ஆர்சினோ: நான் என்ன செய்வது? செஞ்ஸி என்னைப் பார்த்துவிடுவாரே. அவரது பார்வையின் விளுக்களை நாம் பொறுத்தாக வேண்டும். அவர் பார்வை நான் இங்கு வந்த காரணத்தை வினவும். வெறுமையான புன்னகையிலே உண்மைக் காரணத் தை ஒளித்து விடுவேன்.

[கியாகோமா விரைவாக வருகிறான்]

நீ இங்கு எப்படி வந்தாய்? செஞ்ஸி, அரண்மனை யில் இல்லை என்பது உனக்குத் தெரியுமா?

கியாகோமா: அவரைப்பார்க்கவே வந்தேன். அவர் வரும்வரையில் காத்திருக்க வேண்டும்.

ஆர்சினோ: கடவுளே. இந்த அவசரத்தின் அபாயத்தைச் சற்றுவது கவனித்தீர்களா?

கியாகோமா: யமனே அறியமாட்டானும் அவன் அழிவை. இனி அவன் தகப்பனுமல்ல. நான் அவன் பிள்ளையுமல்ல. நானும் அவனைப்போல் ஒரு மனுஷ் யன். அவன் கோடுங்கோலன். நான் கொடுமைப்

படுத்தப்பட்டவன். அவன் அவமானப்படுத்துபவன். நான் அவமானப்படுத்தப் படுபவன். அவனும் விரோதி. நானும் விரோதி. அவனது பாதுகாப்பாக இருந்த இயற்கையை அவன் உதறித் தள்ளிவிட்டான். இயற்கையோ, தன் வெட்கத்துடன், அவனையே உதறித் தள்ளுகிறது. இரண்டையும் நான் வெறுக்கிறேன். தகப்பனின் கழுத்தைப்பற்றி உலுக்க வேண்டும் நான். செல்வமே எனக்குத் தேவையில்லை என்று கூறவேண்டும். ஆனந்தமயமான ஆண்டுகளை நான் கேட்கவில்லை. அமைதியான குழந்தைப் பருவத்து நினைவுகளைக் கேட்கவில்லை. வீட்டிலே வளரும் அன்பைக் கேட்கவில்லை. என் அப்பழுக்கற்ற நற்பெயரையே கேட்கிறேன். வறுமை என்மீது குவிக்கப்பட்டிருக்கிறது. அது உமது வெறுப்பிலிருந்து மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். அதிலிருந்து எனக்குச் சாந்திவேண்டும் .... மனுஷ்யனிடம் பேசிப் பலன்? ஆண்டவனே அனைத்தையும் அறியவல்லவன் : மன்னிப்பை அளிக்க வல்லவன்.

ஆர்சினோ: நண்பா! அமைதியுடன் இரு.

கியாகோமா: நல்லது. அவன் செய்தவற்றையெல்லாம் அமைதியாகவே சொல்லிவிடுகிறேன். இந்தக் கிழட்டு பிரான்ஸெஸ்கோ செஞ்ஸி என்மனைவியின் 'வரதட்சிணையை' என்னிடமிருந்து கடனாக வாங்கிக் கொண்டான். பிறகு அதைத் திருப்பித் தர மறுத்துவிட்டான். என்னை வறுமையிலே வாடவிட்டுவிட்டான். அரசியலிலே ஒரு சிறிய உத்தியோகத்தை ஏற்று என் வறுமையைப் போக்கிக் கொள்ள முயன்றேன். உத்தியோகம் தருவதாக வாக்களித்தார்கள். அதை ஏற்கவே என் குழந்தை

களுக்குச் சட்டைகள் வாங்கினேன். என் மனைவி நகைத்தாள். இருதயத்திலே சந்துஷ்டியில்லை. அதிலும் செஞ்ஸி குறுக்கே நுழைந்து, அந்த உத்தியோகத்தை எவனோ போக்கிரிக்குக் கொடுத்துவிட்டான். இந்தக் கெட்ட செய்தியுடன் வீடு திரும்பினேன். வாழ்வின் கொடுமைகளைக் குறைக்கும் திடமான நம்பிக்கை, அன்பு நிறைந்த கண்ணீர் ஆகியவைகளால் எங்கள் திகைப்பைத்தேற்றிக்கொண்டு துயரத்துடன் அமர்ந்திருந்தோம் நாங்கள். அப்பொழுது அவன் வழக்கம்போல் வந்தான். எங்களை இகழ்ந்துரைத்தான். எங்கள் வறுமையைக் குறித்து கேலி செய்து சபித்தான். கீழ்ப்படியாத புதல்வர்களுக்கு கடவுள் அளிக்கும் தண்டனை அதுவே என்று கூறினான். அவனை வெட்கித் தலைகுனியும்படி செய்யவேண்டி, என் மனைவியின் ஸ்திரீதனத்தைப் பற்றிப் பேசினேன். ஆனால் அவன் ஒரு சிறிய பெருங்கதையைக் கட்டிவிட்டான். ஸ்திரீதனத்தை ரகசியக் குழப்பங்களில் நான் வீணாக்கியதாகக் கூறினான். என் மனைவி மனமுடைந்து போனாள். அதையும் கண்டவனாக சிரிப்புடன் சென்றுவிட்டான் அவன். அவள் மனதிலே வேறுவிதமான எண்ணங்களை உண்டாக்கிவிடவே, அவள் பேசாமல் என்னை வெறுத்தாள். உண்மையைக் கூறியும் அவள் பார்வையிலிருந்த வெறுப்பு, தணிந்தபாடில்லை. இவ்வளவு சீக்கிரத்திலேயே என் குழந்தைகளுக்கும் கற்றுக் கொடுத்துவிட்டாள் என் மனைவி. கொடிய எண்ணங்களை அவர்கள் உள்ளத்திலே புகுத்திவிட்டாள். 'அப்பா! எங்களுக்கு ஆடைகளை அளியுங்கள்! நல்ல உணவு தாருங்கள்! ஒரு இரவில் தாங்கள் அழிப்பது பல

மாதங்களுக்குக் காணுமே!' என்று அவர்கள் கூக்குர லிட ஆரம்பித்தனர். நான் பார்த்தேன். வீடே நரக மாகத் தோன்றியது. இனி என் விரோதி பச்சாதாபப் பட்டாலன்றி, அல்லது இயற்கைக்கு மீறி என் கையிலே அவன் ஆவியைக் கொடுத்தாலன்றி, நான் அந் நரகத்திற்குத் திரும்பப் போவதில்லை.

ஆர்சினோ: என்னை நம்பு நீ தேடிச் செல்லும் நஷ்டஈடு நிச்சயமாகத் தரப்படாது.

கியாகோமா: பிறகு .... நீ என் நண்பனல்லவா? அன்று நாம் பேசியபொழுது நீ கூறிய மாற்று உபா யத்தின் முனையிலே நானிருப்பதை நீ காணவில்லையா? அப்பொழுது என் தவறுகள் மிகக் குறைவு. நான் திடமாக இருந்தாலும், 'பிதாக் கொலை' என்ற சொல் பயத்துடன் என்னைச் சேர்த்தாட்டுகிறது.

ஆர்சினோ: பயம் மட்டுமே அது. அச்சொல்லே ஒரு கீழ்த்தரமான வேடிக்கைச் சொல். நேர்மை யான அறிவை, ஞானமிக்க இறைவன், ஒரே தொகு திக்கு எங்ஙனம் இழுத்து வருகிறான் என்பதைப் பார். நீ செய்யத் திட்டமிடுவது ஏற்கனவே நிறை வேறினாற்போலத்தான்.

கியாகோமா: அவன் மாண்டுவிட்டானா?

ஆர்சினோ: அவன் கல்லறை தயாராகக் கிடக்கி றது. உன்னை நான் சந்தித்தபின், தன் மகளை அவ மானப்படுத்திக் கோபத்தை உண்டாக்கியிருக்கிறான்.

கியாகோமா: என்ன அவமானம் அது?

ஆர்சினோ: அதை அவள் சொல்வதாயில்லை. நான் சம்சயித்ததைப் போல் அவள் நடை உடை

பாவனைகளிலிருந்து நீயும் சம்சயிக்கலாம். அவளது வெளுப்படைந்த தேஜஸ், சோம்பலுடன் சூழ்ந்து கிடக்கும் அகன்ற மனவருத்தம், கடுகடுப்பான கோரக்குரல், ஆகியவை பயத்தையும் அன்பையும் அமிழ்த்தி விடுகின்றன. கடைசியாக நான் யூகித்தது இதிலிருந்துதான். நானும், அவள் மாற்ருந்தாயும் பயத்தில் வியந்தவர்களாக மறைவான குறிப்புகளுடன் உரையாடினோம். இருவரும் தப்பபிப்பிராயமுங் கொண்டோம். சம்சயங்களும் தடுமாற்றங்களும் எங்கள் பேச்சில் இருந்தன. உண்மையைப் பற்றியும், அதற்காகப் பழிவாங்குவதைப் பற்றியும் பேசினோம். அவளோ குறுக்கிட்டாள். அவள் வாயைத் திறக்குமுன்பாகவே அவள் பார்வை புகன்றது 'அவர் மடியவேண்டும்...' என்று.

கியாகோமா: அது போதும். என் சந்தேகங்கள் நிவர்த்தியாகிவிட்டன. எனக்கிருப்பதைவிட மேலான காரணங்கள் இருக்கின்றன அவளுக்கு. என்னிலும் மேலான ஒரு புனித நீதிபதி இருக்கிறான். குற்றங் காணமுடியாத பழிவாங்குவோன் இருக்கிறான். பியாட்ரைஸ்! வாலிபத்தின் கண்ணியத்தில் புழுவையும் மிதித்திராதவள்! மென்மலரையும் கிள்ளியிராதவள்! கடவுளே! அவள் கண்ணீரருவியைக் கண்டு கருணை கொண்டீரே! தங்காய்! உன் அறிவும் அழகும் ஒன்றையொன்று அழித்ததடா என்று வியப்பார்களே! உனக்கும் அழிவை உண்டாக்குகிறார்களா? இருதயமே! அவன் திரும்பிக்கதவைத் தட்டும் வரை நான் காத்திருக்கட்டுமா?

ஆர்சினோ: வேண்டாம். நிச்சயமாக நேரிடக் கூடிய ஆபத்திலிருந்துகூட ஏதேனும் தற்செயலான

கிரியை குறுக்கிட்டு அவனைக் காப்பாற்றிவிடக் கூடும். எங்கே போவது, எங்கே மறைவது, என்ன கூறுவது ஆகிய எவற்றிற்கும் நீ தயாராக இல்லை. நான் சொல்வதைக் கேள். எல்லாம் திட்டமாகி விட்டது. வெற்றி நிச்சயமாகக் கிட்டும்....

[பியாட்ரைஸ் வருகிருள்]

பியாட்ரைஸ்: அது என் சோதரனின் குரல்! என்னை உனக்குத் தெரியவில்லையா?

கியாகோமா: சோதரி! காணப்படாக் கண்மணி!

பியாட்ரைஸ்: காணப்படாதவள்தான்! ஆர்சினோ உன்னுடன் உரையாடியதைப் பார்த்தேன். காரியங்களைக் கூறவும் முடியாத கோரங்களாக நீ சம்சயிப்பாய் ஆனால் அவை உண்மையினும் தாழ்ந்தவை. இங்கே இருக்காதே. அவன் வந்துவிடுவான். என்னை முத்தமிடு. அப்பொழுது அவன் மரணத்திற்கு நீ சம்மதித்ததாகத் தெரிந்துகொள்வேன். வருகிறேன்! வருகிறேன்! தெய்வபக்தி, சோதர வாஞ்சை, நீதி, தயை, கொடிய இருதயங்களை மென்மையாக்கும் செயல்கள், ஆகியவைகளே உன் இருதயத்தைக் கல்லாக்கட்டும்! சோதரா! – பதில் வேண்டாம் .... போய்வா! வருகிறேன்.

[தனித்துச் செல்கிருள்]

அங்கம் — 3 காட்சி — 2

[கியாகோமாவின் இல்லத்தில் ஓர் சீர்குலைந்த பகுதி. கியாகோமா தனித்திருக்கிருன்.]

கியாகோமா: நள்ளிரவாகிவிட்டது: ஆர்சினோ இன்னமும் வந்தபாடில்லை.

[இடியும், புயலின் ஒலியும்]

என்ன ! நிரந்தரமான சக்திகள்கூடப் புழுவை யொத்த மனிதனைப் போன்ற உணர்ச்சி கொண் டுள்ளனவா ? அப்படியிருந்தால் கருணைச்சிறகு கொண்ட மின்னல் மரங்களின்மீதும் கற்களின்மீதும் விழாதே. என் மனையாளும் குழந்தைகளும் உறங்கு கின்றனர். அர்த்தமற்ற கனவுகளில் அவர்கள் இப் பொழுது வாழ்கின்றனர். அவர்களை நான் எழுப்ப வேண்டும். அது அவசியமே; ஆனால் அது சரியா என்ற சந்தேகமும் கூடவே இருக்கிறது. ஓ! எண்ணெயற்ற தீபமே! உன் குறுகிய அக்கினி, காற்றி னால் அசைக்கப்படுகிறது. இருள் அவ்வக்கினியின் முனையிலே ஊசலாடுகிறது. சிறு ஜ்வாலையே! நாடி யின் போக்கைப்போல் மேலெழும்பிக் கீழிறங்குகிறாய் நீ. உன்னைக் கவனியாவிடில் எவ்வளவோ விரைவிலே நீ அணைந்து விடுவாய். பிறகு உன்னைக் காண முடியாது. என்னைத் தாண்டிவிட்ட ஜீவான்மாவும் அங்ஙனமே பாழாகி அணைகிறது. மனுஷ்ய சடலம் சதைப்பற்று நிரம்பிய தீபம். ஜீவாதாரமான எண்ணெ எதுவும் சக்தியை அதனுள் திணிக்க முடி யாது. ஆ! இந்த நரம்புகளைப் போஷித்தது ரத்தம். சில்லிட்டு எழும்புகின்றன நரம்புகள். என் உருவை உண்டாக்கியவை அவைகளே. வெளுப்பு நிறமும் மஞ்சள் நிறமும் கொண்ட அணுக்களின் திரட்சியாக என் உருவம் மாறுகிறது. என் ஆவியே என்னை இறை வனின் அழிவற்ற அன்பினுள் அனுப்பிற்று. அது இப்பொழுது இறைவனின் நீதிப்பீடத்தின் முன்பாக வெட்ட வெளிச்சமாக நிற்கிறது.

[ஒரு மணி அடிக்கிறது]

ஒன்று! இரண்டு! மணிகள் தவழ்ந்து செல் கின்றன. நான் கிழவனான பின்னர் என் புதல்வனும்

இப்படித்தான் காத்திருப்பான். வீணான கருணை, நீதியான வெறுப்பு இரண்டிற்கும் இடையே அவஸ்தைப்படுவான். நான் சமாசார தூதனை எதிர்நோக்கி வசைமாரி பொழிவதைப்போல் அவனும் பொழி வான். என் தவறுகள் பெரியவை. இருந்தாலும் அவன் சாகாதிருக்கவேண்டும் என்றே நான் விரும்பு கிறேன். இன்னமும் .... அது ஆர்சினோவின் காலடி போன்று இருக்கிறது........

[ஆர்சினோ பிரவேசிக்கிறான்]

என்ன சொல்!

ஆர்சினோ: அவன் தப்பிவிட்டான். அதை சொல்லிப்போகவே வந்தேன்.

இயாகோமா: தப்பிவிட்டானா?

ஆர்சினோ: பேட்ரல்லாவினுள் சௌக்கிய மாகவே தப்பிவிட்டான். அக்காரியத்திற்கென்று குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு ஒரு மணி முன்பாகவே அவன் அவ்விடத்தைக் கடந்து சென்று விட்டான்.

இயாகோமா. இந்த அசந்தர்ப்பங்களால் நாம் முட்டாள்களாக்கப்படுவதா? எந்த மணியில் எந்தக் காரியம் செய்வது என்னும் குருட்டு நம்பிக்கையால் நாசமாவதா? இடியும் புயலும் அவன் மரண ஒலியை நோக்கிப் புலம்பவில்லை. நம் பலஹீனத்தை இறைவன் நையாண்டி செய்வதின் உரத்த சிரிப்பு அவை போலும். இனி நான் எக்காரியத்தைக் குறித்தும் பச்சாதாபப்படப்போவதில்லை.

ஆர்சினோ: தீபம் அணைந்துவிட்டது, பார்.

இயாகோமா: மெல்லியகாற்று தீப அக்கினியை அருந்தி விட்டதற்கே நாம் கவலைப்படவில்லை. செஞ்

வியின் ஜீவன் அக்கினியை நிகர்த்தது. அதன் மூலமாக் தீச்செயல்களைக் காணமுடிகிறது. அவன் ஆவி நிரந் தரமாக அணைந்துவிடுவதானால், நாம் வருந்துவா னேன்? இல்லை. என் மனம் கல்லாகிவிட்டது.

ஆர்சினோ: ஏன்? அதற்கு அவசியமென்ன? நேர்மையான கிரியையில் துயரச்சாயல் நுழைவதைப் பற்றிப் பயப்பட்டது யார்? நம் முதல் திட்டம் தோற்றுவிட்டது. ஆனால் விரைவிலே அவன் நிரந் தரமான உறக்கத்தில் ஆழ்த்தப்பட்டு விடுவான் என் பதில் சந்தேகமேயில்லை. முதலில் விளக்கை ஏற்று. இருட்டில் பேசவேண்டாம்.

கியாகோமா: (தீபத்தை ஏற்றி) ஒருமுறை அணைந்தபின் திரும்பவும் என் பிதாவின் உயிரை எழுப்பமுடியாது: அவரது ஆவி இறைவனின் வாதத் தையும் எதிர்த்துப் போராடும் என்று நீ கருதுகிறாயா?

ஆர்சினோ: ஒருமுறை இழந்தால் உன் சகோத ரியின் சந்துஷ்டியை நீ இப்பொழுது திருப்பியழைக்க முடியாது; வாலிபமும் நம்பிக்கையும் நிறைந்த கடந்த ஆண்டுகளைத் திருப்பியழைக்க முடியாது; உன் மனைவியின் கடூரமான சொற்களைத் திருப்பி யழைக்க முடியாது; மாண்ட உன் மாதாவையும் திருப்பியழைக்க முடியாது; துரதிருஷ்டம் கவர்ந்து செல்லும் நையாண்டிச் சொற்களையும் திருப்பி யழைக்க முடியாது!........

கியாகோமா: போதும் இன்னமும் பேசவேண் டாம். உயிருக்கு உணர்ச்சிகளை ஊட்டியது இக்கரம். அதே கரம் அதே உயிரை அணைக்க வேண்டும். நான் அப்படியே தீர்மானித்து விட்டேன்.

ஆர்சினே: அதற்கும் அவசியமில்லை. கேள் ஒலிம்பியாவை உனக்குத் தெரியுமா? கோலன்ரு வின் காலத்தில் அவன் பேட்ரல்லாவின் காவலாளி யாக இருந்தவன். அவனை உன் தகப்பனுரே வேலை யிலிருந்து நீக்கினர். மார்ஸியா இருக்கிறுனே, அவன் ஒரு போக்கிரி. சென்ற வருஷம் உன் தகப்ப னுருக்காக ஏதோ கொலை செய்தானும். அதற்குத் தரவேண்டிய பணம் அவனுக்குக் கொடுக்கப்பட வில்லையாம்.

கியாகோமா: ஒலிம்பியாவை நான் அறிவேன். செஞ்ஸியை அவன் அளவுகடந்து வெறுக்கிறுன். இந்த வயதில் கூட, செஞ்ஸி போவதைக் கண்டால், கோபம் பொங்க உதடுகள் வெறுக்கின்றனவாம் அவனுக்கு. மார்ஸியாவைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.

ஆர்சினே: மார்ஸியாவின் வெறுப்பும் ஒலிம் பியாவுடையதைப் போன்றதே. இவர்களுக்கு உன் பெயரால் சொல்லி அனுப்பியிருக்கிறேன். உன் வேண்டுகோளின் பேரில் பியாட்ரைஸையும் லூக்ரி ஷியாவையும் சந்திக்கும்படி சொல்லியனுப்பி யிருக் கிறேன்.

கியாகோமா: பேசுவதற்குத் தானே?

ஆர்சினே: நாளை நள்ளிரவு இந்நேரத்திற்குள் அவர்கள் மரண ஸ்மரணையுடன் வருவார்கள். இன் னேரம் பேசியும் முடிந்துவிடும். காரியத்தைக்கூட முடித்துவிடலாம்.

கியாகோமா: என்ன சப்தம் அது?

ஆர்சினே: வீட்டுநாய் ஊளையிடுகிறது. வேறு ஒன்றுமில்லை.

கியாகோமா: என் மனைவி உறக்கத்தில் குறை கூறுகிருள். என்னைப்பற்றிக் கொடூரமாகக் கூறுகிருளோ என்று சந்தேகிக்கிறேன். அவளைச் சூழ்ந்து உறங்கும் குழந்தைகள் நான் அவர்களுக்குப் பாது காப்பை அளிக்கவில்லை என்று கனவு காண்கின்றன.

ஆர்சினே: பாதுகாப்பை அவர்களிடமிருந்து உண்மையாகவே கவர்ந்து சென்றவன் அவன் (செஞ்ஸியைக் குறிப்பிடுகிருன்.) அவர்கள் அமைதியிலே விஷத்தை நிரப்பியவன் அவன்! கொடூரமான சல்லாபங்களிலே தவழ்ந்து உறங்குபவன் அவன்! வெறுப்பின் சாயல்களில் தங்களை வெற்றிகரமாகக் கேலி செய்பவன் அவன்! காலத்திற்கேற்ற கோலமாக இருக்கிறது உண்மையும்.

கியாகோமா: என்றேனும் மறுபடியும் அவன் பிழைத்தெழுந்து விட்டால்; கூலிக்கு அமர்த்தும் அந்த ஆட்களை நான் நம்பவே மாட்டேன்.

ஆர்சினே: அது சரிதான். நான் போகவேண்டும் வருகிறேன்.

கியாகோமா: எல்லாவற்றையும் மறந்து விட்டுப் போ. நான் பிறவாமலேயே இருந்திருக்கலாகாதா!

(அகலுகிருன்)

மூன்ரும் அங்கம் முடிவடைகிறது

[பேட்ரல்லா மாளிகையில் ஒரு பகுதி. செஞ்லி பிரவே சிக்கிருன்.]

செஞ்லி: அவள் வருவதாகக் காணும். மூர்ச் சித்துக்கொண்டும், உடல் நலம் குன்றியுமிருந்தாள் அவள். நான் அவளை விட்டு விட்டு வரும்பொழுது, தாமதித்து வருவதற்கு என்ன தண்டனை கிடைக்கும் என்பதையும் அவள் அறிவாள். பயமுறுத்தல்கள் பாழாய்ப் போனுல்தான் என்ன? பேட்ரல்லா அகழி யினுள் அல்லவா நான் இப்பொழுது இருக்கிறேன்? ரோம் நகரத்தின் கண்களுக்கும் காதுகளுக்கும் நாஞ அஞ்சுபவன்? அவளை மயிரைப்பற்றி நான் இழுக்க வில்லையா? அவளை மிதித்துச் செல்லவில்லையா? மூளை குழம்பும் வரை அவளை உணர்ச்சியற்று வைத்திருக்க வில்லையா நான்? பஞ்சத்தாலும், இரும்புச் சங்கிலி களாலும் அவளை அடக்கவில்லையா நான்? குறைவா கச் சொன்னுலே போதும். அப்படியிருந்துமா நான் தேடித்திரிவதைச் செய்யாமல் விடுவது? இல்லை. அவள் எண்ணம் பிடிவாதமானது. அதை ஒரு சக்தி இழுத்துக் கீழே தள்ளும். அச் சக்தியைப்போல் அவள் எண்ணமும் தாழ்ந்துவிடும்.

[லூக்ரிஷியா வருகிருள்]

கள்ளி! என் வெறுப்பிலிருந்து நீ மறையமாட் டாயா? ஓடு! ஒழிந்துவிடு! இரு! பியாட்ரைஸை இங்கு வரும்படி சொல்லு.

லூக்ரிஷியா: ஓ! நாதா! தங்கள் நன்மைக்காக மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். தாங்கள் செய் யும் காரியங்களைக் கவனியுங்கள். தங்களைப்போல்

குற்றங்களினூடும், குற்றங்களின் அபாயங்களினூடும நடந்து செல்லும் ஒருவர் எம்மணியிலேனும் திடீ ரென்று மரணத்தில் விழுந்து விடக்கூடும். தாங் களோ வயதானவர். தங்கள் மயிரோ நரைத்து விட்டது. சாவு, நரகங்களிலிருந்து தங்களைத் தாங் களேதான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். தங்கள் பெண்ணிற்காக மனமிரங்குங்கள்! யாரேனும் நண்ப னுக்கு அவளை மணம் செய்துவையுங்கள். அப்பொ ழுது, வெறுப்பையோ, பாழான எண்ணங்களையோ அவள் தங்கள் உள்ளத்தில் உண்டாக்க முடியாது.

செஞ்ஸி: என்ன! அவள் சகோதரிக்கு, சுபீட் சத்தை என் வெறுப்புடன் ஒப்பிட்டு கையாண்டி செய்ய ஒரு குடும்பம் கிடைத்ததே அதைப்போலவா? விசித்திரமான அழிவு அவளையும், உன்னையும், எஞ்சி நிற்கும் எதனையும் நிர்மூலமாக்கிவிடும். என் சாவு துரிதத்தில் நேரிடலாம். அவள் விதி என் சாவைத் துரிதப்படுத்துகிறது.....போ!....இங்கு அவளை வரச் சொல்! என் மனோநிலை மாறுமுன் வரச்சொல்! இல்லையேல் நான் அவளை மயிரைப் பற்றி இழுத்து வருவேன்.

லூக்ரிஷியா: நாதா! அவளே என்னைத் தங்களி டம் அனுப்பினாள். தங்கள் முன்னிலையில்தானே அவள் மயங்கி விழுந்தாள்! அது தங்களுக்குத் தெரி யும். அந்த மயக்கத்தில் ஏதோ குரலைக் கேட்டா ளாம் அவள். 'செஞ்ஸி மடிய வேண்டியதுதான்! அவன் குற்றங்களை ஒப்புக்கொள்ளட்டுமே! அவனது கணக்கற்ற குற்றங்களைத் தண்டிக்க, நிந்தனை செய்யும் தேவதை காத்திருக்கிறாள். கடவுள், சாகும் அவன் இருதயத்தைக் கெட்டிப்படுத்துகிறார' என்பதைக்

கேட்கவே காத்திருக்கிருள்.' என்று கூறியதாம் அக் குரல்.

செஞ்ஸி : ஏன் ... அம்மாதிரிச் சம்பவங்களும் நடந்தால் ... தெய்வீக விளக்கங்கள் ஏற்படலாம். அதில் சந்தேகமே யில்லை. மேலிருந்து எனக்கு உதவி கிடைத்தது என்பது வெளிப்படை. எப்படி யென்று கேட்கிருயா? என் மைந்தர்களை நான் சபித்ததும், அவர்கள் மாண்டு போனுர்கள். ஓ! .... ஆகவே! .... நீதியா அநீதியா என்பதைப் பற்றியதே நம் பேச்சு! ... பச்சாதாபம்! .... பச்சாதாபம் இலகுவான ஒரு நிமிஷ வேலை. கடவுளைவிட அதற்கு சம்மந்தப்பட்டவன் நான்தான். நல்லது .... நல்லது .... அவள் ஆவியை அசுத்தமாக்கி, விஷமூட்டும் அப்பெரிய காரியத்தை நான் விட்டுவிட வேண்டியதுதான்.

[சற்று நிசப்தம். லூக்ரிஷியா ஆவலுடன் நெருங்குகிருள். மறுபடி அவன் பேசவே, பின்வாங்குகிருள்.]

ஒன்று. இரண்டு .... ஆ! .... என் சாபம் ரோகா, கிரிஸ்டோபோவே இருவரையும் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டது. வாழ்வு கல்லறையை விடக் கொடிய நரகமாக இருப்பதை கியாகோமா காண்பான் என்று நினைக்கிறேன். திறமை வெறுப்பில் இருக்குமானல், கியாகோமா, பியாட்ரைஸை கண்டபடி திட்டியபடியே திகைப்பில் மாள்வான். பெர்னர்டோ ஒன்றும் தெரியாதவன். பெர்னர்டோ ஏதுமறியாதவன். இச்செயல்களின் நினைவை அவன் வாழ்விலே பொறித்துவிடுகிறேன். அவன் வாலிபத்தை நம்பிக்கையின் மகுடமாக மாற்றிவிடுகிறேன். கவனிப்பாரற்ற கல்லறையைச் சூழ்ந்து வளரும் பூண்டுகளைப்போல், அப்பருவத்தில் தீய நினைவுகள் வளரட்

டும். எல்லாம் முடிந்ததும் அகன்ற சேம்பக்னுவில் என் தங்கத்தையும் வெள்ளியையும் குவிப்பேன். வீலை மிக்க ஆடைகள், வர்ணச்சித்திரங்கள், திரைச் சீலை கள் ஆகியவற்றைக் குவிப்பேன். என் சுவடிகள், நிதி சம்பந்தமான தஸ்தாவேஜிகள் ஆகியவைகளையும் குவிப்பேன். என் குதூகலத்தின் ஆரோகண அக்கினி ஜ்வாலையாக அவற்றை எரிப்பேன். இப்படியாக என் பெயரைத் தவிர வேறு என் உடைமைகள் எதனை யும் விட்டுச் செல்லமாட்டேன். பரம்பரைச் சொத் தை அயோக்கியத்தனத்தைப் போல் களைந்திடுவேன். அது முடிந்தால் போதும். என் அசுத்தமான இருத யத்தை அதை ஆட்டிவைக்கும் ஆண்டவனிடமே அர்ப்பணித்து விடுவேன். அது என் இருதயத்திற்கு அளிக்கப்படும் தண்டனையாலும், அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையாலும், சவுக்கின் நுனி ஆழ்ந்த புண்ணிலே உடையும் வரை, கடவுள் கேட்க மாட்டான். வெறுப்பு முழுமையும் அளிக்கப்படும் வரையிலே இறைவன் கேட்கவே மாட்டான். இருந் தாலும், என் காரியங்களை நிச்சயமாகவும், விரைவாக வும் செய்யவேண்டும்; ஏனெனில் என் மரணம் என் காரியங்களைவிடத் துரிதமாக முன்னேறி விடக்கூடும்.

லூக்ரிஷியா: (அவனை நிறுத்தி) ஓ! நிறுத்துங் கள்! அது ஒரு கற்பனை. அவளுக்கு சாயலும் தோன்ற வில்லை. அவள் எக்குரலையும் கேட்கவும் இல்லை. தங்களை பீதிப்படுத்தவே நான் அதைச் சொன்னேன்.

செஞ்ஸி: நன்ருயிருக்கிறது! இறைவனின் புனித உண்மையை அற்பமாக உளறுபவளே! நீசத் தனமான பொய் உன் இருதயத்தை திக்குமுக்கலா டச் செய்யட்டும். பியாட்ரைஸை என் எண்ணத்

திற்கு இணங்கச் செய்ய முடியும். அதற்காகக் கொடிய கோரங்கள் தங்கிக் கிடக்கின்றன.

லூக்ரிஷியா: ஓ! எந்த எண்ணத்திற்கு அவள் இணங்கவேண்டும்! இதுவரை கண்டிராத வேறு எந்தக் கொடிய குஷ்டங்களை நீர் அவள் மீது திணிக்கப் போகிறீர்?

செஞ்ஸி: அந்தேரா, போ! என் பெண்ணை உடனே கூப்பிடு! அவள் வராவிட்டால், நான் வருவதாகச் சொல்! என்ன கஷ்டங்கள்? மனிதர்கள் கேட்டிராத அக்கிரமங்களினூடே அவளைப் படிப்படியாக இழுத்துச் செல்வேன் நான். நடுப்பகலை நிகர்த்த பொதுஜன வெறுப்பிலே நிழலின்றி நிறுத்துவேன் அவளை. எல்லாம் எங்கும் தீப்போல் பரப்பிய செயல்களுக்குப் பதிலாகத்தான். அதில் ஒன்றைக்கூட'.... ஏன்? - நீயே யூகித்துக் கொள்ளலாமே? தன் நிலைமையை உணரும் தன்மையடைவாள் அவள். மன்னிப்புப் பெறுமல், குற்றங்களை ஒப்புக்கொள்ளவும் இயலாமல் மாள்வாள் அவள். தன் தந்தைக்கும் இறைவனுக்கும் விரோதியாக மடிவாள். அவள் உடல் வேட்டை நாய்களிடம் எறியப்படும். அவள் பெயர் உலகத்தின் பயங்கரமாக மாறும். என் சாபங்களால் பீடிக்கப்பட்டு, ஆண்டவனின் அரியாசத்தை அடையும் அவள் ஆவி. ஆவியையும் உடலையும் ஒரு பெருத்த அழிவின் குவியலாக நான் மாற்றிவிடுவேன்.

[அந்தேரா வருகிறுன்]

அந்தேரா: பியாட்ரைஸ் சீமாட்டி ....

செஞ்ஸி: மடப்பயலே! சொல்! அவள் என்ன சொன்னுளடா?

அந்தேரா : அவர்கள் கவலையடைந்தே காணப் பட்டார்கள். 'போ எனக்கும் அவருக்கும் இடை யே நரகத்தின் ஜலசந்தியை நான் காண்கிறேன். அதை அவர்தான் கடக்கவேண்டும். நான் மாட்டேன். அப்படியே என் பிதாவிடம் தெரிவித்து விடு' என்று சொன்னார்கள்,

[அந்தேரா போகிறான்]

செஞ்ஸி : லூக்ரிஷியா ! - நீ போ ! விரைவாகப் போ ! அவளை வரச்சொல். அவள் வருகையே சம் மதத்தைக் குறிப்பிடும் என்று அவளிடம் கூறிவிடு. அவள் வராவிடில், அவளை நான் சபிப்பேன் என்றும் சொல்

[லூக்ரிஷியா அகலுகிறாள்]

ஹா ! பிதாக்களின் சாபங்களைக் கொண்டே ஆயுதபாணியான வெற்றியைக் குழப்பமூட்டுகிறார் ஆண்டவர். நகரங்களின் வளர்ச்சியையும் மங்க வைக்கிறார். அகிலத்து அப்பனான ஆண்டவன், ஓர் தந்தை தன் குழந்தைக்கு எதிராகக் கேட்கும் பிரார்த் தனையை அளித்தே தீரவேண்டும். அப்படிக் கேட்கும் தகப்பனை மக்கள் என்னைப்போல் இகழ்ந்தாலும் சரியே. அவளது புரட்சிமிக்க சகோதரர்களின் மரணம் அவளுக்கு, நான் பேசுமுன், அச்சத்தை அளிக்காதா? அவர்களை அழிவு சூழும்படி சூழ்ச்சி செய்தவன் நானே. அதேபோல் அழிவும் அவர்களை அடைந்தது.

[லூக்ரிஷியா வருகிறாள்]

நல்லது என்ன ? சொல் !

லூக்ரிஷியா : 'நான் வரமுடியாது. நம்மிரு வரிடையே ரத்தப் பெருக்கான வெள்ளம் ஆர்ப்பரிப்

பத்தை நான் காண்கிறேன்' என்று அவரிடம் கூறிவிடு - இப்படியாக அவள் சொன்னாள்.

செஞ்லி : (மண்டியிட்டு) இறைவனே! செவி சாய்த்துக்கேளும்! இந்த அகன்ற மாமிசப்பிண்டம் நீர் சிருஷ்டித்த என் புதல்வியா? என் ரத்தமா? என் ஆவியின் ஒரு பிரிவான அணுவா? என் மரணமும் பிணிகளும் இவளேதானா! அவள் பார்வையே என்னைப் பிடித்து மனதை நஞ்சாக்குகிறது. நரகத்திலிருந்து தோன்றுவதைப்போல் உதித்த இப்பைசாசம் நல்ல பலனை அளிக்க ஏற்பட்டாள்! அவளது பிரகாசமான அழகு இருண்ட உலகத்தை ஒளிர்விக்க ஏற்பட்டதா? அவளிடம் பரிமளிக்கும் குணாதிசயங்கள் தங்களது அருட்பணியில் வளர்த்தப்பட்டவைகளா? பகவானே! எனக்காக நான் இறைஞ்சுகின்றேன்! அனைவருக்கும் பொதுவான ஆண்டவர் தாங்கள். எனக்கும், அவளுக்கும், அனைவருக்கும் பிதா, ஆண்டவன் பெயரிலே அகிலத்தை மாற்றிச் சுழற்றி. அவள் உணவை விஷமாக்குங்கள்! குஷ்டரோகக் கறைகள் அவளைச் சுற்றிச் சூழ்ந்து கிடக்கட்டும்! ஸ்வர்க்கமே! அவள் சிரமீது மழையைப்பொழியுங்கள்! புண்ணுண்டாக்கும் பனித்துளிகள், தவளையை அரிப்பதைப்போல், அவள்மீது பொழியட்டும். அன்பைக் கிண்டிவிடும் அவ்வுதடுகளை உலரச் செய்யட்டும். வெறுக்கத்தக்க முடமாக அவள் அங்கங்களைக் குறைக்கட்டும்! அனைத்தும் காணும் அருணனே! உன் குருடாக்கும் கிரணங்களை ஜீவகளைமிக்க விழிகளிலே பொறுமையுடன் செலுத்து.

ஓாக்ரிஸியா : சாந்தம்! சாந்தம்! தங்களின் பொருட்டு இந்தப் பயங்கரச் சொற்களைக் கூறுதீர்!

ஆண்டவன் அருளுங்காலத்தே, இத்தகைய பிரார்த்தனைகளைத் தண்டிப்பார்.

செஞ்ஸி: (குதித்தெழுந்து, வலது கரத்தை வானை நோக்கிக்காட்டி) ஆண்டவன் அவன் எண்ணத்தைச் செய்கிருன். நான் என் எண்ணத்தைச் செய்கிறேன். இன்னமும் அவளுக்கு ஒரு குழந்தையும் இருந்திருந்தால் ....

லூக்ரிஷியா: பயங்கர எண்ணம்!

செஞ்ஸி: அவளுக்கு எப்பொழுதேனும் ஓர் குழந்தை இருந்தால்! - இயற்கையே! நீ வேகம் கொண்டவன். இறைவனின்மீது ஆணையிட்டு உன்னை வேண்டுகிறேன். அவளிடம் நீ கலந்து வெற்றிகொள். என் சாபங்களை மிகைப்படுத்திப் பெருக்கு. ஆண்டவனின் ஆக்ஞையை நிறைவேற்று. அவளுக்கு ஓர் குழந்தை பிறக்கட்டும். கோரமாக அவளைப்போன்றே பிறக்கட்டும். உருவங்களைக் குலைத்துக் காட்டும் நிலைக்கண்ணாடியைப்போல், தன் உருவமும், அவள் வெறுக்கும் உருவமும் அதனிடம் கலந்து கிடப்பதை அவள் காணட்டும். பாலூட்டும் மார்பிலே தவழ்ந்து அவளை நோக்கி நகைப்பதைப் பார்க்கட்டும். குழந்தைப்பருவம் முதலாகவே அயோக்கியத்தனமும் திரிசமமும் கொண்ட குழந்தையாக தினே தினே வளரட்டும். மாதாவின் அன்பை இன்னலாக மாற்ற வளரட்டும். அவள் கவனிப்பிற்கு வெகுமதியாகக் கஷ்டத்தையும், வெறுப்பையும், இயற்கைக்கு மாறுபட்ட இன்னல்களையும் அது அளிக்கும் வரையில், அவளும் குழந்தையும் வாழட்டும். கலவரமிக்க நிந்தனைகளைக்கொண்டு வேட்டையாடி அவளைக் கல்லறைக்கு அனுப்பட்டும். இச்

சாபத்தை நான் மாற்றவேண்டுமா ? — போ! அவளை வரச்சொல். என் வார்த்தைகள் சுவர்க்கத்தில் பொறிக்கப்படுமுன் அவளை வரச்சொல்.

(லூக்ரிஷியா அகலுகிருள்)

எனக்கு மனிதனைப்போன்ற உணர்ச்சியே இல்லை. நினைவற்ற உலகின் தீமைகளைத் தண்டிக்க அனுப்பப் பட்ட பைசாசத்தைப் போல் உணர்ச்சி கொண்டுள் ளேன். என் நரம்புகளில் மேலும் கீழுமாக ஓடுகிறது உதிரம். ஏதோ பயங்கர ஆனந்தம், அதை வேதனை யும் குத்தலும் கொண்டதாகச் செய்கிறது. விசித்திர பீதியின் மயக்கம் நிறைந்த பிணியை நான் உணரு கிறேன். கோரமான ஆனந்தத்தை எதிர்நோக்கி என் இருதயம் அடித்துக்கொள்ளுகிறது.

(லூக்ரிஷியா பிரவேசிக்கிருள்)

என்ன சொல்?

லூக்ரிஷியா: உங்களை சாபமிடும்படியே அவள் கேட்கிருள். தங்கள் சாபங்கள் அவளைக் கொல்ல முடியாதவை. அங்ஙனம் அவள் ஆவியை அவை கொன்றுவிடுமாஞல்...........

செஞ்ஸி. அவள் வரமாட்டாளாம்; நல்லதா யிற்று. அவளிடமிருந்து முதலில் எனக்கு வேண்டி யதை அடைவேன். பிறகு ரகசியங்களைப் பிழிந்து வெளிப்படுத்துவேன். இரண்டையும் என்ஞல் செய்யமுடியும். உன் அறைக்குப் போ! உன்னை எட்டி உதைக்கு முன்பாகப் பறந்தோடு: ஜாக்கிரதை! இன்றிரவு எங்கேனும் என்வழியிலே குறுக்கிடப் போகிருய்! புலிக்கும் அதன் இரைக்கும் இடையே வருவதும் க்ஷேமமானது தான்.

[லூக்ரிஷியா போகிருள்]

அகாலமாகியிருக்க வேண்டும்! உறக்கத்தினுல் கனக்கின்றன கண்கள். மங்கலான களைப்பு கண்களின்முன் படர்கிறது. மனச்சாட்சியே! பொய்மையின் அவமானம் நீ! உறக்கம் சுவர்க்கத்துப் பனி என்கிருர்கள். பிணிகளைக் குணப்படுத்தும் தன்மை அதற்கு உண்டு என்று கூறுகிருர்கள். உன்னை 'ஏமாற்றும் கோமாளி' என்று கருதுவோரின் மூளையிலே உறக்கம் சரிந்து செல்லாதாமே! ஆழ்ந்த அமைதியுள்ள உறக்கத்தில் ஒரு மணிநேர ஓய்வுகொண்டு இதைப் பொய்யாக்குவேன். பிறகு........ஓ! நரகத்தின் குவியலே! ஆனந்தச்சிரிப்பிலே உன் சுராதிகளைப் பைசாசங்கள் குலுக்கட்டும். மாண்டதேவதைக் காக கதறுவதைப் போன்ற அழுகுரல் சுவர்க்கத்தில் கேட்கப்பட வேண்டும். மண்ணிலே நன்மைகள் வாடி வதங்கிப் பிணிவாய்ப்படட்டும். தீமைகள் அசாதாரணமான ஜீவன்களின் உற்சாகத்துடன் சுழன்று துரிதமாக முன் செல்லட்டும்........நான் இப்பொழுது இருப்பதைப்போல் அவை முன்னேறட்டும்.

(போகிருன்)

அங்கம் 4 காட்சி 2

[பேட்ரல்லா மாளிகையின் முன்பு. பியாட்ரைஸ் லூக்ரிஷியா இருவரும் மாடியின் மீது வருகின்றனர்]

பியாட்ரைஸ்: அவர்கள் இன்னமும் வரவில்லையே.......

லூக்ரிஷியா: கிட்டத்தட்ட நள்ளிரவுமாகப் போகிறது.

பியாட்ரைஸ்: விரைந்தோடும் நினைவுப்பாதையின் பின்னர் காலம் மிகவும் மெள்ளச் செல்லுகிறது.

லூக்ரிஷியா : நேரமாகிக் கொண்டே போகிறது. காரியம் முடியுமுன்பாக அவர் எழுந்து விட்டால்....?

பியாட்ரைஸ்: அம்மா! ஐயோ! அவர் மறுபடியும் என்றுமே விழித்தெழக் கூடாது. நம் செயல் மனுஷ்ய உருவத்திலிருந்து ஆழ்ந்த நரகத்தின் ஆவியை வெளிப்படுத்தும். தாங்கள் கூறியது அச் செயலை விரைவில் செய்யத் தூண்டுகிறது.

லூக்ரிஷியா: அவரைப் போன்ற ஒரு துராத்மாவிற்கு விசித்திரமான நம்பிக்கை இருக்கிறது. கடவுளைப்பற்றியும், தீர்ப்பைப் பற்றியும் அவர் பேசியது உண்மையே. கடவுளிடம் நம்பிக்கை கொண்டவரைப் போல் பேசினுலும் நன்மை தீமையை அவர் பகுத்தறிவதேயில்லை. இருந்தாலும் குற்றங்களை ஒப்புக்கொண்டு மன்னிப்புப் பெருமல் மாள்வதாயிருக்கிறதே!

பியாட்ரைஸ்: ஓ! கடவுள் கருணையும் நீதியும் நிறைந்தவர் என்பதை நம்புங்கள். நமது இக்குற்றம் அவசியமானது. இதை நிச்சயமாக நம் தகப்பனுரின் குற்றங்களின் தொகுதிக்கு இறைவன் சேர்த்துவிடமாட்டார்.

[கீழே மார்ஸியாவும் ஒலிம்பியாவும் நுழைகின்றனர்]

லூக்ரிஷியா: பார்! அவர்கள் வந்துவிட்டார்கள்.

பியாட்ரைஸ்: எல்லா ஜீவ சக்திகளும் இருளான இம்முடிவை அடைய நம்மைத் துரிதப்படுத்தட்டும். நாம் கீழே போகலாம்; வா.

[மேலிருந்து லூக்ரிஷியாவும் பியாட்ரைஸும் அகலுகின்றனர்]

ஒலிம்பியா : இந்த வேலையைப் பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது ?

மார்ஸியா : 'பழைய கைதேர்ந்த கொலையாளியின் ஜீவனுக்கு ஆயிரம்கிரௌன் விலைமதிப்பு' என்று நினைப்பதைப் போலிருக்கிறது. உன் கன்னங்கள் வெளுப்படைகின்றனவே !

ஒலிம்பியா : உன் எண்ணங்களின் நேரான பிரதிபலிப்பே அது. அதையே 'வெளுப்படைந்தது' என்று நீ கூறுகிறாய்.

மார்ஸியா : அவற்றின் இயற்கை நிறமே அதுதானோ ?

ஒலிம்பியா : என் வெறுப்பும், தள்ளி வைக்கப் பட்டுள்ள அபிலாஷைகளும் நிறத்தைக் குலைத்திருக் கும். உதிரத்தையே அழித்துவிட்டன போலும்.

மார்ஸியா : அப்படியானால் இந்த வேலையைச் செய்து முடிக்க உனக்கு சம்மதம் தானே ?

ஒலிம்பியா : ஆம்! என் சிசுவைக் கடித்த நாகத்தைக் கொல்ல ஆயிரம் கிரௌன்கள் லஞ்சமாக வருவதானால் அதை நான் வெகு ஆர்வத்துடன் எப்படிச் செய்யாதிருக்க முடியும் ?

[பியாட்ரைஸ் லூக்ரிஷியா இருவரும் கீழே வருகின்றனர்]

சீமாட்டிகளே !...

பியாட்ரைஸ் : நீங்கள் தீர்மானம் செய்தாகி விட்டதா ?

ஒலிம்பியா : அவர் உறங்குகிறாரா ?

மார்ஸியா : எல்லாம் அமைதியாக இருக் கிறதா ?

லூக்ரிஷியா : நான் அவர் பானத்தில் கஞ்சாவைக் கலந்துவிட்டேன். அவர் நன்ருக உறங்குகிருர்.....

பியாட்ரைஸ் : பாபத்திற்குத் தண்டனையளிக்கும் கனவுகளின் மாறுதலாக இருக்கும் அவர் மரணம். அவருள் இருக்கும் நரகத்தின் இருண்ட தொடர்ச்சியை இறைவன் அழித்துவிடட்டும்! ஆனுல் நீங்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டீர்கள் அல்லவா? இது ஒரு உன்னதமான புனித செயல். உங்களுக்கே தெரியும்.

ஒலிம்பியா : நாங்கள் தீர்மானித்து விட்டோம்.

மார்ஸியா : எப்படி இக் காரியத்தை முடிப்பது என்னும் விஷயம் உங்களைப் பொறுத்தது.

பியாட்ரைஸ் : நல்லது. வாருங்கள்.

ஒலிம்பியா : பொறு! பொறு! அது என்ன சப்தம்?

மார்ஸியா : ஹா! யாரோ ஒருவர் வருகிருப் போலிருக்கிறது.

பியாட்ரைஸ் : மனச்சாட்சி முறிந்த கோழைகள்! உங்கள் குழந்தை இருதயங்களை ஓய்வில் தாலாட்டுங்கள். நீங்கள் திறந்துவிட்ட இரும்புக் கதவு காற்றில் ஆடுகிறது. அது இச்சப்தத்தை உண்டாக்கிற்று. வாருங்கள்! என்னைப் போன்று மெள்ள.... தைரியமாக வேகமாக நடந்து வாருங்கள்.

(செல்கின்றனர்)

(மாளிகையில் ஒரு பகுதி. பியாட்ரைஸ் லூக்ரிஷியா இருவரும் வருகின்றனர்.)

லூக்ரிஷியா: அவர்கள் அதைத்தான் செய்து கொண்டிருக்கின்றனர்.

பியாட்ரைஸ்: இல்லை. அது முடிந்து விட்டது.

லூக்ரிஷியா: அவர் 'கொறட்டை'யைக் கூட நான் கேட்கவில்லையே.

பியாட்ரைஸ்: அவர் கொறட்டையே விட மாட்டார்.

லூக்ரிஷியா: அது என்ன சப்தம்?

பியாட்ரைஸ்: கேள்! அவர் படுக்கையறையில் யாரோ நடக்கும் சப்தம் அது.

லூக்ரிஷியா: அப்பா! கடவுளே!........அவர் ஒரு குளிர்ந்த விரைத்துப் போன பிணமாக இப்பொழுது இருந்துவிட்டால்........!

பியாட்ரைஸ்: என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றியோ, என்ன செய்யாமல் விட்டு விடப்படுகிறது என்பதைப்பற்றியோ பயப்படாதே. இச்செய்கை எல்லாவற்றையும் உள்ளடக்கி விடும்.

(ஒலிம்பியா மார்ஸியா இருவரும் வருகின்றனர்)

அது நிறைவேறியதா?

மார்ஸியா: எது?

ஒலிம்பியா: நீங்கள் கூப்பிடவில்லையா?

பியாட்ரைஸ்: எப்பொழுது?

ஒலிம்பியா: இப்பொழுது தான். தூங்கும் ஒரு கிழவனைக் கொல்ல எங்களுக்கு தைரியமில்லை. அவரது மெல்லிய நரைத்த கேசம், அவரது பிடிவாதமான பயபக்தியுள்ள நெற்றி, மார்பின் குறுக்காக உள்ள கரங்கள், அவர் ஆழ்ந்து கிடக்கும் கள்ளங் கபடமற்ற சாந்தமான உறக்கம் ஆகியவை என்னை அடக்கிவிட்டன. நிஜமாக, உண்மையாக, என்னால் அதைச் செய்யவே முடியவில்லை.

மார்ஸியா: ஆனால் நான் தைரியமாக இருந்தேன்; நான் ஒலிம்பியாவைத் திட்டவும் திட்டினேன். அவனது பாபங்களை அவனது கல்லறைக்கே எடுத்துச் செல்லும்படிக்கும், வெகுமதியை எனக்கே விட்டுவிடும்படிக்கும் திட்டினேன். என் கத்தியை எடுத்தேன். அது அவரது சுருக்கம் நிறைந்த கழுத்தையும் எட்டிற்று. ஆனால் அவர் உறக்கத்திலே அசைந்து படுத்தார். 'கடவுளே! கேளுங்கள்! இது ஒரு பிதாவின் சாபம்! என்ன! தாங்கள் என் தந்தையல்லவா?' என்று அவர் புகன்றார். பிறகு நகைத்தார். இறந்த என் தகப்பனாரின் ஆவி அவரது உதடுகளின் மூலமாகப் பேசுவதாக எனக்குப் புலப்பட்டது. என்னால் அவரைக் கொல்ல முடியவில்லை

பியாட்ரைஸ்: கேவலமான அடிமைகளே! உறங்கும் ஒரு மனிதனைக் கொல்ல உங்களுக்கு தைரியமில்லையா? இம்மாதிரி காரியத்தை முடிக்காமல் திரும்பும் தைரியம் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? வீண் வார்த்தைகளை உளறும் கயவர்கள்! கோழைகள்! துரோகிகள்! செல்வத்திற்கும் பழிவாங்குவதற்கும் விற்கப்படும் மனசாட்சி இரண்டாகிவிட்டதோ?

மனித சமூகத்தை இழிவுபடுத்தும் ஆயிரக்கணக்கான தினசரி சம்பவங்களின் மீது உறங்குகிறது மனசாட்சி. கருணை, கடவுளையே அவமதிக்கும் ஒரு செயல் .... நான் ஏன் பேசவேண்டும்?

[ஒரு குத்துவாளைப் பிடுங்கி மேலே தூக்கி]

'இவள் தன் தகப்பனையே கொன்ருள்' என்று நீங்கள் சொல்லவேண்டுமானுல் நானே அதைச் செய்யத்தான் வேண்டும். ஆனுல் அவருக்குப்பின் நீங்கள் நீண்ட காலம் வாழமுடியும்' என்பதைக் கனவாகத் தான் காணவேண்டும்.

ஒலிம்பியா : நிறுத்துங்கள் ! வேண்டாம் !

மார்ஸியா : நான் திரும்பிப்போய் அவரைக் கொன்று விடுகிறேன்.

ஒலிம்பியா : ஆயுதத்தை என்னிடம் கொடுங்கள். தங்கள் எண்ணத்தை நாங்கள் பூர்த்திசெய்வோம்.

பியாட்ரைஸ் : இதோ !.... போ !........ சீக்கிரம் வந்துவிடு.

[ஒலிம்பியாவும் மார்ஸியாவும் செல்கின்றனர்]

தாங்கள் வாடி வதங்குகிறீர்கள் ! நாம் இச் செயலைச் செய்யாமல் விடுவதே கொடிய குற்றம்.

லூக்ரிஷியா : அப்படி அது நிகழுமா ?

பியாட்ரைஸ் : இந்த சந்தேகம் தங்கள் மனதிலே பாய்ந்தோடி முடியுமுன்பே, உலகம் ஒரு மாறுதலை உணரும். வாழ்வின் இனிய ஒளியை இருட்டாக்க வந்த ஆவியை இருளும் நரகமும் விழுங்கிவிட்

டிருக்கும். என் ஸ்வாசம் லேசாக வருகிறது. கெட்டித்த உதிரம் தாராளமாக இரத்தக் குழாய்களில் ஓடுகிறது. அதோ கேள்!

(ஒலிம்பியாவும் மார்ஸியாவும் வருகின்றனர்)

அவர்........

ஒலிம்பியா: மாண்டார்.

மார்ஸியா: உடலிலே உதிரமில்லாதபடி அவரை நெறித்துக் கொன்று விட்டோம். பால்கனியின் கீழேயுள்ள தோட்டத்தில் அவர் சவத்தை எறிந்துவிட்டோம். அது கீழே விழுந்த சப்தமும் கேட்டது.

பியாட்ரைஸ்: (ஒரு பை தங்கத்தைக் கொடுத்து) இதோ! இச்செல்வத்தை எடுத்துக் கொண்டு விரைவிலே வீட்டிற்குச் செல்லுங்கள்! மார்ஸியா! என்னை நடுங்கச் செய்த அதைக் கண்டே நீயும் பயந்தாய் அல்லவா! இந்தா! இதை எடுத்துக் கொள்.

(ஓர் விலையுயர்ந்த அங்கியை அணிவிக்கிருள்)

இந்த அங்கியை என் பாட்டனர் உயர்ந்த நிலையில் செழிப்புடன் இருந்தபொழுது அணிந்திருந்தார். மக்கள் அவர் நிலைமையைக் கண்டு பொருமைப் பட்டனர். அதேபோல் மக்கள் உன் நிலைமையைக் கண்டு பொருமைப்படட்டும். கடவுளின் கருவியாக ஒரு நீதியான காரியத்திற்கு கடவுளால் நீ பயன்படுத்தப் பட்டாய். நீண்ட காலம் வாழ்வாயாக! இன்னமும் கேள். இது பெருத்த செயல் அல்ல. உன்னிடம் குற்றங்கள் இருந்தால் பச்சாதாபப்படு.

(வாத்யம் சப்திக்கிறது)

லூக்ரிஷியா: இது கோட்டை வாத்யமல்லவா! கடவுளே! கடைசி துருப்பு சீட்டைப் போலல்லவா அது சப்திக்கிறது!

பியாட்ரைஸ்: யாரோ தொந்தரவளிக்கும் விருந்தாளி வந்து கொண்டிருக்கிருன்.

லூக்ரிஷியா: சொருகுபாலம் கீழே விடப்பட்டிருக்கிறது. சபையில் காலடி சப்தம் த்வனிக்கிறது. ஓடுங்கள்! மறைந்து கொள்ளுங்கள்.

(மார்ஸியாவும் ஓலிம்பியாவும் அகலுகின்றனர்)

பியாட்ரைஸ்: நாம் போகலாம். நன்ருக ஓய்வு கொண்டதைப் போல் பாசாங்கு செய்யலாம். இப்பொழுது நிச்சயமாகப் பாசாங்கு செய்தே தீரவேண்டும். என் அவயவங்களில் வசிக்கும் ஆவி பாதிக்கப்படவேயில்லை. இது விசித்திரம் தான். அதனுல் நான் பயமற்று நிம்மதியாக உறங்கலாம். எல்லாத் துன்பங்களும் நிச்சயமாகக் கடந்தோடி விட்டன.

(போகின்றனர்)

அங்கம் 4. காட்சி 4.

[மாளிகையில் மற்ருெரு பகுதி; ஒரு புறம் சேவல்லா வருகிருன். அவனை ஒரு சேவகன் அறிமுகப்படுத்துகிருன். மற்ருெரு புறம் லூக்ரிஷியாவும் பெர்ஞர்டோவும் வருகின்றனர்.]

சேவல்லா: குருமகானுக்கு நான் செய்யவேண்டிய கடமையால், நான் தங்கள் ஓய்வை காலக்கருத்தின்றிச் சிதைக்க வேண்டியதாகி விட்டது. நான்

பிரபு செஞ்ஸியுடன் பேசவேண்டும். அவர் உறங்கு கிருரோ?

லூக்ரிஷியா: (அவசரமும் கலவரமும் நிறைந்த வளாக) அவர் தூங்குகிருர் என்றே நினைக்கிறேன்; ஆனுல் அவரை எழுப்பாதீர். சற்றே பொறுங்கள்? இது என் வேண்டுகோள். அவர் ஒரு துராத்மா. கோபவெறி கொண்ட மனுஷ்யர். இன்றைய இரவு அவருக்கு கோபக் கனவுகளின் நரகமாக இருக்கும் என்று எனக்குத் தெரியும்; ஆகவே அவரை உறக்கத் திலிருந்து எழுப்புவது நல்லதல்ல. உண்மையாகவே அது சரியல்ல. பொழுதுவிடியும்வரை பொறுத் திருங்கள் .... (தனித்து) ஓ! எனக்கு மரணுவஸ்தை யாக இருக்கிறதே!

சேவல்லா: உங்களே இப்படிக் கஷ்டப்படுத்து வதற்காக பச்சாதாபப்படுகிறேன். ஆனுல் பிரபு மிகவும் முக்கியமான குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறவேண்டியிருக்கிறது. அது என் வேலே.

லூக்ரிஷியா: (அதிகரித்த கலவரத்துடன்) அவரை எழுப்ப எனக்குத் தைரியமில்லே. வேறு யாரும் துணியமாட்டார்கள் என்றும் எனக்குத் தெரி யும் .... அது ஆபத்தானது .... அதைவிட நீர் ஓர் நாகத்தைக் கூட எழுப்பிவிடலாம்....பைசாசம் உறங் கும் சவத்தைக் கூட எழுப்பி விடலாம்.......

சேவல்லா: சீமாட்டியே! எனக்கிருக்கும் அவ காசம் கணக்கிடப்படக்கூடியபடி சில நிமிஷங்களே. யாருமே துணியாதபடியால் நானே அவரை உறக்கத் திலிருந்து எழுப்பித்தான் தீரவேண்டும்.

பியாட்ரைஸ்: (தனித்து) ஓ! பயங்கரம்! ஓ! ஒன்றுமே புரியவில்லேயே! (பெர்ஞர்டோவிடம்)

பெர்னுர்டோ! குரு மகானின் பிரதிநிதியை உன் பிதாவின் அறைக்கு அழைத்துச் செல்.

[சேவல்லாவும் பெர்னுர்டோவும் செல்கின்றனர் பியாட்ரைஸ் பிரவேசிக்கிருள்.]

பியாட்ரைஸ்: முறையிடவும் முடியாத கடவுளின் அரியணை முன்பு நிற்கும் குற்றவாளியைக் கைது செய்ய வந்த தூதுவன் அவன். விண்ணும், மண்ணும், நீதிபதிகளும் நம் செயலுக்கு விடுதலையளித்து விடுவார்கள்.

லூக்ரிஷியா: ஓ! பயங்கரத்தின் பீதியா? இன்னமும் அவர் வாழ வேண்டுமென்றிருக்கிறதா? குரு மகானின் பிரதிநிதியைப் பின் தொடர்ந்தவர்கள் அவரது மரணத்திற்கு 'வாரண்டு' வைத்திருப்பதாக முணுமுணுத்ததை நான் இப்பொழுதும் கேள்விப்பட்டேன், தடுக்கப்படாத சாதனங்களால் எல்லாம் தயார் செய்யப்பட்டது. செய்தான பிறகு அதன் பலனை நாமே அனுபவிக்க வேண்டும். இப்பொழுதும் அவர்கள் கோபுரத்தில் தேடியிருப்பார்கள். உடலைக் கண்டெடுத்திருப்பார்கள். விஷயங்களைக் கொண்டு நம்மை நிர்ப்பந்திக்கு முன்பாக அவர்களுக்குள் கலந்து ஆலோசிப்பார்கள். ஓ! கோரம்! எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டதே!

பியாட்ரைஸ்: அம்மா! புத்தி தீக்ஷண்யத்துடன் செய்யப்பட்ட செயல் நன்ருக செய்யப்பட்ட செயலாகும். நேர்மையுடன் இருப்பதைப் போல் தாங்கள் தைரியமாக இருங்கள். தங்கள் செய்கை பிறருக்குத் தெரியுமென்று திடமான மனசாட்சி கொண்ட தாங்கள் அஞ்சுவது, சோம்பேறிக்குழந்தை அஞ்சுவதைப் போலாகும். அதனுல், மறைக்

கப்பட வேண்டியவைகளைத் தங்களது நிலையற்ற விழிகளின் மீதும் மாறுபட்ட கன்னங்களின் மீதும் பொறித்து விடுகிறீர்கள். உங்களிடம் நீங்களே நம்பிக்கை கொண்டு நடந்து கொள்ளுங்கள்; பயத்தைத் தவிர வேறு சாட்சிகளுக்கு அஞ்சாதீர்கள். ஏதேனும் சந்தர்ப்பம் குற்றம் சாட்டி வருமானால் லகுவான வியப்புடன் சந்தேகத்தையும் பிணைத்து விட வேண்டும். அல்லது குற்றமற்ற பெருந்தன்மையுடன் அதைச் சமாளிக்க வேண்டும்; ஏனெனில் கொலையாளிகளால் பாவனை செய்யமுடியாது. காரியமோ நடந்துவிட்டது. இனி என்ன நிகழும் என்பது என்னைப் பொறுத்ததல்ல. நான் தீபத்தைப் போன்று எங்கும் பரவியுள்ளவள். உலகத்தைப் போர்த்துள்ள காற்றைப் போன்று சுதந்திரமுள்ளவள். உலகத்து மத்தியத்தைப் போன்று உறுதியானவள். கெட்டியான பாறையின்மீது காற்று மோதியும் அதை அசைத்திருப்பதைப் போன்றிருக்கும் என் முடிவு.

(பெர்னார்டோவும் சேவல்லாவும் வருகின்றனர்)

சேவல்லா : (அவனைச் சேர்ந்தவர்களிடம்) மாளிகையைச் சுற்றிச் சோதனையிடுங்கள். அபாயக் குரலுக்கு எதிர்க்குரல் கொடுங்கள். யாரும் தப்பிச் செல்லாதபடி வாயில்களைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பியாட்ரைஸ் : இப்பொழுது என்ன நேர்ந்து விட்டது ?

பெர்னார்டோ : என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை.......என் பிதா மரணமடைந்து விட்டார்.

பியாட்ரைஸ் : எப்படி ? சாவதா ! அவர் தூங்குகிறார். அவ்வளவுதான். நீ தவறாக நினைக்கிறாய்.

அவரது உறக்கம் மரணத்தைப்போல் மிகவும் அமைதியானது. கொடுங்கோலன் இவ்வளவு நன்ருக உறங்குவதே ஒரு ஆச்சரியம் - அவர் இறக்கவில்லை?

பெர்ஞர்டோ: இறந்துவிட்டார்; கொலை செய்யப்பட்டார்.

லூக்ரிஷியா: (மிகவும் அதிக கலவரத்துடன்) ஓ! இல்லை! இல்லை! அவர் இறந்திருக்கலாம். ஆனல் கொலை செய்யப்பட்டிருக்க மாட்டார். அவர் அறைகளின் சாவிகள் என்னிடம் மட்டுமே இருக்கின்றன.

சேவல்லா: ஹா! அப்படியா?

பியாட்ரைஸ்: கடவுளே! எங்களை மன்னித்துவிடும்! நாம் செல்வோம். என் தாய் நல்ல நிலையில் இல்லை. விசித்திரமான இந்த கோரம் அவளை ஆட்டிவைத்து ஆட்சி புரிகிறது.

[லூக்ரிஷியாவும் பியாட்ரைஸும் அகலுகின்றனர்]

சேவல்லா! அவரை யார் கொன்றிருக்கலாம் என்று நீ சந்தேகிக்கிருய்?

பெர்ஞர்டோ: நினைத்துப் பார்க்கவே எனக்குத் தெரியவில்லை.

சேவல்லா: அவர் சாவில் சிரத்தை கொண்டவர்களை நீ பெயரிட்டுச் சொல்ல முடியுமா?

பெர்ஞர்டோ: ஐயோ! சிரத்தை கொண்டவர்கள் எவருமே இல்லை. அப்படியிருக்க யாரைக் குறிப்பிடட்டும்? இம்மாதிரி சம்பவம் நேரிட்டதைக் குறித்து கண்ணீர் விடுவோர் யாரென்று கூறமுடியும்? இதோ நானிருக்கிறேன். என் தாய்! என் சகோதரி.

சேவல்லா: இது விசித்திரமாக இருக்கிறது. சித்திரவதை செய்யப்பட்டதற்குத் தெளிவான அடை

யாளங்கள் இருந்தன. அறையின் ஜன்னலின் கீழ் அக்கிழவரின் உடலை நான் சந்திரிகையொளியில் கண்டேன். அவர் அங்கே விழுந்திருக்க முடியாது. ஏனென்ருல் அவரது அங்கங்கள் செயலற்றுக் குவியலாகக் கிடந்தன. ரத்தம் இல்லை என்பது என்னவோ உண்மைதான். உங்கள் குடும்பத்தினர் அனைவரும் எல்லா விஷயங்களையும் தெளிவாக்குவது அவசியமாகிறது. குடும்பத்துப் பெண்கள் இப்பொழுது வர வேண்டும். சொல்லியனுப்புங்கள்!

(பெர்னர்டோ அகலுகிருன்)

(மார்ஸியாவுடன் காவலாளிகள் வருகின்றனர்)

காவலாளி: எங்களிடம் ஒருவன் அகப்பட்டான்.

உத்தியோகஸ்தன்: பிரபு! இந்த முரடனும் இன்னொருவரும் பாறைகளினூடே ஒளிந்து கிடப்பதை நாங்கள் கண்டோம். இவர்களே சென்ஸி பிரபுவைக் கொன்றவர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பை நாணயம் இருந்தது. இவன் தங்கத்தால் நெய்யப்பட்ட ஆடை ஒன்றை அணிந்திருந்தான். இருண்ட பாறைகளினடியில் மங்கலான சந்திரவொளியில் அது பிரகாசித்ததே இவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது. இன்னொருவன் சண்டையிட்டு வீழ்ந்து மடிந்தான்.

சேவல்லா: அவன் ஒப்புக் கொள்ளுகிருனு?

உத்தியோகஸ்தன்: அவன் திடமான அமைதியுடனிருக்கிருன். ஆனல் அவனிடமுள்ள இந்த எழுத்துக்கள் பேசுகின்றன........

சேவல்லா: அவர்களின் நடையின் போக்கா

வது விசுவாசமாக இருக்கிறதே! (படிக்கிறான்.) பியாட்ரைஸ் சீமாட்டிக்கு.

என் சுபாவம் யோசிக்கவே பிணிபடும் செய்கைக்கு, பச்சாதாபம் வரும்பொருட்டு, தங்கள் சகோதரன் விருப்பப்படி தங்களிடம் அனுப்பியுள்ளேன். நான் எழுதுவதைவிட மேலாகவே அவர்கள் தங்களிடம் பேசி அதிகமாகச் செய்வார்கள்.

தங்கள் அன்புள்ள ஊழியன்

ஆர்சினோ.

(லூக்ரிஷியா, பியாட்ரைஸ், பெர்னார்டோ ஆகியோர் வருகிறார்கள். இந்த எழுத்துத் தங்களுக்குப் புரிகிறதா சீமாட்டி ?

பியாட்ரைஸ்: இல்லை

சேவல்லா: உமக்கும் தெரியவில்லையா?

லூக்ரிஷியா: (இக்காட்சியில் அவள் நடத்தை அதிக கலவரத்துடன் காணப்படுகிறது) இது எங்கே கண்டு பிடிக்கப்பட்டது? இது என்ன? இது ஆர்சினோவின் கையெழுத்தாக இருக்கவேண்டும். இது அந்த விசித்திரமான கோரத்தைப் பற்றிப் பேசுகிறது. யாராலும் பேசப்படாத கோரம் அது. உதவியற்ற குழந்தைக்கும், அவளது மடிந்த பிதாவிற்கும் இடையே மறைவான வெறுப்போடையை உண்டாக்கிய கோரம் அது.

சேவல்லா: அப்படியா அம்மா? பிதாவிற்கும் மகளுக்குமிடையே கூட வெறுப்பு உண்டாகும்படி கொடுஞ்செயல்களை உன் தந்தை செய்தது உண்மையா?

பியாட்ரைஸ்: வெறுப்பல்ல. வெறுப்பினும் மேம்பட்டது. இது உண்மையாக உள்ளபொழுது, நீங்கள் என்னைக் கேட்பானேன்?

சேவல்லா: விசாரிக்க வேண்டிய அவசியமுள்ள காரியம் இது. பதில்கூற முன்வராத ஏதோ ரகசியம் தங்களிடம் இருக்கிறது.

பியாட்ரைஸ்: என்ன சொல்லுகிறீர்? உம் வார்த்தைகள் முரட்டுத்தனமாகவும் தைரியமுள்ளன வாகவும் இருக்கின்றன.

சேவல்லா: போப்பாண்டவரின் பெயரில் இங்குள்ள அனைவரையும் நான் கைது செய்கின்றேன். நீங்கள் ரோம் நகருக்குச் செல்லவேண்டும்.

லூக்ரிஷியா: ரோமிற்குச் செல்ல முடியாது. உண்மையிலேயே நாங்கள் குற்றவாளிகள் அல்ல.

பியாட்ரைஸ்: குற்றமா? குற்றத்தைப் பற்றிப் பேசத் தைரியமுள்ளவன் எவன்? 'உறவினரைக் கொல்லும் குற்றம்' காணாத நிரபராதி நான். தகப்பனின்றிப் பிறந்த குழந்தையை விட நிரபராதி நான். அம்மா! இது இருவரம்புள்ள பொய். உலகமோ உன்னிப்பான முடிவைக் காணக் கூடியது. இரண்டிற்கும் பாதுகாப்பான கேடயமாகத் தங்களது கண்ணியமும் பொறுமையும் பயன்படாது. என்ன! மனிதர்களின் சட்டங்களுக்கு மாதிரிகள் நீங்கள். தங்களுக்கு அவை அளிக்கக்கூடிய பிரதிபலாபலன்களை அடைவதை அதே மனுஷ்ய சட்டங்கள் தடுப்பதா? நீங்கள் புறக்கணித்த செயலை இயற்றிவிட்டார் இறைவன். அச்செயலை வேண்டிய அப்பாவி தாங்கள் வழக்கமான பொருள்களை, வழக்கமற்ற குற்ற நிவார

ஊக்குப் பாதுகாப்பாகக் கொண்டு தங்களைக்குற்றவா ளியாக்குவதா - நீங்கள் குற்றவாளிகள்! வெளுப்ப டைந்து, நடுங்கி, வியப்புற்று நிற்கிறானே அந்தப் பரி தாபமான கொடியவன்; அவன் செஞ்ஸியைக் கொன்றது உண்மையானால், நேர்மை மிக்க இறைவ னின் நேரிய கரத்தின் வாளாகவே பயன்படுத்தப்பட் டிருக்கிறான். அதனால் அதை நான் மேற்கொண்டு நடத்தினேன் என்று அர்த்தமா? மனிதனால் கூறவும் தைரியமற்ற குற்றங்களுக்கு பழிக்குப்பழி வாங்க, இறைவனே தயக்கமின்றி முன் வந்திருக்கிறார்.

சேவல்லா: அவன் மரணத்தை நீ விரும்பிய தாக ஒப்புக் கொள்ளுகிறாயா?

பியாட்ரைஸ்: அந்த முரட்டுத்தனமான விருப் பம் என் இருதயத்திலேயே மங்கியிருந்தால், அது அவனுடைய குற்றத்திற்கும் பெரியதாகி யிருக்கும். கடவுள் தீக்ஷண்ய மிக்கவர். நீதி நிறைந்தவர். ஏதோ விசித்திரமான திடீர்ச்சாவு செஞ்ஸியைச் சூழ்ந்து கொண்டிருந்தது என்றுகூட எனக்குத் தெரியும். அதை நான் நம்பியது உண்மை. எதிர்பார்த்ததும் உண்மை. அதற்காகத் தெய்வ வழிபாடு இயற்றியதும் உண்மை. அது நேரிட்டதும் உண்மை. பூவுலகிலேயே எனக்கு அதைவிட வேறு ஒய்வே இல்லை. மோக்ஷ லோகத்திலும் அதைவிட வேறு நம்பிக்கையில்லை. இப்பொழுது அதைப்பற்றி யெல்லாம் என்ன?

சேவல்லா: விசித்திரமான எண்ணங்கள் விசித் திரமான செயல்களை உண்டாக்குகின்றன. இங்கோ இரண்டும் இருக்கின்றன.

பியாட்ரைஸ்: இனியும் நீ என்னைக் கைது செய் வாயானால், உயிரின் உயிரைக் கொல்லும் கொலையாளி

யாகவும் நீதிபதியாகவும் நீ மாறிவிடுவாய். நிந்தனையின் ஆவி நிரபராதியைக் கொன்று விடுகிறது. நிரபராதியில்லாத குற்றப்போர்வை கொண்டவனுக்கு விடுதலையை அளிக்கிறது. நான் மன்றாடிக் கேட்ட கருணையை என் பிதா எனக்கு அளிக்கவில்லை. வேறு யாருடைய கரங்களோ அவரது ஆவியை அதே கருணையைக் கேட்கும்படி அனுப்பிவிட்டன. நேரிய காரணங்களுக்காக நான் ஆனந்தப்பட வேண்டியதுதான். எங்களை விட்டுச் செல்லுங்கள். மறுக்கப்பட்ட குற்றத்தைப்பற்றிய கற்பனைகளில் ஓர் உயர்ந்த குடும்பத்துக்கு இழுக்கை உண்டாக்காதீர்! எங்கள் கஷ்டங்களை அதிகரிக்காதீர்! உம் அசிரத்தையை வளர்த்திக் கொள்ளாதீர்! உள்ளவையே போதும். எமக்கிருக்கும் கஷ்டங்களை எங்களிடமே விட்டுச் செல்லும்!

சேவல்லா: அம்மா, எனக்கு தைரியமில்லை. ரோம்நகருக்குச் செல்ல ஆயத்தமாகும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். அங்கு போப்பாண்டவரின் கருணை தெரியவரும்.

லூக்ரிஷியா: ரோமிற்குச் செல்லமாட்டேன்! எங்களை ரோமிற்கு அழைத்துச் செல்லாதீர்!

பியாட்ரைஸ்: ஏனம்மா, ரோமிற்குப் போனால் என்ன? நிந்தனையை மிதித்தெறிய கவசங்கொண்ட பாதகமாக நம் அறியாமை அங்குமிருக்கும்; இங்கிருப்பதைப் போல் அங்கு மிருப்பார் ஆண்டவர். அவரது நிழல் நிரபராதிகளையும், இன்னலுறுவோர்களையும், திடகாத்திரமற்றவர்களையும் என்றுமே போர்த்தும். பிரிய அன்னையே! உற்சாகம் கொள்ளுங்கள்! என்மீது சாய்ந்து கொள்ளுங்கள்! சஞ்சரிக்கும்

உங்கள் எண்ணங்களைத் திரட்டுங்கள்! சிறிது சிற்றுண்டி அருந்துங்கள். பிறகு இது விஷயமாக அனைத்தையும் அறியப் பரிசோதனை நடத்தி நம்மைத் தயாராக்கிக் கொள்வோம். அம்மா! வா! வரமாட்டாயா?

லூக்ரிஷியா: ஹா! அவர்கள் நம்மைப் பீடத்துடன் பிணைத்து விடுவார்கள். நம் கலவரத்திலிருந்தே 'சுயநிந்தனையை' ஒரகிப்பார்கள். கியாகோமா அங்கிருப்பானா? ஆர்சினோவும் இருப்பானா? மார்சியாவுமா? எல்லோரும் இருப்பார்கள். ஒருவருக்கொருவர் எதிராகவும் இருப்பார்கள். ஒவ்வொருவனும் மற்றவன் முகத்திலிருந்து, இருதயத்தில் என்ன இருக்கிறதென்பதை நோக்குவான்! ஓ! இதென்ன கஷ்டம்!

(மூர்ச்சித்து விழுகிறாள்)

சேவல்லா: அவள் மூர்ச்சிக்கிறாள். இது ஒரு அபசகுனம்.

பியாட்ரைஸ்: கடவுளே உலகத்தின் உபயோகங்களை அவள் உணரமாட்டாள். "அதிகாரம் ஒரு மிருகம். அது பிடியைத் தகர்த்தாது. இன்னமும் கெட்டியாகப் பிடிக்கும்; அதிகாரம் ஒரு நாகத்தைப் போன்றதும்கூட. நாகத்தின் நளினப்பார்வை எதையும் குற்றங்கொண்டதாக்கி விடும்' என்று அஞ்சுகிறாள். துரோகமற்ற நெற்றியிலிருந்து உதயமான செயல்களின் உண்மைகளை. அதிகாரவர்க்கத்தின் தலைநிமிர்ந்த அடிமைகள் எப்படிக் கருதுவார்கள் என்பதை அறியமாட்டாள். மனிதனின் நீதிப்பீடத்

தில், நீதிபதியாகவும் குற்றங் கூறுபவனாகவும் வெற்றி மிக்க அறியாமையே நிற்கும் என்பதை உணர மாட்டாள். நீங்களும் தயாராகுங்கள். இழே அரண்மனையில் நாங்கள் உம்மை வந்து அடைகிறோம்.

அங்கம் — 5 காட்சி — 1

[ஆர்சினேவின் மாளிகையில் ஒரு பகுதி. கியாகோமாவும் ஆர்சினேவும் பிரவேசிக்கின்றனர்.]

கியாகோமா: தீய செயல்கள் இப்படித்தான் துரிதமான ஒரு முடிவுக்கு வந்துவிடுகின்றனவா? ஓ! குற்ற வேதனையே குற்றங்களைத் தண்டித்து விடுகிறது. மனுஷ்யனைப் பழிவாங்க அது கூர்மையாக கொட்டினாலே போதும். முன்னெச்சரிக்கை செய்ய உரத்த குரல் அதற்கு இருந்திருக்கலாகாதா? மர்மப் போர்வையை உதறி எறிந்துவிட்டது தற்காலம். பயங்கர உருவங்களை வெளிக்காட்டிவிட்டது. புனிதமான விளையாட்டை எழுப்பிவிட்டுத் திரும்பி வந்துவிட்டது பயங்கர உருவம். மனச்சாட்சியை வேட்டை நாய்களைப்போல் உற்சாகமூட்டுகிறது. ஐயோ! ஐயோ! ஒரு நரைத்த கேசம் கொண்ட கிழட்டுத் தகப்பனைக் கொல்வது தீய எண்ணம் — இரங்கக்கூடிய செயல்.

ஆர்சினே: உண்மையாகவே அது வெளிப்பட்டு விட்டது. அதுவும் துரதிருஷ்டமே.

கியாகோமா: உறக்கத்தின் புனிதமான கதவுகளைத் தாண்டிச்சென்றோம். இயற்கை, தளர்வடைந்த முதுமையில் நேரடியான சாவை அளிப்பதை ஏமாற்றினோம். பச்சாதாபப்படாத ஜீவனை சுவர்க்கத்திலிருந்து இழுத்துவந்தோம். கொழுந்துவிட்

டெரியும் குற்ற அக்கினியுள்ள வாழ்வை சாந்தமான பிரார்த்தனைகளால் அவர் தணித்துக் கொண்டிருக்கக் கூடும்.

ஆர்சினே: நான் தங்களை அச்செயலைச் செய்யும்படி தூண்டியதாக நீங்கள் கூறமுடியாது.

கியாகோமா: ஓ! எனது இருண்ட எண்ணங்களின் பிரதிபலிப்பை உனது மழமழப்பான முகத்திலே நான் என்றுமே காணமல் இருந்திருக்கலாகாதா? குறிப்புகளாலும் வினக்களாலும் என் எண்ணப் பேய்களை நோக்கும்படி என்றுமே நீ செய்யவில்லையா? அதுவும் அவ்வெண்ணங்கள் ஆசைக்குப் பழக்கப்படும்வரை......................

ஆர்சினே: சுபீட்சத்தைக்கொடாத காரியங்களின் பழியை, தங்கள் எண்ணத்துடன் ஒத்துழைத்தவர்களின் மீது தள்ளிவிடுகிறார்கள் மனிதர்கள். அல்லது பலஹீனமான குற்றவாளிகளான தங்களை விட்டுவிட்டு எதன்மீதேனும் தள்ளிவிடுகிறார்கள். அம்மாதிரியான சமயத்தில் நீ நிற்கிருய். அது பச்சாதாபத்தின் வெளுத்த நோயை உன்மீது அளித்திருக்கிறது. இதுவே உண்மை. இதை ஒப்புக்கொள். பீதி, அதன் வெட்கத்தினல், வேடம்பூண்டு மெல்லிய துக்கப் போர்வையைப் போர்த்துள்ளது என்பதை ஒப்புக்கொள். — இருந்தாலும் என்ன? — நாம் சௌக்கியமாகத்தானே இருக்கிறோம்!

கியாகோமா: அது எப்படி முடியும்? பியாட்ரைஸ், லூக்ரிஷியா, கொலையாளி ஆகியோர் ஏற்கனவே சிறையில் இருக்கின்றனர். நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்நேரத்திலேயே அதிகாரிகள் நம்மைக்

கைது செய்ய அனுப்பியிருக்கலாம். இதை நான் சந்தேகிக்கவில்லை.

ஆர்சினோ: திடீரென்று ஓடிவிட எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறேன். நாம் இப்பொழுதுதப்பி விடலாம். மயிரிழையில் தப்பியோடும் சந்தர்ப்பமும் நமக்கு இருக்கிறது.

கியாகோமா: அதைவிடக் கொடுமைகளிலே அழிந்து விடலாம். என்ன சொல்கிறாய்? ஓடுவது சுய நிந்தனையாகும் அதன் மூலமாக பியாட்ரைஸின் மீது நிச்சயமான தண்டனை தள்ளப்பட்டுவிடும். பைசாசங்களால் புத்தி கூறப்பட்ட தேவதையைப் போல், இந்த இயற்கையற்ற செயலிலே நிற்பவள், அவள் ஒருவளே. பிதாக்கொலை கொடியதே. அதையும் 'பக்தியானதாக்கும்படியாக' கூறவும் இயலாத கொடுமைக்குப் பழிவாங்கினாள். நாம் கேவலமான அபிலாஷைகளுக்காக ஓடிவிடுவதா? ஆர்சினோ! உன் சொற்களையும் பார்வைகளையும் பார்க்கும்பொழுது அவற்றை உனது இந்த பிரேரணையுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது, நீ ஒரு அயோக்கியனாக இருக்க வேண்டும் என்று நான் அஞ்சுகிறேன். இந்த நிலைக்கு என்னைக்கொண்டு வர, குறிப்புகளாலும் சைகைகளாலும் சிரிப்பாலும் பழக்கினாய். அபாயம் கனிந்த குற்றத்தில் என்னை எவ்வெண்ணத்துடன் ஆழ்த்தினாயோ! - நீ ஒரு பொய்யன்! - இல்லை. நீயே பொய். துரோகியும் கொலையாளியும் நீயே. கோழையும் அடிமையும் நீயே. ஆனால் உன்னைப் பாதுகாத்துக் கொள்.

[பின் சென்று]

பாழான... உன் நாவு உன்னுடன் எந்தப் பழியை சுமத்துகிறதோ அதை இந்த வாளே கூறட்டும்.

ஆர்சினோ : உன் ஆயுதத்தை அப்படியே வைத்துவிடு. உனக்காகப் பாழாக்கப்பட்ட நண்பனிடம் திடீரென்று உன்னை மூர்க்கமாக்குவது உன் பீதியின் கலவரமா? நேர்மையான கோபம் உன்னை அசைத்திருக்குமானால், நான் கூறியது உன்னைச் சோதிக்கவே என்பதைத் தெரிந்துகொள். என்னைப் பொறுத்த வரையில் அன்பே என்னை இதுவரை இழுத்து வந்து விட்டது. என் திடமான மனநிலை பச்சாதாபப் படுமானாலும் நான் அதிலிருந்து பின்வாங்கமாட்டேன். நீதியின் மந்திரிகள் நீ பேசிக்கொண்டிருக்கும் இப்பொழுதே கீழே காத்திருக்கிறார்கள். அவர்களே இந்த சில நிமிஷ அவகாசங்களை எனக்கு அளித்தார்கள். உன் மனையாளிடம் சோகமான தேறுதல் ஏதேனும் கூற விரும்பினால். பின்கட்டின் ரகசிய வழியாகச் சென்று அதைத் தவிர்ப்பதே நல்லது

கியாகோமா : பெருந்தன்மையுள்ள நண்பா! என் ஜீவனை அளித்து உன்னை விலைக்கு வாங்கி விடுவதானால்கூட, நீ எப்படி என்னை மன்னிக்க முடியும்?

ஆர்சினோ : ஒரு நாள் அதிகமாகத் தாமதித்து வருகிறது அந்த ஆசை, துரிதப்படுத்து. நான் வருகிறேன். கதவண்டை ஏதோ காலடிச் சப்தம் தங்கள் காதில் விழுகிறதா?

[கியாகோமா அகலுகிறான்.]

இதற்காக நான் வருந்துகிறேன். அவன் வாயிலண்டையே காத்துக் கிடக்கிறார்கள் காவலாளிகள். அவனையும் அவர்களையும் விட்டு விட்டுப் போக நான்

செய்த சூழ்ச்சி அது. நவீன உலகின் வர்ணந் தீட்டப்பெற்ற காட்சிகளில் மௌனமான சுபநாடகத்தை நடிக்க நான் நினைத்தேன். நன்மையும் தீமையும் கலந்த சூழ்ச்சிகளை மற்றவர்கள் பின்னி விடுகிறார்கள். அதைப்போன்ற சூழ்ச்சியில் எனது விசித்திரமான அபிலாஷைகளை எட்டிவிட நினைத்தேன். ஆனால் ஒரு சக்தி தோன்றிற்று. அது என் சூழ்ச்சியின் சரடுகளைப் பற்றி அதை அழிவின் வலையாக மாற்றி விட்டது - ஹா!

[ஒரு சப்தம் கேட்கப்படுகிறது]

என் பெயர் எங்கும் அறிவிக்கப்படுகிறதா? நான் கேட்பது அதுவேதானா? ஆனால் நான் அவலமான வேஷத்தில் கடந்துசெல்வேன். கந்தைகளை முதுகின் மீது அணிவேன். போலித்தனமான நிரபராதித் தன்மையை முகத்தில் கொள்வேன். ஜனத்திரள் தப்பெண்ணம் கொண்டுள்ளது. நான் காண்பதைவிட வேறு எதையோ தீர்ப்பாகக் கொண்டு விடுகிறது. அதைக் கடந்து செல்வேன் நான். பிறகு எல்லாம் சுலபமாக இருக்கும். ஒரு புதுப்பெயர், ஒரு புதுதேசம், ஒரு புதுவாழ்க்கை, நாகரீகமாக்கப்பட்ட பழைய எண்ணங்கள் ஆகியவை, பிரிந்த ரோம்நகரின் கொடுமைகளை மாற்றும். அவைகளே என்னை மறைக்கும் ஆடைகளாக இருக்கவேண்டும். மாறுபடாதவைகளாக இருக்கவேண்டும் அவை. ஓ! சென்றவை எனக்கு ஓய்வைக் கொடாவோ என்று அஞ்சுகிறேன். என்னையன்றி வேறு எவருமே என் தீச்செயல்களை உணராத பொழுது, என் இருதய அவமதிப்பு என்னைத் துன்புறுத்துவானேன்? என் வசையிலிருந்து பறந்து செல்லும் சக்தி எனக்கே கிடையாதா? நான்

அதன் அடிமையாக - எது? ஒரே வார்த்தை? அதைப் பொய்யான உலகம் ஒருவருக்கொருவர் எதிராகப் பயன்படுத்துகிறது. தனக்குப் பயன்படுத்திக் கொள்வதில்லை. தற்கொலைக் கென்று குத்துவாளைப் தரிப் போன் எவனுமில்லை. அதைப்போலவே உலகமும் இப்பொழுது நான் ஒவ்வொரு பார்வையிலிருந்தும் பின் தங்கி மறைந்து செல்கிறேன். என்னை என்னிடமிருந்தே மறைத்துக் கொள்ள என்ன வேஷம் இருக்கிறது.

(அகலுகிருள்)

அங்கம் 5 காட்சி 2

[நீதிமன்றம். காமில்லோ, நீதிபதிகள் ஆகியோர் அமர்ந்துள்ளனர். மார்ஸியா கொண்டுவரப்படுகிருன்.]

முதலாவது நீதிபதி: குற்றவாளியே! இன்னமுமா பிடிவாதமாக மறுக்கிருய்? நீ குற்றவாளியா நிரபராதியா என்று நான் கேட்கிறேன். உன் குற்றத்தில் பங்கு கொண்டவர் யாவர் என்று கேட்கிறேன் உண்மையைச் சொல். பரிபூர்ணமான உண்மையைச் சொல்?

மார்ஸியா: ஐயோ, கடவுளே! நான் அவரைக் கொல்லவில்லையே! எனக்கு ஒன்றுமே தெரியாதே!

இரண். நீதிபதி: அவனை அப்புறப்படுத்துங்கள்.

முதலா. நீதிபதி: வேதனையந்திரத்தை முத்தமிட்டு வெளுத்த உமது உதடுகளால் பொய்பேச உமக்கு அவ்வளவு தைரியமா? காதலர்களின் கூற்

றையும் அத்துடன் தர்க்கிக்கும்படி அவ்வளவு சாமான்யமாகவா இருக்கிறது என்கேள்வி? அம்மா திரியான தர்க்கமே உன் உயிரையும் ஜீவனையும் பறக்கடிக்கச் செய்துவிடும் போலிருக்கிறது. அப்பாற் செல்!

மார்ஸியா: உறக்கத்தில் அவர் கழுத்தை நான் நெறித்துக் கொன்றுவிட்டேன்.

முத. நீதி: அப்படிச் செய்ய உன்னைத் தூண்டியது யார்?

மார்ஸியா: அவரது புதல்வர் கியாகோமாவும், வாலிப சிரேஷ்டகுரு ஆர்சினேவும் என்னை பேட்ரல்லாவிற்கு அனுப்பினார்கள். அங்கு பியாட்ரைஸ் சீமாட்டியும், லூக்ரிஷியா சீமாட்டியும் ஆயிரம் கிரௌன்கள் கொடுப்பதாக ஆசை காட்டினர். நானும் என் சகாவும் அவரைக் கொலை செய்து விட்டோம். இனி எனக்கு சாவைக் கொடுங்கள்.

முத. நீதி: இது உண்மையைவிட கீழ்த்தரமாகப் புலப்படுகிறது. காவலாளிகளே! கைதியை இப்படி முன்னுக்கு அழைத்து வாருங்கள்.

[லூக்ரிஷியா, பியாட்ரைஸ், கியாகோமா ஆகியோர் காவலுடன் வருகின்றனர்]

இம்மனிதனைப் பாருங்கள்! கடைசியாக நீங்கள் இவனை எங்கு கண்டீர்கள்?

பியாட்ரைஸ்: நாங்கள் இவனை எப்பொழுதும் பார்த்ததில்லை.

மார்ஸியா: பியாட்ரைஸ் சீமாட்டியே! என்னை உமக்கு நன்றாகத் தெரியும்.

பியாட்ரைஸ்: உன்னைத் தெரியுமா? எப்படி? எங்கே? எப்பொழுது?

மார்ஸியா: உம் தகப்பனரைக் கொலைசெய்ய லஞ்சம் பயமுறுத்தல்களுடன் என்னைத் தூண்டியது தாங்களே என்று உமக்குத் தெரியும். விஷயம் முடிந்ததும் என்னைத் தங்கத்தால் நெய்யப்பட்ட ஆடையால் போர்த்தியது தாங்களே. என்னை சவாரி செய்து கொண்டு போகும்படி கட்டளையிட்டதும் தாங்களே. நான் எப்படிச் சவாரி செய்துகொண்டு சென்றேன் என்பதைத் தாங்களும் கண்டீர்கள். கியாகோமா பிரபுவே! லூக்ரிஷியா சீமாட்டியே! நான் புகல்வது அனைத்தும் உண்மை என்று உங்களுக்கே தெரியும்.

[பியாட்ரைஸ் அவனை நோக்கி முன் செல்கிருள். அவனே முகத்தை மூடிக்கொண்டு பின்னுக்கு நகருகிருன்]

சூன்யமான மண்ணுலகில், அக்கண்களில் தோன்றும் பயங்கர வெறுப்பு! என்னை நோக்குவதிலிருந்து அவற்றைத் திருப்புங்கள்! அவை என்னைப் புண்படுத்துகின்றன. உங்களது கொடுமைகள் உண்மையை என்னிடமிருந்து பலாத்காரமாகப் பிடுங்கிவிட்டன. பிரபுக்களே! நான் எல்லாவற்றையும் சொல்லியாகிவிட்டது. மரணத்தைத் சந்திக்க என்னை அழைத்துச்செல்ல உத்திரவிடுங்கள்!

பியாட்ரைஸ்: மகாபாபி! உன்னைக்கண்டு நான் பச்சாதாபப்படுகிறேன். இன்னமும் சற்றே பொறு. காமில்லோ! காவலாளிகளே! அவனை அழைத்துச் செல்லுங்கள்!

பியாட்ரைஸ்: கார்டினல் காமில்லோ! பெருந்தன்மைக்கும் அறிவிற்கும் பெரும்புகழ் படைத்தவர்

நீர்! இதைப்போன்ற ஒரு நீச நாடகத்தைக் காணவா தாங்கள் இங்கு அமர்ந்திருப்பது? எங்கோ மறைவாகக் கிடந்த நடுங்கும் அடிமை இவன். கடின இருதயத்தையும் குலுக்கும் கஷ்டங்களிலிருந்து அவனை இழுத்து வந்திருக்கிறீர். அவனைப் பதில் கூறும்படி கட்டளை இடுகிறீர். அவன் நம்புகிறபடி பதில் கூறும்படி அவனை விடுவதில்லை. சந்தேகப்பிராணிகள் கோரியபடி அவனைப் பதில் கூறும்படி விடுகிறீர். அவர்களுக்குத் தேவையான விடைக்கு ஏற்ற கேள்விகளையே இடுகின்றனர் அவர்கள். பெருத்த சோகமான சித்திரவதைகளின் அவைகளிலிருந்து நிர்மூலமாக்கப்பட்டவர்களையும் கடவுள் காப்பாற்ற முற்படுவார்-ஆபத்தில் அக்கேள்விகளைக் கேட்க அனுமதிக்கிறீர். இப்பொழுது சொல்லுங்கள்! உமக்கு நிச்சயமாகத் தெரிந்தவரை சொல்லுங்கள்! உமது மெல்லிய திரேகத்தை அந்த சக்கரத்தின் மீது வைத்துவிட்டு, "உன் சிறிய மருமகனை விஷமிட்டதாக ஒப்புக்கொள். அழகிய நீலவிழிகள் கொண்ட குழந்தையை, உன் வாழ்வின் நக்ஷத்திரமாக விளங்கிய குழந்தையை, விஷமிட்டதாக ஒப்புக்கொள்" என்று உமக்குக் கூறப்பட்டால் எல்லோருமே பார்த்துக் கொண்டிருந்தாலும்,பரிதாபகரமான துரிதமாக வரும் சாவு, இரவு பகல் விண் மண் காலம் ஆகியவற்றில் எதிர்பார்க்கப்பட்டவை, முதலானவை, அபரிமிதமான துக்கத்தில் உமக்கு மாற்றப்பட்டுவிடும். 'நான் எதையும் ஒப்புக்கொண்டு விடுகிறேன்' என்று நீர் கூறுவீர். அந்த அடிமையைப் போல் மானத்தைச் சித்திரவதை யாளர்களிடமிருந்து கெஞ்சிக் கேட்பீர் கார்டினல்! நான் தங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்.

என் நிரபராதித் தன்மையைத் தாங்கள் அச்சுறுத்துங்கள்.

காமில்லோ: (மனங்கசிந்து) பிரபுக்களே! உங்கள் எண்ணம் யாதோ? வெட்கம்! கண்கலங்க வைப்பது மகா வெட்கம்! இருதயம் இவர்களது நீரருவி. அது உறைந்து போயிற்றே என்று நான் எண்ணினேன். இவள் குற்றமற்றவள் என்பதை நான் என் உயிர்மீது ஆணையிட்டுச் சத்தியம் செய்வேன்.

நீதிபதி: இருந்தாலும், அவளையும் சித்திரவதை செய்யத்தான் வேண்டும்.

காமில்லோ: இறைவனது அன்பின் பூர்ண திருட்கி யுருவே அவள். அவளைப்போல் மண்ணுலகில் வருந்தி வாழ்ந்தோர் எவருமில்லை. அவளைவிட என் சொந்த மருமகனையும்கூட நான் சித்திரவதை செய்து விடுவேன். (அவன் பிழைத்திருந்தால் ஏறக்குறைய அவள் வயதாகவே இருப்பான். அவன் கேசம்கூட அவள் கேசத்தின் நிறம் கொண்டது. அவன் விழிகளும் பார்வைக்கு அவளுடையதைப் போலவே இருக்கும். ஆனால் மெல்லிய நீலநிறங் கொண்டவை அவன் விழிகள்) பேச சக்தியற்ற குழவியைப் போன்று புனிதமானவள் அவள்.

நீதிபதி: நல்லது பிரபு! வேதனையந்திரத்தை நீர் தவிர்ப்பீரானால், அவள் புனிதம் உம் சிரத்தோடு நிற்கவேண்டியதுதான். இக்கொடிய குற்றத்தைச் சட்டத்தின் கடுமையான உருவங்களால் தொடர்ந்து பார்க்கும்படி குருமகான் எங்களுடன் சேர்ந்து கூறியுள்ளார். அதுவுமன்றி கூரிய ஆயுதங்களையும் கூட குற்றவாளிகளிடம் பிரயோகிக்கும்படி கூறியுள்ளார்.

கைதிகள் பிதாக்கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள னர். அந்த சாட்சியத்தின்படி சித்திரவதை நீதியா னதே:

பியாட்ரைஸ்: எந்த சாட்சியம்? இவனுடை யதா?

நீதிபதி: அதுவும் தான்.

பியாட்ரைஸ்: (மார்ஸியாவை நோக்கி) அரு கில் வா! ஒரு நிரபராதியைக் கொல்லும் பொருட்டு, பெருந்திரளான மனுஷ்யக் கும்பலிலிருந்து பொறுக் கப்பட்ட நீ யார்?

மார்ஸியா: நான் மார்ஸியா. தங்கள் தகப்ப னரின் அடிமை.

பியாட்ரைஸ்: என்னை நன்ருகப்பார். நான் கேட்பதற்குப் பதில் சொல். (நீதிபதிகள் பக்கம் திரும்பி) அவன் முகத்தோற்றத்தை நான் நன்ருகக் கவனித்தேன். அசத்தியம் சிற்சில சமயங்களில் தான் சத்தியமென்று வெளியிட விரும்பியவற்றைக் கூறுது. அவன் கூறுவதைக் காணவும் தைரியமில்லை அவனுக்கு. பூமியை முறைத்து நோக்கியபடியே தலை குனிந்து நிற்கிருன். (மார்ஸியாவை நோக்கி) என்ன! உன் தகப்பனை நான் கொன்றேன் என்றும் கூட நீ சொல்லிவிடுவாய் போலிருக்கிறதே!

மார்ஸியா: ஓ! என்னைக் காப்பாற்றுங்கள்! என் மூளை சுழல்கிறது. என்ருல் பேசவும் முடிய வில்லை. கோரமான கொடுமைகள் உண்மையை பலாத்காரமாக வெளிப்படுத்தி விட்டன. என்னை அப்பாற் கொண்டு செல்லுங்கள். அவள் என்னைப் பார்க்கவே வேண்டாம். நான் குற்றவாளி. அயோக்கி

யன். அபாக்யவான். எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லிவிட்டேன். என்னைச் சாகவிடுங்கள்.

பியாட்ரைஸ்: பிரபுக்களே! நான் செய்ததாகக் கற்பிக்கும் குற்றத்தைத் திட்டமிடவல்ல கடினசித்தமுள்ளவளாக இயற்கையிலேயே நான் இருந்தால், என் கொடுஞ்செயலின் இருபுறமுள்ள ஆயுதத்தை விட்டுப் போயிருப்பேன் என்று நினைக்கிறீர்களா? உங்கள் சந்தேகங்கள் நான் குற்றத்தைத் திட்டமிட்டவாதாக இவ்வடிமைக்குப் போதிக்கின்றன. இவ்வாளில் ரத்தம் கசிகிறது. தன்பிடியிலே செதுக்கப்பட்டிருப்பது என் பெயர். திரளான விரோதிகளிடையே உரையின்றி அது கிடப்பது என் மரணத்திற்காகவா? அமைதிக்கு மிகவும் அவசியமுள்ள ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் சிறிய இந்த முன்நடவடிக்கையைக் கூடவா செய்திருக்கமாட்டேன்! நினைவிலே ரகசியத்தைத் தீட்டிக்கொண்ட கள்வன் தன் கல்லறையைத் தானே சித்தம் செய்துகொண்டதைப் போலிருக்கிறது. அவன் அற்ப ஆயுளைப்பற்றி என்ன! ஓராயிரம் ஜீவான்மாக்களாயினும் என்ன? ஒரு பிதாக்கொலை அவற்றைத் தூசிபோல் மிதித்துவிடும். பாருங்கள்! அவன் இன்னமும் வாழ்கிறான் (மார்ஸியா பக்கம் திரும்பி) நீயும்........ மார்ஸியா - என்னைக் காப்பாற்றுங்கள்! என்னிடம் இன்னமும் பேச வேண்டாம்! பச்சாதாபம் கனியும் கடுமையான குரல், மௌனமான அந்த த்வனி ஆகியவை கொடுமையைவிட அதிகமாக என்னைப் புண்படுத்துகின்றன. (நீதிபதிகளிடம்) நான் எல்லாவற்றையும் சொல்லியாகி விட்டது. கருணையின் பொருட்டாவது என்னை மரணத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

காமில்லோ: காவலாளிகளே! அவனை பியாட்ரைஸ் சீமாட்டியருகில் அழைத்துச்செல்லுங்கள். இலையுதிர் காலத்தில் வாடைக்காற்றிலே மூச்சுவிடும் இலைபோல் அவன் அவள் மதிப்பிலிருந்து சுருங்கி விழுகிருன்.

பியாட்ரைஸ்: வாழ்விற்கும் சாவிற்கும் இடையோரத்து மயக்கத்தில் ஒடுங்குபவனே! எனக்கு பதில் கூறுமுன் நின்று நிதானி. அதைப்போலவே குறைந்த பீதியுடன் கடவுளிடம் பதில் கூறு! நாங்கள் உனக்கு என்ன தீமை செய்தோம்? ஐயோ! நான் உலகிலே சில வருஷங்களே வாழ்ந்துள்ளேன். அவைகளும் சோகம் நிறைந்தவை. விழித்தெழும் என் வாழ்வின் நிமிஷங்களைத் துளிகளாக்கி அவற்றில் வாலிபத்து இனிய நினைவுகளை விஷமாக்குகிருர் ஒரு பிதா. பிறகு ஒரே குத்தில் நிரந்தரமான என் ஆவியைப் போக்குகிருர். என் அப்பழுக்கற்ற புகழைப் பாழாக்குகிருர். இருதயத்திற்கும் ஒரு இருதயம் உண்டாளுல், அதனுள் உறங்கும் சாந்தியையும் அழித்தார். என் விதி அப்படியிருந்தது; ஆனுல் அப்புண் மரணத்தை அளிக்கக்கூடியதாக இல்லை. ஆகவே என் பரம பிதாவிற்கு நான் அளித்த பிரார்த்தனை வெறுப்புத்தான். இறைவன் அன்பும் கருணையும் கொண்டு அவரை வெட்டித்தீர்த்து விட்டார். அவரது தவறு குற்றமாகி என்மீது சேர்ந்து விட்டது. நீதான் என்மீது குற்றம் சாட்டுபவனே? சுவர்க்கத்திலே கருணையை எதிர்பார்ப்பாயாளுல், மண்ணிலே நீதியைக் காட்டு. கடின இருதயம் ரத்தக்கையைவிடக் கொடியது. நீ கொலைகளைச் செய்திருந்தால், மனிதனும் கடவுளும் இயற்றிய சட்டங்களை மிதித்தெறிந்து உன் வாழ்

வுப்பாதையை நிர்மாணித்திருப்பாயானால், நீதிபதியின் முன்பு ஓடாதே. 'என்னை சிருஷ்டித்தவரே. நான் இதைச் செய்தேன். இன்னமும் செய்தேன். ஏனென்றால் என்னைவிடப் புனிதமான நிரபராதி எவனும் இருக்கவில்லை. குற்றவாளிகளும் நிரபராதி களும் என்றுமே பொறுத்திராத வண்ணம் அவள் பொறுத்தாள். அவள் அனுபவித்த கொடுமைகள் சொல்லுந்தரமன்று. நினைக்கக் கூடியவையுமல்ல. தங்கள் கரமே இறுதியில் அவளை மீட்டது. என்சொற் களால் நான் அவளையும் கொன்றேன். அவள் உறவி னரையும் கொன்றேன்' என்று கூறுதே. ஒரு புரா தன குடும்பம், அப்பழுக்கற்ற புகழ்படைத்த குடும் பத்திடம் மக்களின் மனம் கொண்டுள்ள மரியாதை யைக் கொல்வது எவ்வளவு கொடியது என்று சிந் தனை செய்துபார். குழவிப் பருவத்திலுள்ள கருணையைக் கழுத்தை நெறித்துக் கொல்வது எப்படியிருக்கும் என்று யோசித்துப்பார். கபட மற்ற பார்வைகளில் கனியும் நம்பிக்கையில் தாளாடியது அக்கருணை. அவஸ்தைப்படவேண்டிய ஒரு குற்றமாகும் வரை, நிரபராதித்தன்மையுடன் தோற்றமளிப்பவைகளை ரத்தத்தாலும், நிந்தனை யாலும் இழுத்து அவமதிப்பது எத்தகையது என்பதை நினைத்துப்பார்த்தாயா? கடவுளே! என் முறையீட்டைக்கேளும். நான் ஒன்றுமறியாதவள் என்று சத்தியமாகக் கூறுகிறேன். பலாத்காரம், பழி, குற்றத்திடம் கொண்டுள்ள மதிப்பு, நான் கேட்பதற்கு உன்னைப் பதில் கூறத்தூண்டும் சக்தி ஆகியவைகளுக்கு இடையேயுள்ள வித்தியாசங்களைக் கூட உலகம் இழந்து விடட்டும். நான் பிதாவைக் கொன்றவளா இல்லையா?

மார்ஸியா: தாங்கள் இல்லை

நீதிபதி: இது என்ன ?

மார்ஸியா: நான் யார் யாரைக் குற்றம் கூறினேனோ அவர்கள் அனைவரும் நிரபராதிகள் என்று கூறுகிறேன். நான் ஒருவனே குற்றவாளி.

நீதிபதி: அவனைக் கொடுமைப்படுத்துங்கள். அவை வியப்பை உண்டாக்கக் கூடியவைகளாகவும், நீடித்தவைகளாகவும் இருக்கட்டும். இருதயத்து மாமிச அணுவையும் பிய்த்தெடுக்கக்கூடிய கொடுமையாக இருக்கட்டும். ஒப்புக்கொள்ளும்வரை அவனை அவிழ்த்து விடாதீர்கள்.

மார்ஸியா: உங்கள் இஷ்டப்படி என்னை அவஸ்தைப் படுத்துங்கள். என் கடைசி மூச்சிலே உயர்ந்த உண்மையை, கடினமான அவஸ்தை வெளிப்படுத்தி விட்டது. அவள் ஒன்றுமேயறியாதவள்! மனிதர்களல்ல, ரத்தவெறி கொண்ட வேட்டை நாய்கள் வேண்டுமானாலும், என்னை விழுங்கட்டும். இயற்கையின் உன்னதமான அப்பகுதியை, அழிவை உண்டாக்குவதற்காக நான் வெளியிடமாட்டேன்.

[மார்ஸியா காவலுடன் போகிறான்]

காமில்லோ: பிரபுக்களே! நீங்கள் இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்?

நீதிபதி: கொடுமைகள், வெளுத்த உண்மையை வெளிப்படுத்தட்டும். மும்முறை பனிக்காற்றால் மோதப்பட்ட பனியைப்போல் வெளுத்த உண்மை வெளியாகட்டும்.

நீதிபதி: (பியாட்ரைஸை நோக்கி) அம்மா! இக்காகிதம் உமக்குத் தெரியுமல்லவா?

பியாட்ரைஸ்: கேள்விகளால் என்னைச் சிக்க வைத்து விடாதீர். என் மீது குற்றங் கூறுபவனாக அங்கு நிற்பது யார்? ஓ! நீரே அவனாக இருந்துவிட முடியுமா? அப்படியானால் என் நீதிபதி யார்? குற்றங் கூறுவோன், சாட்சி, நீதிபதி எல்லாமாக ஒருவரே இருப்பதா? இங்கே ஆர்சினோவின் பெயர் இருக்கிறது. — எங்கே ஆர்சினோ? அவன் கண்கள் என் கண்களைச் சந்திக்கட்டும். இந்த எழுத்தின் பொருள் என்ன? ஐயோ! உமக்கே இது என்னவென்று தெரியாது. அதைக்கொண்டு ஏதோ தீமை என்று கருதி, எங்களை நீங்கள் கொன்று விடுவீர்களோ?

[ஒரு அதிகாரி வருகிறார்]

அதிகாரி: மார்ஸியா மாண்டான்.

நீதிபதி: அவன் என்ன சொன்னான்?

அதிகாரி: ஒன்றுமே சொல்லவில்லை. அவனைச் சக்கரத்தின்மீது கட்டியதும், ஆழ்ந்த இன்னலால் மதி கலங்கியவனைப்போல் நகைத்தான். தன் மூச்சையடக்கிக்கொண்டு மாண்டான்.

நீதிபதி: இன்னமும் பிடிவாதமாக இருக்கும் கைதிகளுக்கு நாமாகக் கேள்வியிடுவதைத்தவிர வேறு வழியில்லை.

காமில்லோ: மேல் நடவடிக்கைகளை நான் நிறுத்துகிறேன். ஒன்றுமறியாத கனவான்களின் சார்பாக என் உற்சாகத்தைப் புனிதபிதாவிடம் உபயோகித்துப் பார்க்கிறேன்.

நீதிபதி: போப்பாண்டவரின் கருணை நிறைவேற்றப்படட்டும். அதுவரை குற்றவாளிகளை

தனித்தனி அறைகளுக்கு இட்டுச்செல்லுங்கள். யந்திரங்கள் சித்தமாக இருக்கட்டும். இன்றிரவு போப்பாண்டவரின் கருத்து முன்னரைப்போல் கடினமாகவும் பக்தி நிரம்பியதாகவும் நேர்மை யாகவும் இருக்குமானால், மூச்சுக்கு மூச்சாக அவர்கள் சதை நரம்புகளிலிருந்தே உண்மையைப் பிழிந் தெடுப்பேன்.

[போகிறார்]

அங்கம் — 5 காட்சி — 3

[சிறையில் ஒரு அறை. பியாட்ரைஸ் ஒரு மஞ்சத்தில் சயனித்திருக்கிறாள். பெர்னார்டோ வருகிறான்.]

பெர்னார்டோ: உறக்கம் எவ்வளவு கண்ணிய மாக அவள் முகத்தில் தங்கியிருக்கிறது! உல்லாச மான தினத்தின் கடைசி நினைவுகள் இரவில் கனவாகி நீடிப்பதைப் போலிருக்கிறதே! சென்ற இரவில் கொடுமைகளை அனுபவித்த பிறகும் அவள் சுவாசம் மென்மையாகவே வெளிவருகிறது. ஐயோ! இனி எனக்கு உறக்கமே பிடிக்காது போலிருக்கிறது. இவள் மூடிய மென்மலர் ஒய்வு அம்மலரில் தங்கியுள்ள பனி. அதை நான் உலுக்கவேண்டும். — அக்கா! எழுந்திரு! எழுந்திரு! உனக்கு உறக்கமே வர வில்லையா?

பியாட்ரைஸ்: (விழித்து) நாமெல்லோரும் சுவர்க்கத்தில் இருப்பதாக நான் கனவுகண்டேன். தகப்பனாரில்லாத பிறகு, இச்சிறைகூட ஒரு சுவர்க்க மாகவே இருக்கிறது.

பெர்னார்டோ: அக்கா! உன் கனவு கனவாகா

மலே இருக்கட்டும்! கடவுளே! நான் எப்படிச் சொல்வது?

பியாட்ரைஸ்: என்ன சொல்லவேண்டும்?

பெர்னூர்டோ: சொல்வதை யோசித்துப்பார்க்கும்பொழுதே என் இருதயம் பிளந்துவிடும் போலிருக்கிறது. நீ அப்படி அமைதியுடனும் ஆனந்தத்துடனும் என்னை நோக்காதே!

பியாட்ரைஸ்: இங்கே பார். நீ எனக்கு அழுகையை உண்டாக்குகிறாய். நான் மாண்டு விட்டால் நீ நட்பின்றிக் கிடப்பாயே! — நீ என்ன சொல்ல வேண்டுமோ, அதைச் சொல்லிவிடு.

பெர்னூர்டோ: அவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். இதற்கு மேலும் அவர்களால் கொடுமைகளைச் சகிக்க முடியவில்லை.

பியாட்ரைஸ்: ஹா! ஒப்புக்கொள்ள அங்கே என்ன இருந்தது? கொடுமையாளர்களைப் போற்றும் பொருட்டு அவர்கள் நீசத்தனமான பொய்யைப் புகன்றிருக்க வேண்டும். தாங்கள் குற்றவாளிகள் என்று அவர்கள் ஒப்புக்கொண்டு விட்டார்களா? நிரபராதித்தன்மையே! உன்னை உணராதவர்களின் முன் உனது அமைதியான முகபிம்பத்தைக் காட்டாது குற்றப் போர்வையை அணிந்துகொண்டு விடுகிறாயா?

[லூக்ரிஷியா கியாகோமா ஆகியோர்களுடன் காவலாளிகள் சூழ வருகிறார் நீதிபதி]

இழிவான இருதயம் படைத்தவர்களே! ஏதோ சிறிய தொல்லைகளின் காரணமாகப் பல நூற்றாண்டுகளின் மகோன்னதத்தை மண்ணில் வீழ்த்துவதா?

அத்தொல்லைகளோ, தாம் பாய்ந்தோடும் அங்கங்களைப்போல் மாளக்கூடியவை. சூரியனைப்போல் மனுஷ்ய புகழ் ஆவியின் மேலாக வாழவேண்டிய அந்த தெய்வீகப்பெருமை, ஒரு கேலிச்சொல்லாகவும் உபவார்த்தையாகவும் மாற்றப்படுவதா? என்ன! இவ்வுடல்களைக் குதிரையின் கால்களால் இழுத்துச் செல்ல விடுங்கள். எங்கள் கேசம், அறிவற்ற வீணான மக்கட் கூட்டத்தின் பாதச்சுவடுகளைத் துடைத்துச் செல்லட்டும். எங்கள் கெடுதியைத் தங்கள் கண் காட்சியாகவும் பிரார்த்தனைக் காட்சியாகவும் அவர்கள் கொள்ளட்டும். தங்கள் இருதயத்தை காலியாக்கிக் கொள்வதைப்போல் கோவில்களையும் உல்லாச நிலையங்களையும் காலிசெய்யட்டும். உலகை நீக்கச் செல்லும் எங்கள் மீது, சிதறிய கூட்டம் சாபங்களையோ, லேசான பரிதாபத்தையோ எறியட்டும். நாங்கள் விட்டுச் செல்வோம்........... எங்கள் வாழ்வின் ஞாபகார்த்தமாக எதை விட்டுச் செல்வோம்! இழுக்கு, ரத்தம், பீதி, திகைப்பு ஆகியவைகளையா? அநாதைகளுக்கு அன்னையாக இருந்தவர் தாங்கள். தங்கள் குழந்தைகளைக் கொல்லாதிர். அவளது தவறுதல்கள் தங்களைக் கொல்லும்படி விட வேண்டாம். சோதரா! என்னுடனே இந்த வேதனு யந்திரத்தின்மீது படுத்துக்கொள். பிணத்தைப் போல் நாம் ஒவ்வொருவரும் மௌனமாக இருப்போம். அது விரைவிலேயே கல்லறையைப் போல் மென்மையாகி விடும். கொடிய வேதனுயந்திரம் பீதியில் பொய்யையே பிடுங்கியெடுக்க முடியும்.

கியாகோமா: கடைசியாக உன்னிடமிருந்தும் அவர்கள் உண்மையைப் பிய்த்தெடுப்பார்கள்—அந்த

கொடுமைகளும் அவஸ்தைகளும் வேண்டாம்! நீ குற்றவாளியே என்று தயைசெய்து ஒப்புக்கொள்.

லூக்ரிஷியா: ஓ! உண்மையைப் பேசுங்கள். நாம் அனைவரும் விரைவிலே மாண்டுபோவோம். மரணத்திற்குப் பின் நம் நீதிபதி கடவுளே. அவர்களல்ல. கடவுள் நம்மீது கருணை கொள்வார்.

பெர்னார்டோ: பிரிய சோதரீ! உண்மையிலேயே அப்படியிருக்குமானால் சொல்லிவிடு. பிறகு போப்பாண்டவர் நிச்சயமாக மன்னித்துவிடுவார். எல்லாம் இனிது முடியும்.

நீதிபதி: ஒப்புக் கொள்ளுங்கள். இன்றேல் உன்னிப்பான கொடுமைகளால் உங்கள் அங்கங்களைச் சிதைப்பேன்..........

பியாட்ரைஸ்: கொடுமைகள்! வேதனையந்திரத்தை இனி ராட்டையாக மாற்றிச் சுற்றுங்கள்! உங்கள் நாயைத் துன்புறுத்துங்கள்! எஜமானன் உதிர்த்த ரத்தத்தைக் கடைசியாகத் தாங்கியது எப்பொழுது என்று அது கூறும்....அப்படிச் சொல்பவள் நானல்ல. என் வேதனைகள் மனதைச் சார்ந்தவை. இருதயத்தின்பாற்பட்டவை. ஜீவனைச் சேர்ந்தவை. அந்தரங்க ஆவியைச் சார்ந்தவை. அந்தரங்க ஆவி, எரியும் ரணத்தைப் போல் கண்ணீர் சொரிந்து உள்ளுக்குள்ளாகவே அழுகிறது. தீய உலகிலே எவனும் சத்தியவந்தனல்ல. என் உறவினர்கள் தங்களைத் தாங்களாகவே கைவிட்டு விட்டுக் கிடப்பதைக் கண்டு அழுகிறது அந்தரங்க ஜீவன். நான் வாழ்ந்த இழிந்த வாழ்க்கை, அதன் இழிவான முடிபு, எனக்கு விண்ணும் மண்ணும் காட்டிய சின்னஞ்சிறு நீதி—

இவற்றை யோசித்துப் பார்த்தால்-, நீர் எவ்வளவு கொடிய கொடுங்கோலர் என்பதையும் இவற்றை எப்படி அடிமைப்படுத்தினீர் என்பதையும் யோசித்துப் பார்த்தால்-. இன்னலுறுவோர் இன்னல் இழைப்போர் ஆகியோர் நிறைந்த எத்தகைய உலகை நாம் உண்டாக்கியிருக்கிறோம் என்பதையே யோசித்துப் பார்த்தால்....இத்தகைய வேதனைகளே என் விடையைப் பலாத்காரமாக வெளிப்படுத்துகின்றன. நீர் என்னுடன் செய்யக்கூடியது தான் என்ன?

நீதிபதி: உம் பிதாவின் மரணத்திற்கு நீர்தானே குற்றவாளி?

பியாட்ரைஸ்: இறைவன் உயரிய நீதிபதி. நான் கஷ்டப்பட்ட செயலை அவர் அனுமதித்தார். கண் கூடாகக் கண்டார், அதற்காக இறைவனையும் தண்டித்து விடுவதா? அச்செயலை நாவினாலும் கூறமுடியாதபடி செய்தார். அதிலிருந்து, நீங்கள் கூறும் பிதாவின் மரணத்தை விட்டுவிட்டு, அடைக்கலம் பழி முடிவு அனைத்தையும் பறித்தார். நான் செய்தேனோ இல்லையோ, மனிதர்கள் அதைக் குற்றமென்று கூறுகிறார்களோ இல்லையோ, நீர் கூறுவதைக் கூறிக் கொண்டே இரும். இனியும் நான் மறுத்துக் கொண்டே இருக்கமாட்டேன். இப்படியே இருக்க வேண்டுமென்று நீர் விரும்பினால் அப்படியே இருக்கட்டும். எல்லாம் முடிவடைந்து போகட்டும். உமது அபிலாஷையை நிறைவேற்றுங்கள். எவ்விதக் கொடுமையைப் பிரயோகித்தாலும், மேற்கொண்டு ஒரு வார்த்தைகூட என்னிடமிருந்து வெளிவராது.

நீதிபதி: அவள் ஒப்புக்கொள்ளவில்லை; என்றாலும் தண்டிக்கப்படுகிறாள். அதுவே போதும்.

அவர்களது முடிவான தீர்ப்புக் கூறப்படும் வரையில், யாரும் அவர்களுடன் பேசக்கூடாது. வாலிபப் பிரபுவே! நீர் இங்கு தயங்கி நிற்கவேண்டாம்!

பியாட்ரைஸ்: ஓ! அவனைக் கிழித்து சின்னு பின்னப் படுத்துங்கள்?

நீதிபதி: காவலாளிகளே! உங்கள் கடமையை நடத்துங்கள்.

பெர்னர்டோ: (பியாட்ரைஸை அணைந்து) ஓ! நீங்கள் உடலிலிருந்து உயிரைப் பிரித்து விடுவீர்களோ?

அதிகாரி: அது சிரச்சேதம் செய்பவனின் வேலை.

[லூக்ரிஷியா, பியாட்ரைஸ், கியாகோமா தவிர ஏனையோர் அகலுகின்றனர்]

கியாகோமா: நான் ஒப்புக்கொண்டு விட்டேனு? எல்லாம் இப்பொழுது முடிந்து விட்டதா? நம்பிக்கையில்லையா? புகலிடமில்லையா! சக்தியற்ற அயோக்யத்தனமான நாவே! உன்னை முதலிலேயே வெட்டி நாய்க்கு எறிந்து விட்டிருக்கலாகாதா? முதலில் பிதாவைக் கொன்றுவிட்டுப் பிறகு என் சகோதரியையும் காட்டிக் கொடுக்கவேண்டுமா! ஐயோ! கடவுளே! தாங்கள் பழிபாவமற்றவர்! தூய்மை கொண்டவர்! குற்றம் நிறைந்த இருண்ட இவ்வுலகிலே நான் கொள்ளத்தக்கவர் தாங்கள் ஒருவரே! என் மனைவி! என் குழந்தைகள்! அநாதைகளாக உதவியின்றிக் கிடக்கவா? நானுமா! பிதாவே! கடவுளே........... இதைப் போல் முழு இருதயமும் உடைந்து கதறும் மன்னிக்கக்கூடாத பாவிகளைத் தாங்கள் மன்னிக்கலாகாதா?

லூக்ரிஷியா: என் குழந்தாய்! நாம் எத்தகைய பயங்கர முடிவை அடைந்துவிட்டோம்! நான் ஏன் கீழ்ப்படிந்தேன்? அக்கொடுமைகளை நான் ஏன் சகித்துக் கொள்ளவில்லை? என் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. உணர்ச்சியற்ற, வேகமான, தவிர்க்கமுடியாத அக்கண்ணீரிலேயே நான் கரைந்து போயிருக்கலாகாதா!

பியாட்ரைஸ்: செய்வதற்கு பலஹீனமாகஇருந்ததை ஒருமுறை செய்தபிறகு, அழுவது இன்னமும் பலஹீனமாகும். உற்சாகம் கொள்! கடவுள் என் தவறை உணர்ந்தார். அவரது கோபத்தின் தேவதையாக, நம் துரிதமான காரியத்தை மாற்றிக் கொண்டு விட்டார் போலிருக்கிறது. நாம் இதற்காக மாளப் போகிறோம் என்பதை நினைக்கவே வேண்டாம். சோதரா! என் அருகில் உட்கார். உனது திடமான கரத்தை என்னிடம் கொடு. மனுஷ்ய இருதயம் இருக்கிறது உனக்கு. பொறுத்துக் கொள்! பொறுத்துக் கொள்! அன்புமிக்க அம்மா! உன் மெல்லிய தலையை என் தொடைமீது வைத்துக்கொள். சற்றே உறங்க முயற்சியுங்கள். உங்கள் கண்கள் வெளுப்படைந்து களைப்படைந்து குழிந்து காணப் படுகின்றன. வாருங்கள்! நான் ஏதேனும் மெல்லிய துக்க கீதத்தை பாடுகிறேன். உற்சாகத்துடனோ வருத்தத்துடனோ அதைப் பாடமாட்டேன். வாழ்வதை மறக்கும்வரை நமது கிராமிய வாயாடிகள் பாடிச் சுழல்வதைப் போல் ஏதேனும் பாடப்பட்டிராத பழமையான பாடலைப் பாடுகிறேன். பழங்காலத்து ஜீவனற்ற கீதங்களைப் பாடுகிறேன். படுத்துக் கொள்ளுங்கள்! அதுபோதும். அந்த வார்த்தைகளை நான்

மறந்துவிட்டேனே! நம்பிக்கைகள்! அவை எப்படி யிருக்கும் என்று எதிர்பார்த்தேனே அதைவிட சோக மாக இருக்கின்றன.

பாட்டு

போலிநண்ப! நீ புகல்வேன் கேளாய்
என்றன் ஆருயிர் உறக்கமெய் தியபின்
நீஅழு வாயோ! நீநகை புரிவையோ!
காஷ்ட மீதோளிர் களிமண் போலக்
குளிர்ந்த என்சவம் குவலயந் தன்னிலுன்
புன்னகை தனக்கும் பொழிகண் ணீர்க்கும்
ஒரு சிறு கவலேயும் உறுதல் இல்லை
ஆ! ஆ! ஈதென் அரும்பெரு மூச்சு
அன்ப! உன் நகையினில் அடங்கிடும் உலகம்
உன்கண் ணீரில் உதித்திடும் நஞ்சே
இன்ப உறக்கமே எய்திடு மரணமாம்
உறக்க மின்றி நீ உறவிரும் பினுநான்
உறங்கும் படியுனைச் செய்குவன் திண்ணம்
அப்புறம் விழிப்பதோ அகிலத் தில்லை
விளங்கிடும் உலகே விடைதரு வாயே
அம்மணி ஓசை அறைகுவ தென்னெனின்
வன்மையும் மென்மையும் மாறி மாறித்
தோன்றும் இதயத் துடனே யுன்னைப்
பிரிந்திட வேண்டு மெனவே பேசும்

அங்கம் — 5 காட்சி — 4

[சிறைக்கூடம்: காமில்லோவும் பெர்னர்டோவும் பிர வேசிக்கின்றனர்.]

காமில்லோ: போப்பாண்டவர் விடாப்பிடியாக இருக்கிறார். அவரை அசைக்கவோ அல்லது எண்

ணங்களை மாற்றவோ முடியவில்லை. கொடுமைகளை யும் கொலைகளையும் செய்யும் இயந்திரம், அக்கொடு மைகளிலிருந்து தனக்கு விதிவிலக்குக் கொண்டிருப்ப தைப் போன்று, அவர் அமைதியாகவும் உன்னிப்புட னும் காணப்பட்டார். ஒரு சடங்கு, ஒரு சட்டம், ஒரு பழக்கவழக்கம் கொண்ட பளிங்குருவத்தைப் போன்று அமர்ந்திருந்தார். மனிதனுகவே புலப்பட வில்லை. தன் யந்திர சாதனத்தின் தந்திரங்களை நோக்கி முகம் சுளிப்பதைப் போன்று, குற்றவாளி களின் வக்கீல்கள் கூறிய தற்காப்பை நோக்கி முகம் சுளித்தார். அத் தற்காப்பு வாதங்களைக் கிழித்து பின் னுக்கு எறிந்துவிட்டு, 'உறக்கத்தில் கொல்லப்பட்ட பிதாவின் பாதுகாப்பு வக்கிலாக உங்களில் எவ ருண்டு?" என்று கடினமான முரட்டுக்குரலில் முணுமுணுத்தார். இன்னெருவரை நோக்கி, 'உன் உத்தியோக கிரியை நீ செய்ய வேண்டியது தான். அது தான் சரி' என்ருர். பிறகு என் பக்கம் திரும்பி, 'அவர்கள் மாள வேண்டியதே' என்ற மூன்று சொற்களையும் கடூரமாகக் கூறினுர்.

பெர்னுர்டோ: அப்படியும் நீர் அவரை விட வில்லையா?

காமில்லோ: நான் மேலும் வாதாடினேன். உன் பிதாவின் இயற்கைக்குப் புறம்பான மரணத்தை தூண்டிய பாவமயமான கெடுதிகளைக் குறித்தும் வாதாடிப் பார்த்தேன். அவர் கூறிய பதில் இதுதான்.

"நேற்றுமாலை போலோ சாந்தா கிரோஸி தன் தாயைக் கொன்றுவிட்டு எங்கோ ஓடிவிட்டான். நேர்மையான காரணத்திற்காக செய்யப்பட்டாலும் பெற்றேரைக் கொலை செய்வது அதிகரித்து

வருகிறது. விரைவிலேயே நாம் கலங்கும்படியாக நேரிட்டு விடும் போலிருக்கிறது. அதிகாரம் ஆட்சி ஆகியவைகளே பெருத்த குற்றங்களாகி விட்டன. நீ என் மைத்துனன். மன்னிப்புக் கேட்க வந்துவிட்டாய். ஒரு நிமிஷம் பொறு. என் தீர்ப்பு இதோ இருக்கிறது. அதை முற்றிலும் நிறைவேற்றும்வரை திரும்பவும் என்னிடம் வராதே"

பெர்னர்டோ: கடவுளே! ஏதோ சந்தோஷ செய்தியைக் கூற சோகமிக்க முன்னுரையல்லவா இவ்வளவும் என்று நம்பினேன். ஓ! இவை கொடிய செயலுக்கு இழுத்துச் செல்லும் பார்வைகளாகவும் சொற்களாகவு மல்லவா புலப்படுகின்றன. அவற்றை ஒரு முறை முன்பே நான் நினைத்தேன். இப்பொழுது அவற்றை மறந்துவிட்டேன். நான் போப்பாண்டவரை நாடிச் செல்கிறேன். அவரது பாதங்களையும் ஆடைகளையும் என் கண்ணீரால் நனைக்கிறேன். அப்படிச் செய்யட்டுமா? நீ என்ன சொல்லுகிறாய்? பிரார்த்தனைகளால் அவரை இறைஞ்சுகிறேன். படிப்படியான தர்க்கங்களால் அவர் மூளையைக் குழப்புகிறேன். கோபத்துடன் சிலுவையில் என்னை அடித்து, பணிந்துள்ள என் சிரத்தின்மீது அவர் நடந்து செல்லும் வரை இறைஞ்சுகிறேன். என் தலையிலிருந்து உதிரம் பெருக்கெடுத்து ஓடி அவர் பாததூசிகளை நனைக்கட்டும். பச்சாதாபம் கருணையை எழுப்பட்டும். அப்படித்தான் செய்யவேண்டும். நான் திரும்பி வரும் வரை காத்திருங்கள்.

[வெளியே ஓடுகிறான்]

காமில்லோ: ஐயோ, பாவம்! ஏழைச்சிறுவன்!

நடுக்கடலில் திசைதப்பிய மீகாமன் கடலை நோக்கிப் பிரார்த்தனை செய்வதைப் போலிருக்கிறது.

[லூக்ரிஷியா பியாட்ரைஸ் கியாகோமா ஆகியோர் காவலுடன் வருகின்றனர்]

பியாட்ரைஸ்: நீதியான மன்னிப்பைத் தவிர வேறு எச்செய்தியையும் தாங்கள் கொண்டு வரவில்லை என்று எதிர்பார்க்கிறேன்.

காமில்லோ: இதோ அவரது தீர்ப்பு. அவரது கட்டளை. என் பிரார்த்தனையைப் போப்பாண்டவர் கேளாததுபோல் இறைவன் அவரது பிரார்த்தனைக்கு செவி சாய்க்காதிருக்கட்டும்.

பியாட்ரைஸ்: (சினத்துடன்) கடவுளே! நான் இவ்வளவு துரிதமாக மாள்வது முடியுமா? இவ்வளவு வாலிபத்திலேயே புழுநெளியும் குளிர்ந்த அழுகிய மண்ணிலே மறைய வேண்டுமா? குறுகிய ஓரிடத்திலே ஆணியால் அறையப்படவேண்டுமா? இனிய சூர்ய வொளியை இனிக் காணமுடியாதா? ஜீவராசிகளின் உவகைமிக்க குரல்களைக் கேட்க முடியாதா? சாதாரணமான அவைகளைப்பற்றி இனி யோசிக்கவும் முடியாதா? .... என்ன இது? – நான் எங்கிருக்கிறேன்? எனக்குப் பைத்தியம் பிடிக்காதிருக்கட்டும். சுவர்க்கமே! கோழைத்தனமான எண்ணங்களை மன்னிப்பாயா? கடவுளே இல்லாதிருக்கக் கூடாதா? சுவர்க்கமே இல்லாமலிருந்திருக்கலாகாதா? பரந்த உலகிலே மண் என்பதே இல்லாமல் இருந்திருக்கக் கூடாதா? — பரந்த உலகம்! ஒளியற்ற உலகம்! மக்கள் அற்ற உலகம்! — ஆழ்ந்த உலகம்! எல்லாப் பொருள்களும் இருக்க வேண்டுமென்றால் .... என்

தகப்பனாரின் ஆவி, அவர் கண்கள், அவர் குரல், அவர் ஸ்பரிசம் அனைத்தும் என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றனவே! என் வாழ்வு அணைந்த மாதிரியேதான். அதன் ஸ்வாசமும் காற்றும் என் பிதாவே. அவர் உருவமே என்னைக் கொடுமைக்குள்ளாக்கிற்று. அவரைப்போன்ற ஒரு உருவம் நரைத்த கேசமும் முகச் சுருக்கங்களும் கொண்டு ஒரு வேளை வருமானால், என்னை நரகத்துக் கரங்களால் தழுவிக் கோரப் பார்வையை என்மீது குறி வைத்துப் பாதாளத்திற்கு இழுத்துச் சென்றுவிடும். ஏன் தெரியுமா? உலகிலே சகலமும் வல்லவராக அல்லவா இருந்தார் அவர். அவர் இறந்தார். எனக்கு அழிவு வெறுப்பு இன்னல் அனைத்தையும் அளிக்க, அவர் ஆவி சுழலமிட்டு வேலை செய்தது. யமலோகத்தின் நீதிகளை மண்ணுலகிற்குக் கற்பிக்க அவரது ஆவியைவிட வேறு யாருடைய ஆவியும் திரும்பியதில்லை. எங்களை உலகைவிட்டு ஓட்டும் அநீதி அழியட்டும்! அழியட்டும்!!

லூக்ரிஷியா; கடவுளின் கனிந்த கருணையை நம்பு. இயேசுவின் சத்தியங்களை நம்பு. இரவிற்கு முன்பு சுவர்க்கத்தி லிருப்போம்.

பியாட்ரைஸ்: எல்லாம் நடந்து விட்டது. என்ன நேர்ந்தாலும் என் இருதயம் அஞ்சாது, உங்கள் பேச்சுத் திணறுவதின் அர்த்தம்தான் எனக்கு விளங்கவில்லை. விஷயங்கள் மிகவும் கோரமானவைகளாகவும், பொய்மை நிறைந்தனவாகவும், கொடுமை மிக்கவைகளாகவும் புலப்படுகின்றனவே! இவ்வுலகிலே அநீதியை நான் அதிகமாகக் கண்டுவிட்டேன். ஆண்டவனோ மனிதனோ என் விதியை நிர்ணயித்துச் செல்லும் எச்சக்தியோ இன்னலுக்கும் இன்பத்

துக்கும் இடையே என்னை ஏறிட்டுப் பார்க்கவில்லை. வாலிபத்தின் நடுவிலே நான் உலகிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டேன். அன்பிலிருந்து அகற்றப்பட்டு விட்டேன். ஒளியிலிருந்து துரத்தப்பட்டுவிட்டேன். கடவுளை நம்பு என்று நீர் கூறுவது சரியே. நான் அவரையே நம்புகிறேன். வேறு யாரிடம் நான் நம்பிக்கை வைக்கமுடியும்? — ஆனால் என் இருதயம் என்னவோ சிலிர்க்கிறது.

[பேச்சின் பின்பகுதியில் கியாகோமா காமில்லோ வுடன் ஏதோ கூறுகிறன். காமில்லோ வெளியே செல்கிறன். கியாகோமா முன் வருகிறன்.]

கியாகோமா: அம்மா, உனக்குத் தெரியாதா? அக்கா, உனக்குத் தெரியாதா? பெர்னர்டோ இப்பொழுதும் போயிருக்கிறன் போப்பாண்டவரிடம். மன்னிப்பிற்காக மன்றாடவே சென்றிருக்கிறன்.

லூக்ரிஷியா: குழந்தாய்! ஒருவேளை மன்னிப்புக் கிடைத்து விடும். அப்பொழுது நாம் வாழ்வோம். இச் சம்பவங்களைப் பிற்காலத்தில் சோகரசக் கதைகளாகக் கூறுவோம். ஆகா! இதென்ன எண்ணம்! உஷ்ணமான உதிரத்தைப் போல் எண்ணம் என் இருதயத்தை நோக்கிப் பாய்கிறதே!

பியாட்ரைஸ்: எண்ணங்களும் இருதயங்களும் ஒரேயடியாகக் குளிர்ந்துவிடும். அந்த எண்ணத்தை மிதித்து எறி. நம்பிக்கை சாவைவிடக் கொடியது. திகைப்பைவிடக் கொடியது. நம்மை நோக்கித் தள்ளாடும் காலம் குறுகியது. மயக்கமிக்க இக்காலத்திற்குள் கஷ்டத்தையே நாம் காணமுடியும். வசந்தத்து முதல்மலரைக் காப்பாற்றும்படி பனிக்காற்றை

வேண்டுவது போலிருக்கிறது. பூகம்பத்துடன் ஒரு உறுதியான அழகிய நகரத்திற்காகப் போராடுவதைப் போலிருக்கிறது. மரணக் கொட்டாவியுடன் போரிடுவது எப்படி முடியும்? பஞ்சத்துடன் போராடலாம்! மாருதத்துடன் போராடலாம்! இடி மின்னலுடன் போராடலாம்! சாகரத்துடனும் போராடலாம்! ஆனால் மனுஷ்யனுடன் போராடுவது இயலாது. மனிதன் கொடியவன். கடின சித்தமுடையவன். வாக்கிலே நீதியும் செயலிலே அநீதியும் கொண்டவன். அம்மா! நாம் மாள்வதே சரியானது. நிரபராதியான வாழ்விற்கு வெகுமதி அதுதான். கொடுமைகளைப் போக்கிக் கொள்ளத் தக்கவழி அதுதான். கொலையாளிகள் நன்கு வாழ்கிறார்கள். கடினசித்த முள்ள மக்களாகவே வாழ்கிறார்கள். புன்முறுவலும் புளகாங்கிதமும் கொண்டு கண் கலங்கி உலகிலே செல்கிறார்கள். உறக்கத்திற்குச் செல்வதைப் போல் மரணத்தை நோக்கிச் செல்கிறார்கள். அம் மரணமோ நமக்குப் புதிய உவகையை அளிக்கவில்லை. மறைந்துள்ள மரணமே! வா! உன் நெடிய கரங்களால் என்னைத் தழுவிக்கொள்! பிரிய அன்னையைப் போல் உன் மார்புடன் அணைந்துகொள். விழிப்பே காணாத திறந்த உறக்கத்தில் என்னை ஆழ்த்திவிடு. வாழ்வோர் வாழட்டும் நாம் இணைபிரியாது வாழ்ந்ததைப் போல்.

[பெர்னார்டோ ஓடோடி வருகிறான்]

பெர்னார்டோ : ஐயோ! சகிக்கமுடியாத அகோரம்! என் இருதயம் காலியாகிவிட்டது; கண்ணீராலும் பார்வையாலும், பிரார்த்தனையில் நுழைக்கப்பட்ட நம்பிக்கையாலும்! ஆனால் பயனில்லை. எல்லாம் வீணாகிவிட்டது. மரணத்தின் தூதர்கள் நம் கதவு

களைச் சுற்றிக் காத்துக் கிடக்கிறார்கள். யாரோ ஒரு வரின் முகத்தில் ரத்தத்தைக் கண்டாற்போலிருந்தது- அது என் நினைவாக இருப்பினும் என்ன? உலகத் திலே நாம் நேசிக்கும் உதிரம் விரைவிலே அவன் நெற்றியிலே தெளிக்கும் மழையைப் போல் அதை அவன் துடைத்துக் கொள்வான். வாழ்வே! உலகமே! என்னை மூடிவிடு! இனி நான் வாழவே வேண்டாம். எந்த நிரபராதித்தன்மையைக் கண்டு களித்தேனே அது மண்ணிலே சிதறுவதைக் காணவேண்டுமா? பியாட்ரைஸ்! நீ காணும் அனைத்தும் அழகாக மாறுமே! உன்னை இந் நிலையில் நான் காண்பதா? நீ வாழ்வின் விளக்கு. இருளே!—'அக்கா' என் றழைக்கும் பொழுது இனி 'அக்கா' இல்லை என்பதை நினைக்க........அம்மா! எங்கள் அன்பின் அணிகலன் தாங்கள்! பாதுகாப்பு தாங்கள்!........தாங்கள் மாள் வதா? அன்பான பாதுகாப்பு அழிவடைவதா?

[காமில்லோவும் காவலாளிகளும் வருகின்றனர்]

அவர்கள் வந்துவிட்டார்கள். அந்த உதடுகள் சில்லிட்டுவிடுமே! வெளுப்படைந்துவிடுமே! ஒளி மங்கிவிடுமே! இப்பொழுதே அவற்றை நான் முத்த மிட்டு விடுகிறேன். மரணம் அந்த கண்ணிய குரலைத் திணரச் செய்யுமுன்பாக விடைபெற்றுக் கொண்டு விடுகிறேன். பேசுங்கள்! நீங்கள் பேசுவதை நான் கேட்கவேண்டும்.

பியாட்ரைஸ்: சகோதரனே! வருகிறேன்! எங்கள் சோகமான விதியைப் பெருந்தன்மையுடன் நினைப்பாயாக. மெல்லிய பச்சாதாபமுள்ள எண் ணங்கள் துயர மூட்டையைக் குறைக்கட்டும். திகைப்

டியிலே தவறிழைக்காதே, கண்ணீர் கலங்கினும் பொறுமை இழக்காதே. குழந்தாய்! இன்னமும் ஒரு விஷயம். நீ எங்களிடம் கொண்டுள்ள அன்பு நிரந்தரமானதாக இருக்கட்டும். வெட்கமும் குற்றமும் நிறைந்த போர்வையில் நான் போர்த்தப்பட்டு விட்டேன்; இருந்தாலும் புனிதமானவளாகவும் அப்பழுக்கற்றவளாகவும் வாழ்ந்து விட்டேன். தீயோர் என்னை நிந்திக்கலாம். மக்கள் நம் பெயர்களைப்பற்றி உன்னைச் சுட்டிக் காட்டிப் பேசலாம். அவற்றை நீ பொறுத்துக்கொள். அவர்களைப்பற்றிக் கருணையின்றி வேறு விதமாக நினையாதே. எங்கள் மரணத்திலாவது அவர்கள் உன்னை நேசிப்பார்கள் என்பது திண்ணம். நான் மாள்வதைப் போல் நீயும் மாள்வாயாக. பீதியும் கஷ்டமும் அடிமைப்படுத்தப்படட்டும். வருகிறேன்! வருகிறேன்!........

பெர்னுர்டோ: நான் அப்படிச் சொல்வதற்கில்லையே.

காமில்லோ: பியாட்ரைஸ் சீமாட்டியே!

பியாட்ரைஸ்: கார்டினல்! வீண் கவலை வேண்டாம். அம்மா! என் ஆடையை சரிவரக் கட்டு. என் தலைமயிரை ஒரு சிறுமுடிச்சாகக் கட்டு. ஓ! அதுவே போதும்! உமது கேசம் கீழிறங்குவதைப் போலிருக்கிறது. நாம் இம்மாதிரி எவ்வளவோ முறை ஒருவருக்கொருவர் தலைவாரிக்கொண்டோம். இனி அப்படிச் செய்ய முடியாது. நாங்கள் தயாராக இருக்கிறோம். நல்லது! இது நன்றாகவே இருக்கிறது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.